
நந்தவனக் கனவுகள்
பெ.நாயகி
கங்கை புத்தக நிலையம்

# நந்தவனக் கனவுகள்

பெ. நாயகி

கங்கை புத்தக நிலையம்

23 (ப.எ. 13), தீனதயாளு தெரு,
தி. நகர் :: சென்னை–600 017

முதற்பதிப்பு : மே 2002

விலை ரூ. 32.00

| | | |
|---|---|---|
| ☐ Title | : | Nandavanak Kanavugal |
| ☐ Author | : | P. Nayaki |
| ☐ Language | : | Tamil |
| ☐ Subject | : | Short Stories |
| ☐ Edition | : | First Edition, May, 2002 |
| ☐ No. of Pages | : | 160+iv = 164 |
| ☐ Published by | : | Gangai Puthaka Nilayam<br>13, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar, Chennai - 600 017. |
| ☐ Price | : | Rs. 32.00 |

*Typeset at :*
Sri Maruthy Laser Printers,
200 (173), Peters Road, Royapettah, Chennai - 600 014.

Printed at : Malar Printers 044-8224803

# முன்னுரை

எங்கோ எப்போதோ படித்தது :

பெண்கள் என் பிரதான பலிபீடம்
நான்
ஆடா அரிவாளா ஆண்டவனா மாறி மாறி வாழ்கிறேன்

என்னுள் ஆழப்பதிந்த வரிகள் இவை, எவ்வளவு உண்மை! யோசித்துப் பார்த்தால் நாமெல்லோருமே பலி இடுபவர்களாக பலி ஆகிறவர்களாக அல்லது பலி ஏற்கிறவர்களாகத் தான் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். விகிதாச்சார வித்தியாசத்தில் தான் மேல் சாவினிஸ்ட்டா பெண்டாட்டி தாசனா என்கிற பட்டய முத்திரை விழுகிறது. அந்த அளவுக்கு பெண்மை இந்த உலக உருண்டையின் மைய அச்சாக இருந்து வருகிறது.

என்னுடைய சிறுகதைகளில் இந்தக் கூறு அதிகமாகவே தென் படுவதற்கு என் சிந்தனை இந்த அச்சினைச் சுற்றியே வருவது காரணமாக இருக்கலாம். பெண்பால் பெயராக புனைப்பெயர் இருப்பது, எழுத்தின் வீச்சு கேலி நடை வேஷமோ, நவீனத்துவ நொண்டிச் சாக்கோ கொண்டு வரம்பு மீறி இழுத்துப் போய்விடாது இருக்க ஒரு லட்சுமண ரேகை!

இந்தச் சிறுகதைகளைப் பிரசுரித்து எனக்கு ஊக்கமளித்த தினத்தந்தி, தினமணி கதிர், தேவி, விகடன், கல்கி, சரவணா ஸ்டோர்ஸ் வார இதழ், குங்குமம், சைவ நெறி ஆகிய பத்திரிக்கைகளுக்கு என் நன்றி.

பத்திரிக்கை பிரசுரம் கதைப் பெண்ணுக்கு ருதுவாதல் என்றால், புத்தக ரூபமாதல் திருமணத்துக்கு சமானம், என் படைப்புகளுக்கு முழுமை தந்து வரும் உயர்திரு. வானதி திருநாவுக்கரசு ஐயா அவர்களுக்கும், உயர்திரு. ராமநாதன் அவர்களுக்கும் என் மணமார்ந்த நன்றி.

நெருங்கிய உறவும், நட்பும், வாசக விமரிசனங்களும் தான் மூச்சுக் காற்றுக்கு பிராணவாயு போல, காற்றுக்கு சரியான வகையில் நன்றி சொல்வதென்றால் அது மாசுபடாது இருக்க நம்மால் ஆன கட்டுப் பாடுகளை மேற்கொள்ளவது தான். கட்டுப்பாடு தளரேன் என்கிற உறுதியை இவ்வாயிலாக மொழிகிறேன்.

நன்றி.

10, வயல்கரை வீதி
காரைக்கால் 609 602

பெ. நாயகி
13.05.02

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | அம்மா மனசு | 1 |
| 2. | சரசுவின் வீடு | 12 |
| 3. | பயணி | 20 |
| 4. | வேஷம் | 26 |
| 5. | கூலிங்கிளாஸ் போட்ட வீடு | 33 |
| 6. | மன்னிப்பு | 41 |
| 7. | கொக்கொக்க | 48 |
| 8. | அடைப்பான்கள் | 54 |
| 9. | அப்பாக்கள் | 61 |
| 10. | அவள் | 67 |
| 11. | கழுதை மருத்துவம் | 74 |
| 12. | குசேல மாளிகை | 82 |
| 13. | மனைவி | 89 |
| 14. | மன்மதமாசம் | 98 |
| 15. | நான்காவது பெயர் | 106 |
| 16. | நந்தவனக் கனவுகள் | 111 |
| 17. | நெய்ப்பந்தம் பிடித்தவன் | 117 |
| 18. | ஒரு தற்கொலை முயற்சியின் போஸ்ட்மார்ட்டம் | 126 |
| 19. | ஒற்றைச் சிலம்பு | 137 |
| 20. | தொடரும் | 144 |
| 21. | யுவராஜா பட்டாபிஷேகம் | 153 |

# 1. அம்மா மனசு

அதிகாலைக் காற்று ஈரப்பதத்துடன் திறந்திருந்த ஜன்னல் வழியே வீட்டினுள் வந்தது. கிட்டத்தட்ட நகரம் மொத்தமும் உறங்கிக் கொண்டிருக்க நீங்கள் மூன்று பேரும் என்ன செய்கிறீர்கள் என்று கேட்பதாகத் தோன்றியது.

''ஏய் குட்டி! நீ என்ன பண்றே இங்கே? டெஸ்ட் இருக்குன்னு சொன்னியே, போய்ப்படி'' என்று விரட்டினாள் பாரதி அக்கா. என்னை அவள் குட்டி என்றுதான் கூப்பிடுவாள். அவளுக்கு ஐந்து வயது குறைந்தவள் நான். சிறு வயதிலிருந்தே ஒருவித அம்மாத்தனத்தோடு என்னை குட்டி குட்டி என்று அழைத்து பாசம் பொழிந்தவள் பொழிபவள் அவள். அம்மா மீதைவிட அவள் மீதுதான் எனக்கு அன்பு, பாசம், உரிமை எல்லாமே அதிகம்.

''படிச்சிட்டேங்க்கா. நானும் கொஞ்சம் ஹெல்ப் பண்றேனே'' என்றபடி குவிந்திருந்த காய்கறிகளிலிருந்து பட்டாணியை அருகே இழுத்து உரிக்க ஆரம்பித்தேன்.

''நோ. இந்த வேலை எல்லாம் நீ செய்யக் கூடாதுன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்? உன்னை எப்போ வேலை வாங்கணும்னு எனக்குத் தெரியும். இப்போ போய்ப்படி அல்லது படுத்துத் தூங்கு. எங்களைத் தொந்தரவு செய்யாதே'' என்றவள், ''அம்மா! என்னாச்சு உனக்கு? புத்தியை எங்கே வச்சிட்டு வேலை பார்க்கற? பீன்ஸை கூட்டுக்கு நறுக்கறியா பொரியலுக்கு நறுக்கறியா? மாலதி அக்கா வீட்டில் திட்டப்போறாங்க'' என்று எரிச்சலுடன் கத்தினாள்.

நான் அங்கே நறுக்கியும் நறுக்காமலுமாய் விதவிதமான வடிவங்களில் பாக்கிங் செய்யப்பட்டுக் கொண்டிருந்த காய்கனி களையும், அக்காவின் அதட்டிய குரலுக்கு திகைப்புடன் நிமிர்ந்த அம்மாவின் முகத்தில் தெரிந்த அடிபட்ட தன்மையையும் பார்த்தபடி நகர்ந்து என் படுக்கைக்கு வந்தேன்.

உறக்கம் வரவில்லை. என் மனதின் மரியாதை உயரங்களில் இருந்து அக்கா இறங்கி வருகிறாளோ என்கிற பயம் வந்தது.

அம்மாவின் முகம் இரண்டு நாட்களாய் இறுகியே இருக்கிறது.

யார் எதைப் பேசினாலும் அதில் பிடிப்பு இல்லாதபடி பதில் தந்து கொண்டிருக்கிறாள். செயல்களில் முரண்பாடுகள் நிறையத் தெரிகின்றன. அவ்வப்போது வெறித்தபடி ஸ்தம்பிக்கிறாள். 'கூடவே கூடாது, அந்தப் பாவி மனுஷன் எக்காரணம் கொண்டும் இந்த வீட்டுக்குள் திரும்பவும் வரக்கூடாது' என்று மந்திர உச்சாடனம் போல் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

அவளுடைய கோபத்துக்கும் பிடிவாதத்துக்கும் கூடப் பொருள் புரிந்தது எனக்கு. புரியாததெல்லாம் அதற்கு நேர் மாறான அக்காவின் வாதங்கள் தாம்.

''சரிம்மா! ஏதோ தப்பு பண்ணிட்டார். ஓடிப்போயிட்டார். அதனால் அவர் உனக்குப் புருஷன் இல்லைன்னு ஆயிடுமா, எங்களுக்குத்தான் அப்பா இல்லைன்னு ஆயிடுமா? அவரை வேண்டுமட்டும் உன் ஆத்திரம், ஆதங்கம், கோபம் எல்லாம் தீரும் மட்டும் திட்டித் தீர். நேருக்கு நேர் நிறுத்தி சண்டையிடு. அதற் கெல்லாம் உனக்கு முழு உரிமை இருக்கு. அவரை இந்த வீட்டுக் குள் அனுமதிக்கக்கூடாத அளவு நீ போகணுமான்னு யோசிச்சுப் பாரு...''

பாரதி அக்காவின் இந்த வார்த்தைகள் எனக்குத் தலை சுற்றலை ஏற்படுத்தாத குறை.

''மனுஷனா அவர்? குடும்பத்தில் பிரச்சினைன்னு வர்ற காலத்தில் சுமையைத் தோளில் ஏற்று சவாலை எதிர்கொள்ளத்

துணிச்சல் இல்லாதவரெல்லாம் ஆண்மகன்தானா? எப்படிம்மா அந்த ஆள் கூட இத்தனை வருஷம் குடும்பம் நடத்தின? இப்படிப் பட்டவரை எனக்கு அப்பான்னு சொல்லிக்கவே அசிங்கமா இருக்கு...'' என்றெல்லாம் பொரிந்து தள்ளும் பாரதி அக்காவைத் தான் பார்த்திருக்கிறேன். அப்பாவைப் பற்றிய பேச்சு வந்தாலே அவள் முகம் சிவந்து படபடப்பு அடக்க முடியாமல் வார்த்தை களாய்க் கொட்டித் தீர்ப்பதுதான் வழக்கம். அவற்றில் உள்ள முழு நியாயத்தையும் நான் உணர்ந்திருக்கிறேன்.

குடும்பத்தின் மூத்த மகள் தன்னுடைய படிப்பு, திருமண வாழ்க்கை என்கிற இரண்டு பிடிப்புகளையும் இழந்தால் வருகின்ற விரக்தியும் கோபமுமே நியாயம் என்கிறபோது அதற்கான காரணம் அவளுடைய தந்தைதான் என்றால் அவரை அவள் மதிக்கவோ, மன்னிக்கவோ எள்ளளவு அவசியமும் இருக்கவே வாய்ப்பில்லையே.

இரண்டு வருடங்கள் முந்தைய காட்சிகள் அவை.

அக்கா பி.எஸ்சி., இரண்டாம் வருடத்திலும் நான் ஒன்பதாம் வகுப்பிலும் இருந்த நாட்கள் அவை. நான் நன்றாகப் படிப்பவள் என்றால் பாரதி அக்கா மிக மிக நன்றாகப் படிப்பவள். பள்ளியில் எந்தத் தேர்விலும் முதல் மதிப்பெண் தவிர வேறு பார்த்திராதவள். அவளுடைய துரதிருஷ்டம் ப்ளஸ் டூ பரீட்சையின் போது மலேரியா ரூபத்தில் தாக்க காய்ச்சலின் சோர்வோடு பரீட்சை எழுத வேண்டியவளானாள். மதிப்பெண் குறைந்து போக அவளுடைய டாக்டர் படிப்புக் கனவு கலைந்து போனது. பி.எஸ்சி., சேர்ந்தாள். குடும்பம் வசதியாக இல்லை. அப்பாவின் நிரந்தரமற்ற வரும்படி வாய்க்கும், வயிற்றுக்கும் மட்டுமே சரியாக இருந்தது. அக்கா வெறியாகப் படித்தாள். படிக்கும் போதே வெளியில் ஆராய்ச்சி மாணவர்களுக்கான சர்வே முதலான சிறு வேலைகள் செய்து கொடுத்து கொஞ்சம் காசு சம்பாதித்தாள். எங்கள் இருவருடைய படிப்பு மட்டுமே குடும்பத்தைத் தூக்கி நிறுத்தப் போகிறது என்பதை ஜபம் மாதிரி

சொல்லிச் சொல்லி சுமாராகப் படித்துக் கொண்டிருந்த என்னை நன்றாகப் படிக்க வைத்தாள்.

அப்பா வெறும் வெட்டிப் பேச்சு ஆசாமி. நிரந்தர வேலை கிடையாது. சில சமயம் வீடு புரோக்கர். சில சமயம் சினிமா கம்பெனி ரெப்ரஸன்டேடிவ், சிலசமயம் பத்திரிகை துணை ஏஜென்ட், சில சமயம் பால் வியாபாரி என்று ஏதாவது செய்பவர். தன்னைத் தகுதிக்கு மீறி பெரிய ஆளாகக் கற்பனை செய்து கொண்டு அந்த சுகத்திலேயே நாட்களை ஓட்டியவர்.

அவரை பாதிக்கு மேல் கெடுத்தது அம்மாதான் என்பேன். இப்படிப்பட்ட வெட்டி மனுஷனைப் பெரிய ராஜாவாக வரித்துக் கொண்டு அவருக்கு சேவகம் செய்தவள் அவள். 'அவங்களுக்கு ஸ்ட்ராங்கா ஃபில்டர்ல இறங்கற முதல் டிகாஷன் காபிதான் பிடிக்கும்' என்று அவர் சம்பாதிப்பதில் பாதியை அவருடைய காபிக்காகவே எந்தவிதக் குற்ற உணர்வும் இன்றி அழித்தவள் அவள். அவருக்காகவே முந்தின இரவுகளில் புளி போட்டு விளக்கப்பட்ட பளபளப்புடன் தினம் காலையில் அந்த காபி பில்டர் அடுக்களை மேசையில் தவம் இருக்கும். எனக்கு அதைத் தூக்கி எறியத் தோன்றும். அப்பா ஓடிப்போனதும் மறுநாள் அம்மா ஆசையுடன் அதைத் தடவிப் பார்த்து கண்ணீர் வடித்த போது பாரதி அக்கா பிடுங்கி விசிறி அடித்தாள். 'இனி இந்த வீட்டில் ஃபில்டர் காபியே கூடாது. வேணும்னா இன்ஸ்டன்ட் காஃபி குடிங்க' என்று சட்டம் போட்டாள். காரணம் புரியாத சந்தோஷம் என்னுள் சுரந்தது.

இரண்டு பெண்களை வைத்திருக்கிறோமே அவர்களைக் கரையேற்ற என்ன செய்யப் போகிறோம் என்கிற சிந்தனையே இன்றி நாள் கடத்திய ஆதர்ச தம்பதியர் அம்மாவும் அப்பாவும்.

திடீரென்று ஒரு நாள் அப்பா அக்காவைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள் என்றார். 'இப்போது என்ன அவசரம்? என் படிப்பு முடியட்டும். வேலை ஒன்று தேடிக் கொள்கிறேன். வீடு கொஞ்சம் நிமிரட்டும் அப்புறம் பார்க்கலாம்

கல்யாணம் காட்சி எல்லாம்' என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். அப்பா கேட்கவில்லை. பெண் மேற்கொண்டு படிக்க வேண்டாம் என்று பிள்ளை வீட்டார் சொல்லி விட்டார்கள் என்று சொல்லி அக்காவின் பிடிவாதங்களை மீறி அவள் படிப்பையும் நிறுத்தினார். அவர்கள் கேட்ட வரதட்சணையும் நகைப் பட்டியலும் எங்கள் குடும்பத்தின் கனவு நிலைத் தகுதிக்கே மீறியவை. அப்பா என்ன செய்யப் போகிறார் என்கிற கேள்வி எல்லோர் மனத்திலும் பயத்துடன் தொக்கி நின்றது.

அவரோ வழக்கமான சவடால்களுடன் வலம் வந்தார். 'அவரிடம் கேட்டிருக்கிறேன்; அவர் பாதி தருவார். இவரிடம் கேட்டிருக்கிறேன்; இவர் பாதி தருவார்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

திருமணத்திற்கு முதல் நாள் இரவு பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டார் எல்லோரும் மண்டபத்தில் கூடியிருக்க, 'நான் நம்பியவர்கள் கை கழுவி விட்டார்கள். என்ன சொல்வ தென்று தெரியவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு ஓடிப்போனார்.

அவமானம், கண்டனம், அறிவுரை என்று மும்முனைத் தாக்குதல்.

சே! ஒவ்வொரு நிமிடமும் இருளாய் மிரட்டிய நரகமான கணங்கள் அவை.

இப்போது நினைக்கும் போது கூட உடம்பைத் தூக்கிப் போட வைக்கும் கொடூர விநாடிகளின் தொகுப்பு.

அம்மாவையும் என்னையும் அக்காதான் மீட்டாள்.

அடுத்த பத்து நாட்களில் எங்கள் சரியான பொருளாதார நிலை தெளிவாகத் தெரிந்தது.

முதல் வேலையாக அக்கா அந்த இடத்தைக் காலி செய்து இப்போது இருக்கும் இடத்துக்கு மாறுதல் செய்தாள். என்னிடம்

எக்காரணம் கொண்டும் படிப்பில் இருந்து கவனம் சிதற விடக்கூடாது என்று உறுதி வாங்கினாள்.

அடுத்து குடும்ப வருமானத்துக்கு என்ன செய்யப் போகிறாள் என்கிற கேள்விக்கு பதிலாக எழுந்ததுதான் அவளுடைய விஸ்வரூபம்.

நாளுக்கு மூன்று வேளை டியூஷன் எடுத்தாள். வேலை தேடி அலைந்தாள். பி.எஸ்சி., இன்கம்ப்ளீட்டுக்கு என்ன வேலை கிடைக்கும்? அம்மாவுக்கு நன்றாக சமைக்கத் தெரியும். மற்றபடி உலகம் அறியாதவள் அவள். அக்கா தன் படிப்பு தொடர்வதற்கும் வழிசெய்து கொண்டாள். அஞ்சல் வழிக் கல்வியில் சேர்ந்தாள். கம்ப்யூட்டர் படிப்புக்கு அதிகப்படி பணம் தேவைப்பட்டதால் ஒத்தி வைத்தாள். மேற்கொண்டு பண வரவுக்கு என்ன செய்வது என்று சிந்தித்த வண்ணமே இருந்ததில் புதிய யோசனை ஒன்று கண்டாள்.

எங்கள் வீட்டைச் சுற்றியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பு களில் ஏறி இறங்கி ஒரு சர்வே செய்தாள். ஆணும் பெண்ணுமாய் வேலைக்குப் போகும் வீடுகளில் இருக்கும் பொதுவான பிரச்சினை ஒன்றைக் கண்டுபிடித்தாள். ஓட்டலில் சாப்பிடப் பிடிக்காதவர்கள் வீட்டில் வேறு பெரியவர் துணை இல்லாதவர்கள் சமையலுக்கு ஆள் வைக்க விரும்பாதவர்கள் இந்த மூன்று இலக்கணங் களுக்கும் உட்பட்டு வந்த வீடுகளைத் தனித்தெடுத்தாள்.

காலை அலுவலகம் செல்லும் முன் சமையல் செய்வதில் பெண்களுக்கு சலிப்பையும் களைப்பையும் ஏற்படுத்தும் விஷயம் காய்கறி நறுக்குவதுதான் என்பதை அவர்களுக்கு உணர்த்தினாள். சமையலுக்குத் தேவையான எல்லா காய்கறிகளும் நறுக்கிய நிலையில் தயாராக அவர்கள் கையில் கிடைத்தால் அடுப்பில் ஏற்றி இறக்குவது என்பது அதிகபட்சமாக ஒரு மணி நேர வேலையே என்று ஒப்புக் கொண்டவர்களில் யாருக்கும் காலை நேரத்தில் காய்கறி நறுக்கித்தர வேலையாள் கிடைக்கவில்லை. அல்லது முந்தைய நாளே காய்கறிகளை நறுக்கி ஃப்ரிட்ஜில் வைத்து மறுநாள் எடுத்து சமைக்க விருப்பமில்லை.

அக்கா அவர்களுக்கு ஓர் ஐடியா தந்தாள். அன்றாட சமையல் ஐட்டங்கள் குறித்து முன்தினமே அவர்கள் சொல்லி விட்டால் அவர்களுக்குத் தேவையான காய்கறிகள் தேவையான அளவில் நறுக்கி தயாராக அவர்களுக்கு சப்ளை செய்ய நான் தயார் என்று அறிவித்தாள். அவர்களுக்கு அதனால் கிடைக்கும் காலை நேர கூடுதல் ஓய்வு குறித்து விளக்கினாள்.

மிகத் தயக்கமாக ஐந்து வீடுகளில் மட்டும் சோதனை முயற்சியாக இதற்குச் சம்மதித்து வந்தனர்.

அம்மாவும் அக்காவும் அதிகாலையில் வெகு சீக்கிரமே எழ ஆரம்பித்தனர்.

அந்த வீட்டுக்கு கத்தரிக்காய் - முருங்கைக்காய் சாம்பார், கேரட் பொரியல், சௌசௌ கூட்டு, இந்த வீட்டுக்கு அவரைக்காய் புளிக்குழம்பு, அவியல் என்கிற பட்டியல்களுக்கு ஏற்ப அழகாய்க் காய்கறிகளை நறுக்கி பிளாஸ்டிக் பைகளில் போட்டு ஆறு மணிக்கு ஒவ்வொரு வீட்டிலும் கதவு தட்டி பால் போடுவது போல் கொடுத்து வரத் தொடங்கினர்.

மளமளவென்று இந்த வகை சர்வீஸுக்கு டிமான்ட் கூடியது. ஓரிரு மாதங்களிலேயே வீடுகளின் எண்ணிக்கை இருப தைத் தொட்டது. கூடவே அம்மா தன் கைப்பக்குவ வேலைகளான வடாம் மற்றும் ஊறுகாய்களில் திறமை காட்டத் தொடங்க வீட்டின் பொருளாதார நிலை கொஞ்சம் மேம்படத் தொடங்கியது.

அக்கா அவசரப்பட்டு அகலக்கால் வைக்காமல் தன் பெயரை எல்லோர் மனங்களிலும் பதிப்பதில் அக்கறை காட்டி னாள். நேர்மை, தூய்மை, உண்மை என்கிற மூன்றைத் தாரக மந்திர மாக்கி வேலையில் ஈடுபாடு காட்டினாள். படிப்புக்கும் கம்ப்யூட்டர் பயிற்சிக்கும் நேரம் ஒதுக்கிக் கொண்டாள். இந்த ஆண்டு இறுதிக்குள் சிறிய அளவிலாவது 'ஹோம் நீட் ஃபுட் ப்ராடக்ட்ஸ்' தொழிலில் ஈடுபடும் முடிவில் அதற்குத் தேவையான விவரங்களின் சேகரிப்பில் இருந்தாள்.

அவளை நினைத்தால் பிரமிப்பாக இருக்கும் எனக்கு.

அப்பா ஓடிப்போன புதிதில் நான் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத பாதுகாப்பான வாழ்க்கை இப்போது அமைந்திருப்பது அவளுடைய தைரியத்தினால் மட்டுமே என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லையே.

நாட்கள் அமைதியாக அழகாக ஓடிக் கொண்டிருந்தன. காணாமல் போயிருந்த சொந்தங்கள் கூட தேடி வந்து குசலம் விசாரிக்கத் தொடங்கியிருந்தன. அப்பாவைக் கிட்டத்தட்ட மறந்து போயிருந்த பொழுதில் மூன்று நாட்களுக்கு முன்பு வந்துவிட்டார்.

அவர் வந்தபோது நான் பள்ளிக்குப் போயிருந்தேன். அக்காவும் வீட்டில் இல்லை. அம்மாவைப் பார்த்து அழுதாராம். தன் தவறுக்கும் இயலாமைக்கும் மன்னிப்பு கேட்டாராம். மீண்டும் பிள்ளைகள் முகத்தில் விழிப்பதற்கே தகுதியற்றவராகத் தன்னைச் சொல்லிக் கொண்டாராம். மூவருமாகக் கலந்து ஆலோசித்து சம்மதம் தெரிவித்தால் மட்டுமே மீண்டும் இங்கே வந்து சேர்ந்து கொள்கிறாராம். இனிமேல் பொறுப்புள்ள தகப்பனாக இல்லா விட்டாலும் துணையாகவாவது இருப்பாராம். பாரதி அக்கா என்ன வேலை கொடுத்தாலும் செய்வாராம். அவர் மீண்டும் இந்த வீட்டுக்கு வரலாம் என்றால் தொடர்பு கொண்டு சொல்வதற்கு ஒரு தொலைபேசி எண் கொடுத்துவிட்டுச் சென்றாராம்.

இரவு அம்மா ஓவென்று அழுதபடி அனைத்தும் சொன்னாள். நான்கூட பாரதி அக்கா கொதித்துக் குமுறி வெடிக்கப் போகிறாள் என்றுதான் எதிர்பார்த்தேன். அனைத்தையும் கேட்டு விட்டு "சரி இதுபற்றி நாளை பேசிக்கலாம்" என்று எழுந்து தூங்கப் போய்விட்டாள்.

மறுநாள், "உனக்கு என்னம்மா தோணுது? அவர் இனிமேல் திருந்தி நல்லபடியா இருப்பார்னு உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?" என்று கேட்டாள் அம்மாவிடம்.

''அவர் எக்கேடோ கெட்டு ஒழியட்டும். உனக்கு அவர் செஞ்ச அநீதிக்கு அவருக்கு மன்னிப்பே கிடையாது. திரும்பவும் அவர் இந்த வீட்டுக்கு வரக்கூடாது'' என்றாள் அம்மா ஆவேசமாக.

அக்கா வேகமாகத் தலையசைத்தாள்.

''இல்லைம்மா, உன் கோபம் தவறு. ஆம்பளை திருந்தி மன்னிப்பு கேட்டு வரும்போது அவருக்கு ஒரு சந்தர்ப்பமாவது கொடுக்க வேண்டியது நம் கடமை. அவர் யாரோ இல்லையே. உன் புருஷன். எங்க தகப்பன். அவர் வரட்டும். இந்த வீடு இனியாவது சுகப்படட்டும்...''

''முடியாதுடி. அவர் செஞ்ச பாவத்துக்கு தண்டனையே கிடைக்காமல் போவது உனக்கு செய்யப்படற அநீதியாயிடும்.''

''அம்மா! அவரை ஒண்ணும் பண்ணாம ஒத்துக்கடறதுதான் அவருக்கு நாம் கொடுக்கும் பெரிய தண்டனையே. மன்னிப்பை விடக் கொடுமையான ஒரு தண்டனை இருக்குன்னா நினைக்கற?''

இந்த அளவில் முடியவில்லை இவ்வுரையாடல். இதே ரீதியில் இரண்டு நாட்களாய்த் தொடர்ந்தது, தொடர்கிறது. அம்மா மறுப்பதும் அக்கா அப்பாவை ஏற்பது குறித்து அவளைச் சம்மதிக்க வைக்க முயல்வதுமான பேச்சுகள் எனக்கே அலுப்பு வரும்வரை நடைபெற்றன; முடிவாக அக்கா இன்று மாலை வீட்டுக்குள் நுழைந்த கையோடு ''அப்பாவுக்கு ஃபோன் பண்ணி சொல்லிட்டேன். நாளைக் காலை இங்கே வர்றார்'' என்றாள் உறுதியான குரலில்.

அம்மாவின் முகத்தில் வெளிப்பட்ட உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எனக்கும் கூட அம்மா சார்பு சிந்தனைகள்தான் இருந்தன. அக்காவின் முடிவை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் மொட்டை மாடியில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

முதன் முறையாக அம்மா பாவம் என்கிற உணர்வு எழுந்தது. அக்கா அம்மா மீது உள்ளூர இருந்த வெறுப்பைக் காட்டும் விதம்தானோ இது? அவளுடைய விருப்பத்துக்கு மாறாக நடக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்கிறாளோ என்று கூடத் தோன்றியது. இத்தனை வயதுக்குப் பிறகும் அம்மாவால் இந்த வீட்டில் தன் இஷ்டமான ஒரு முடிவைச் செயல்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்று நினைக்கும் போது அவள் மீது கழிவிரக்கம் தோன்றியது. கொஞ்சம் கொஞ்சமாக அக்கா தன்னை முன்னிறுத்தும் போக்கில் சர்வாதிகாரத்துடன் செயல்படத் தொடங்குகிறாளோ என்றும் தோன்றியது.

''என்ன குட்டி, இன்னும் தூங்காம இங்கே என்ன பண்ணிட்டிருக்கற?'' என்று கேட்டபடியே மாடிக்கு வந்தாள் அக்கா.

''ஸோ, அப்பா நாளைக் காலை வர்றாராக்கும்'' என்றேன் சலிப்புடன்.

அக்கா அருகே வந்து தலையைக் கோதிவிட்டாள்.

''வரட்டுமே குட்டி''

''என்னக்கா அப்பா மேலே திடீர்ப்பாசம்? ரெண்டு வருஷமா அவரை அப்படித் திட்டின? இப்போ அம்மாவே வேண்டாங்கறா. நீ ஏன் அவரை வரவழைச்சு அம்மாவை தர்மசங்கடப்படுத்தற?''

''அம்மாவுக்காகத்தான் குட்டி''

''அக்கா''

அக்கா வான் நோக்கி வெறித்தாள்.

''அப்பா மேல் எனக்கு தீராத வெறுப்பு இருக்கிறது வேறு விஷயம் குட்டி. ஆனால் உனக்கும் எனக்கும் அப்பாங்கறது வாழ்க்கைல ஒரு பகுதி மட்டுமே. அம்மாவுக்கு அவர்தான் எல்லாமே.''

''ஆனா அம்மா அவ்வளவு வெறுப்பா பேசினாளே...''

''நீ ரெண்டு நாளா கேட்ட எங்க உரையாடல்கள் பேசிக்கா ஒரு மாறுதல். என் வாயிலிருந்து வந்தவை எல்லாம் அம்மாவின் மனதில் இருப்பவை. அவள் பேசியது எல்லாம் என் மனதில் இருப்பதாக அவள் ஊகித்தவை...''

அக்கா சொன்னது புரிந்தும் புரியாத மாதிரி இருந்தது.

''என் மனசில் அவ்வளவு வெறுப்பு இருக்கணும்னு அம்மா நினைக்கறா. அப்பா வீட்டுக்கு வரட்டும்னு தன் வாயால் சொல்லும் அளவுக்கு தனக்கு இந்த வீட்டில் உரிமை இல்லைன்னு நினைச்சு பயப்படறா. இந்த வீட்டில் பாரதிதான் முடிவு எடுக்கும் தகுதி உள்ளவள்னு நினைக்கறதாலே என் விருப்பம்தான் நிறைவேறணும்னு அவளே முந்திட்டு சொல்றா. பாவம் குட்டி. அவள் தன் கடைசி காலத்தையாவது ஏக்கத்தில் விடாமல் இருக்கட்டுமே.''

இன்னும் கூட என்னால் முழுமையாக ஒப்புக் கொள்ள முடியவில்லை.

''அம்மா நிஜமாகவே அப்பாவை வெறுக்கலைன்னு உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டேன்.

அக்கா சிரித்தாள். முந்தாநாள் இரவு தெரிந்து கொண்டேன்.

''என்ன தெரிஞ்சுகிட்ட?''

''அம்மா அப்பாவை வரவேற்கத் தயாராயிட்டாள்னு''

நிமிர்ந்தேன். ''எப்படி?''

''அடுக்களையில் போய்ப்பார்'' என்றாள் அக்கா.

படியிறங்கி ஓடினேன்.

அடுக்களை மேடையில் அடுப்புக்கு அருகில் புதிய பளபளப்புடன் நின்றிருந்தது அக்கா ஒரு காலத்தில் தூக்கி எறிந்த அந்த காஃபி ஃபில்டர்.

## 2. சரசுவின் வீடு

சரசு அந்த பண்ணை வீட்டு வேலைக்காரி என்று சொல்லிவிட முடியாது. அதற்கும் மேலே. ஒன்பது வயதிலிருந்து கடந்த பத்து வருடங்களாக அங்கேதான் இருக்கிறாள். பண்ணை வீடு என்று சொல்லப்படும் அந்த வீட்டின் முதலாளி பெரிய மில்லுக்குச் சொந்தக்காரர். சரசுவின் அப்பாவும் அம்மாவும் கூட அந்த மில்லில் வேலை பார்ப்பவர்கள். முதலாளியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். பண்ணை வீட்டில் வேலைக்கு ஆள் தேவைப்பட்ட போது படிப்பு சரியாக வராத சரசு அங்கு போய்ச் சேர்ந்தாள்.

சரசு வீட்டு வேலைகளில் கெட்டிக்காரி. இன்ன வேலை தான் என்றில்லாமல் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு பார்த்தாள். வீடு துடைப்பது, பாத்ரூம் கழுவுவது, பாத்திரம் அலம்புவது, ஒட்டடை அடிப்பது, ஜன்னல்கள் துடைப்பது, துணிகளை வாஷிங் மெஷினில் போட்டு எடுத்துக் காய வைத்து மடித்து வைப்பது உள்ளிட்ட எல்லா சுற்று வேலைகளையும் சுறுசுறுப்பாகப் பார்த்தாள். நடுநடுவே சமையல் வேலைகளில் முதலாளி அம்மாவுக்கு ஒத்தாசையாக இருந்தாள். சீக்கிரமே அந்த வீட்டின் தவிர்க்க இயலாத மைய அச்சுப் பேர்வழியாக ஆகிப் போனாள்.

அந்த வீட்டில் வாட்ச்மேன்கள் மாறினார்கள். தோட்டக் காரர்கள் மாறினார்கள். டிரைவர்கள் மாறினார்கள். மாறாத ஆள் சரசு மட்டுமே. அதனாலேயே புதிதாக வேலைக்குச் செல்பவர்கள்

சரசுவிடம் மரியாதையாக நடந்து கொண்டார்கள். ஏனென்றால் வீட்டின் சகல மூலைக்கும் செல்ல முடிந்த ஒரே ஆள் சரசுதான் என்கிற அளவுக்கு சுதந்திரம் இருந்தது.

அவள் வளர்ந்து வயதுக்கு வந்தபோது மூன்று பவுனில் செயின் மாட்டிவிட்டாள் முதலாளி அம்மா. அவளுக்கு சரசு என்றால் ஸ்பெஷல், காரில் சந்தைக்குப் போனால் சரசுவையும் உடன் அழைக்காமல் போக மாட்டாள். வீட்டில் இருக்கும் போதும் மூச்சுக்கு நூறு முறை சரசு சரசு என்று அழைத்தபடியே இருப்பாள்.

எல்லாவற்றிற்கும் மேலாக அந்த வீட்டின் டாபர்மேன் நாய் பிளாக்கி. அது உயரத்தில் கன்றுக்குட்டி அளவுக்கு இருக்கும். அது மற்றவர்களுக்கு வேங்கை. சரசுவிடம் மட்டும் ஆட்டுக்குட்டி போல் குழைந்தபடி கிடக்கும். எவ்வளவு கோபத்தில் எவ்வளவு ஆக்ரோஷத்தில் இருந்தாலும் சரசுவின் குரல் கேட்டால் அப்படியே அடங்கிவிடும்.

தப்பித்தவறி ஏதாவது காரணத்துக்காக சரசு ஓரிரண்டு நாட்கள் விடுமுறை எடுக்க நேர்ந்தால் பண்ணை வீடு வீடாகவே இருக்காது. முதலாளி அம்மா எல்லோர் மீதும் எரிந்து எரிந்து விழுவாள். அன்று சமையலும் சுமாராகத்தான் இருக்கும். பிளாக்கி கூட ஒழுங்காகச் சாப்பிடாமல் அடம் பிடிக்கும். அடுத்த நாள் சரசு அந்த வீட்டினுள் வந்த பிறகுதான் வீடு பழைய சோபையை அடையும்.

''நீ பேசாமல் இங்கேயே இருந்திடேன் சரசு'' என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறாள் முதலாளி அம்மா. சரசு வீட்டிலிருந்து பண்ணை வீடு கொஞ்சம் தூரத்தில் இருந்தது. காலை ஆறரையிலிருந்து ஏழு மணிக்குள் கிளம்பினால் இருபது நிமிடமாவது ஆகும் நடந்துவர. சாயங்காலம் அதேபோல் ஆறரைக்குக் கிளம்பினால் கொஞ்சம் களைப்பும் இருப்பதால் அரைமணி நேரமாகும் சரசு வீடு போய்ச்சேர. பிளாக்கியும் இவள் கிளம்புவதற்கு பத்து நிமிடம் முன்பிருந்தே போகாதே போகாதே

என்பது போல் கத்தித்தான் வழியனுப்பும். பல சமயங்களில் முதலாளி அம்மா சொல்வது போல் இங்கேயே இருந்து விடலாமா என்று கூட சரசுவுக்கு சபலம் வந்திருக்கிறது.

ஆனால் அவள் பெற்றோர் அவ்விஷயத்தில் பிடிவாதமாக இருந்தார்கள். ''வயசுக்கு வந்த பெண் பிள்ளை இரவில் வெளித் தங்கினா எங்க ஆளுங்க ஏதாவது சொல்வாங்கம்மா என்கிற அஸ்திரத்தை சரசுவின் அப்பா ஏவ, வேறு வழியின்றி மாலை வேளைகளில் சரசு வீடு திரும்பத்தான் வேண்டியிருந்தது.

சரசுவுக்குக் கல்யாணம் ஆன பிறகு அங்கேதான் தங்குவாள் என்றும் அவளும் அவள் புருஷனும் குடித்தனம் நடத்த கிணறை ஒட்டியிருக்கும் அவுட்ஹவுஸ் போன்ற ஸ்டோர் ரூம் ஒதுக்கித் தரப்படும் என்றும் முதலாளி அம்மா கறாராகச் சொல்லிவிட்டதில் எல்லோருக்கும் மகிழ்ச்சி.

அந்தப் பண்ணை வீட்டின் விஸ்தாரமான பரப்பில் காம்பவுண்டு சுவரை ஒட்டியிருக்கும் பல விஷயங்களில் கிழக்கு மூலையில் அமைந்த பெரிய கிணறும் அதை ஒட்டிய ஸ்டோர் ரூமும் அடக்கம்.

அது முதலில் ஸ்டோர் ரூமே கிடையாது. பத்தடிக்குப் பனிரெண்டடி அளவில் உள்ளேயே சமையல் தடுப்புடன் ஆன அறை அது. ஒட்டியபடியே பாத்ரூம் லெட்ரின், வாட்ச்மேனாக ஆணும் அவன் மனைவியே வேலையாளாகவும் அமைந்தால் அவர்களைத் தங்க வைக்க என்று ஒரு காலத்தில் திட்டமிருந்தது. சரசு வந்து அவளே எல்லாமாக ஆனபிறகு அந்த வீட்டை வாட்ச்மேனுக்குத் தர இஷ்டமில்லாமல் ஸ்டோர் ரூமாக மாற்றியிருந்தாள் முதலாளி அம்மா.

இப்போது திடீரென்று முதலாளி அம்மாவின் அறிவிப்புக்குப் பிறகு அதற்கு சரசுவின் வீடு என்றே பெயராகிப் போனது. முதலாளி அம்மாவும் அந்த இடம் கூட்டியாச்சா. இந்த இடம் துடைச்சாச்சா என்று கேட்கிறபோது உன் வீட்டை சுத்தம்

பண்ணியாச்சா என்று கேட்கத் தொடங்கினாள். சரசுவுக்கு முதலில் சிரிப்பும் பெருமையுமாக இருந்தது. வாட்ச்மேனும் டிரைவரும் சரசுவுக்கு வந்த வாழ்வைப் பாருங்கடா என்று கேலியே செய்தார்கள். சரசுவே ஒரு முறை முதலாளி அம்மாவிடம் "அப்படி ஏம்மா சொன்னீங்க? நாளை எனக்குப் புருஷனா வரப்போறவன் வாட்ச்மேனா இருக்காம வெளிவேலை பார்த்தா நான் எப்படி இங்கே இருக்க முடியும்?" என்று கேட்டாள்.

"போடி பைத்தியம். அதுக்கும் நீ இங்கே தங்குறதுக்கும் என்ன சம்பந்தம்?" "உன் புருஷன் எங்கவேணா வேலை பார்க்கட்டும். இது உன் வீடுதான் சரியா?" என்று முதலாளி அம்மா சொல்ல நெகிழ்ந்து போனாள் சரசு.

அதன்பிறகு சரசுவுக்கே அந்த அவுட்ஹவுஸின் மீது இனம் புரியாத பிடிப்பு ஏற்பட்டு விட்டது. மற்ற இடங்களைச் சுத்தம் செய்ய எடுத்துக் கொள்ளும் நேரத்தைவிட அதிக நேரம் செல வழித்து சிரத்தையுடன் செய்தாள். அந்த அறையின் ஜன்னல்களை அழுத்தமாகத் துடைத்தாள். அந்த அறையினுள் இருக்கும் நேரங்களில் ஏதோ ஒருவித சுகத்தை உள்ளுக்குள் உணர்ந்தாள். அழுத்தமாக மூச்சுவிட்டு சுவாசித்தாள். முகம் தெரியாத ஒரு கணவனுடன் அந்த வீட்டில் குடித்தனம் நடத்துவதாகக் கற்பனையில் மிதந்தாள்.

இப்படி நாட்கள் ஓடிக் கொண்டிருக்க ஒருநாள் சரசு வேலை முடிந்து நடந்து போய்க் கொண்டிருந்தபோது, "ஏ புள்ள சரசு! என்னைத் தெரியுதா?" என்று கேட்டபடி அவள் எதிரே சைக்கிளில் வந்து மடக்கி நின்றான் மாயாண்டி.

அவன் சரசுவின் அத்தை மகன்.

அவனைப் பார்த்த மாத்திரத்தில் அடையாளம் கண்டு கொண்டாள் சரசு. எத்தனை விசேஷ வீடுகளில் ஓரக்கண்ணால் பார்த்து ஏங்கியிருக்கிறாள். மாமன் மச்சான் சண்டையில் ஏழெட்டு வருஷங்களாகப் பேச்சு இன்றி குடும்பங்கள் பிரிந்து

கிடந்ததால் அவன் எட்டாக் கனியென்று மறந்தும் போய் விடுவாள். ஆனால் இப்படி ஆஜானுபாகுவாக கரணை கரணை யான புஜங்களுடன் கறுப்பு நிறத்தில் இறுகிய உடம்புடன் முரட்டுக் காளையாக இவ்வளவு சமீபத்தில் பார்த்ததில் குப்பென்று வியர்த்தது அவளுக்கு.

பெற்றோர் இணக்கமாக இருக்கும் குடும்பங்களைவிட முறைத்துக் கொண்டிருக்கும் வீடுகளில் அத்தை பிள்ளை மாமன் பிள்ளைகளுக்கிடையே உறவு பக்கென்று பற்றிக் கொள்கிறது.

அப்படிப் பற்றிக் கொண்டது மாயாண்டிக்கும் சரசுவுக்கும்.

சரசு தினமும் வேலை முடிந்து திரும்புகையில் ஓரிடத்தில் மாயாண்டி காத்திருப்பதும் இருவரும் அரைமணி நேரமாவது பேசிச் சிரித்துப் பிரிவதும் வழக்கமாயின.

மாயாண்டிக்கு நிரந்தர வேலை என்று இப்போதைக்கு இல்லை. காலையில் பால் போடுவது, அப்புறம் நியூஸ் பேப்பர், அப்புறம் தீப்பெட்டி கம்பெனி சார்பில் குச்சிகளும் அடுக்குக் கட்டைகளும் பெட்டிக் காகிதங்களும், வீடுகளுக்குப் போய்க் கொடுப்பது, மாலையில் திரும்பவும் பால் ஊற்றுவது, பிறகு குச்சி அடுக்கப்பட்ட கட்டைகளையும் ஒட்டப்பட்ட தீப்பெட்டிகளையும் வீடு வீடாகக் கணக்குப் பார்த்துச் சேகரித்து கம்பெனிக்குக் கொடுப்பது என்று பிஸியாக வேலைகள் பார்த்து நன்றாக சம்பாதித்துக் கொண்டிருந்தான். இன்னும் ஆறு மாதங்களுக்குள் அவனை தீப்பெட்டிக் கம்பெனியில் சூபர்வைஸராக வேலைக்குச் சேர்க்க அதன் முதலாளி சொல்லி இருந்தார்.

பண்ணை வீட்டுச் சாப்பாட்டில் ஆரோக்கியமாக வளர்ந்திருந்த சரசுவின் அழகில் சொக்கிப் போயிருந்த அவன் அவளை மணப்பது குறித்து வீட்டில் சொன்னபோது அவனுடைய பெற்றோர் தரப்பில் அவ்வளவாக எதிர்ப்பு இல்லை. சரசுவின் அப்பா ரொம்பவும் முறுக்கிக் கொள்வாரே என்றுதான் பயத் தயக்கம் இருந்தது. மாயாண்டி அதை சரசுவுக்குச் சொன்னான்.

அதைப் பற்றி நான் பார்த்துக் கொள்கிறேன் என்று தைரியம் சொன்னாள். சரசு அவளுக்குத் தெரியும் எங்கே ஸ்விட்ச் போட்டால் எங்கே லைட் எரியும் என்று.

முதலாளி அம்மாவிடம் மூடு பார்த்து ஒருநாள் விஷயம் சகலத்தையும் சொல்ல அந்த அம்மாவுக்கு ஒரே ஆச்சர்யம், அடேங்கப்பா! இந்தச் சின்னப் பெண் சரசுவுக்குள் இவ்வளவு விஷயங்களா என்று.

சரசுவின் அம்மா அப்பாவைப் பண்ணை வீட்டுக்கு வர வழைத்துப் பேசினாள். சரசுவின் அப்பாவுக்கு விருப்பம் இல்லை. பையன் நன்றாக இருக்கிறான், நடத்தையில் குறையில்லை, பெத் தவங்க மோசமானவர்களில்லை, நேரடியாக உன் குடும்பத்துக்கு எந்தத் தீங்கும் செய்தவர்களில்லை, பையன் நல்ல உழைப்பாளி, எல்லாவற்றிற்கும் மேலா சரசுவை விரும்பறான், நல்லா வச்சுப் பார்த்துப்பான் என்பது போன்ற வாதங்களை அடுக்கி அவர் களைச் சம்மதிக்க வைத்தாள் முதலாளி அம்மா.

''சரிம்மா, நீங்க சொல்றீங்க என்கிற ஒரே காரணத்துக்காக இந்த கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன். வர்ற தைல கல்யாணம் நடக்கிற மாதிரி ஏற்பாடு செஞ்சிடலாம்'' என்று சொன்னார் சரசு வின் அப்பா முடிவாக.

''என்ன சரசுக்கள்ளி! சந்தோஷம்தானா?'' என்று முதலாளி அம்மா சொன்னபடி கன்னத்தில் இடித்தபோது சரசுவுக்கு முகம் கொள்ளாத சிரிப்பு.

''அப்படி யாரடி அந்த மாயாண்டி என் சரசுவை இந்த அளவுக்கு மயக்கியிருக்கறது. கொஞ்சம் வரச் சொல்லேன். நானும் பார்க்கறேன்'' என்றார் முதலாளி அம்மா.

மாயாண்டி மறுநாளே வந்தான்.

வெட்கம் மேலிட கதவு திறந்தாள் சரசு. உர்ரென்று பாய்ந்து வந்த பிளாக்கியைப் பார்த்து நடுங்கி நின்றவனைப் பார்த்து

கேலியாகச் சிரித்தபடி "ஏய் பிளாக்கி! உள்ளே போ" என்றாள். அது பணிந்து ஓடிப் போனதை வியப்புடன் மாயாண்டி பார்த்துக் கொண்டிருந்தபோதே சரசுவும் உள்ளே ஓடிவிட்டாள்.

முதலாளி அம்மா அவனை முன் வராந்தா திண்ணையில் உட்கார வைத்துப் பேசினாள். அவளுக்கு மாயாண்டியை மிகவும் பிடித்துப் போனது. "உனக்காக உன் வருங்காலப் பெண்டாட்டி வீடு கூட தயாராக வச்சிருக்கா தெரியுமா?" என்று அந்த அவுட்ஹவுஸைக் காட்டி கேலி பேசினாள். "எங்க சரசு உலகம் தெரியாத சின்னப்பொண்ணு. அவளைக் கலங்காம வச்சுக்கணும் தெரியுதா?" என்று கண்டிப்புடன் சொன்னாள். அவனுக்கு காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

அந்த நேரத்தில் தொலைபேசி ஒலித்தது.

உள்ளே போய்ப் பேசிய முதலாளி அம்மா அதே வேகத்தில் வெளியே வந்தாள்.

"மாயாண்டி! நீ சைக்கிள்லதான் வந்தியா?"

"ஆமாம்மா!"

"ஒரு வேலை செய்யப்பா. மூன்றாவது தெரு முனையில் அம்பேத்கார் சிலை பக்கத்தில என் பெரியப்பா குடும்பத்தோட வீடு தெரியாமல் தவிச்சிட்டிருக்காராம். ஒரு நடை போய் அழைச்சிட்டு வந்திர்றயா?"

"சரிம்மா..." என்று ஓடினான் மாயாண்டி பாதி குடித்திருந்த காபியை அங்கேயே வைத்துவிட்டு.

மறுநாள் சரசுவும் மாயாண்டியும் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தில் உட்கார்ந்திருந்தனர்.

சரசுவின் முகத்தில் ஒரு வாட்டம்.

"அந்த வீட்டில் உனக்கு ராஜமரியாதை போல. நாய்கூட உன் பேச்சு கேட்குது. உங்க முதலாளி அம்மா ரொம்ப நல்ல

வங்களா இருக்காங்க. நம்ம குடியிருக்க வீடு கூட தந்திருக்காங்க. நீ அதை தினம் மூணு தடவை சுத்தம் செய்யறியாமே அவ்வுளவு அவசரமா?'' என்று சீண்டினான் மாயாண்டி.

சரசுவிடம் பதிலே இல்லை.

''ஏய் என்னாச்சு?'' என்று உலுக்கினான்.

''கல்யாணத்துக்கப்புறம் நான் உன் வீட்டுக்கே வந்திடறேன் மச்சான்'' என்றாள் சரசு பளிச்சென்று.

மாயாண்டி திடுக்கிட்டான்.

''நேத்து உன்னைக் காபி கூடக் குடிக்க விடாமல் அவங்க உறவுக்காரங்களைக் கூட்டிவர விரட்டினாங்களே அது எனக்குப் பிடிக்கலை''

''ஏய் சரசு! அதில் எனக்கு எதுவும் தப்பா தோணலை.''

''ஆனா எனக்குத் தோணுதே. ஆமாம் மச்சான் அவங்க நல்லவங்கதான். ஆனாலும் முதலாளி. அவங்களுக்கு நான் மட்டுமே வேலைக்காரியா இருந்திட்டுப் போறேன். நீ அங்கே வந்து உட்கார்ந்தா உன்கிட்டயும் அவங்க வேலை சொல்ல ஆரம்பிச்சிடுவாங்க. அவங்க விகல்பமில்லாமச் சொன்னாலும் எனக்கு வித்தியாசமாப்படுது. இதேகதி நாளை நம்ம குழந்தைக் கும் ஏற்படலாம். வேணாம் மச்சான். நான் இப்போ எப்படி எங்கப்பன் வீட்ல இருந்து வேலைக்கு வந்திட்டுப் போறேனோ அதே மாதிரி கல்யாணத்துக்கப்புறம் உன் வீட்ல இருந்த வந்திட்டுப் போறேன். நம்ம குழந்தை ஏழையாப் பிறந்தாலும் பரவாயில்லை. வேலைக்காரனாப் பிறக்க வேண்டாம்...'' என்றாள் சரசு தெளிவான குரலில்.

# 3. பயணி

**கா**லை எழுந்திருப்பதில் கால்மணி நேரம், ஜஸ்ட் கால்மணி நேரம்தான் தாமதமானது. காரணம் என்ன என்கிற ஆராய்ச்சிகள் எல்லாமே முடிவாக சோம்பலின் வேறு ஒரு பரிமாணத்தைத்தான் காட்டப் போகின்றன.

வழக்கமான பயத்திடுக்கிடலில் முதல் விழிப்பு சரியான நேரத்துக்கு வரத்தான் செய்தது. கொஞ்சம் புரண்டு கொடுத்து சோம்பல் முறித்துக் கிடந்ததில் எந்த விநாடியில் கண் அயர்ந்தது என்றே தெரியாமல் அடுத்த விழிப்பின் போது கடிகாரம் இரக்கமே இல்லாமல் கால்மணி நேரம் தள்ளி நின்றிருந்தது.

துள்ளியெழுந்து தலைமுடியைக் கொண்டையாய் முடிந்து கொண்டு அடுக்களைக்கு விரைந்தும் எவ்வளவோ படபடப்பு காட்டியும் ஏதாவதொன்று இசகுபிசகாய் ஆகியே வேலைகளை இன்னும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

காலை நேரத்தைப் பொறுத்தவரையில் நான் எழுவதில் இருந்து வியர்வை வழிய என் அலுவலக இருக்கையில் போய் உட்கார்ந்து மூச்சு விடுவது வரை ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் எனக்குள் வேலைத் திட்டங்கள். இருக்கும். குழம்பை இறக்கப் போகிறேனா, பொரியலைத் தாளிக்கப் போகிறேனா, அப்பளம் பொரித்து முடிக்கப் போகிறேனா, சாதத்தை அடுப்பில் ஏற்றி விட்டு தோளில் துண்டெடுத்துப் போட்டுக் கொண்டு பாத்ரூம் நோக்கி நடக்கப் போகிறேனா அந்தந்த சமயங்களில் மணி என்ன என்ப தைக் கடிகாரம் பார்க்காமலேயே துல்லியமாகச் சொல்லி விட முடியும் என்னால்.

இன்று மாதிரி என்றாவது அந்த நிகழ்வுகள் தொந்தரவுக்கு ஆளாகும் போதுதான் கடிகாரத்தையும் நிறுத்த முடியாமல் சமையல் திட்டங்களில் அதிரடி அவசர கடைசி நேர மாற்றங் களையும் செய்ய முடியாமல், மழை செய்த சதி காரணமாக குறைந்த ஓவரில் அதிக டார்கெட் குறிக்கப் பெற்ற கிரிக்கெட் அணியைப் போல பதறித் தடுமாறும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

என்ன செய்வது? புலம்பி ஸ்தம்பித்து நின்று அதில் இன்னும் நேரத்தை வீணடிக்காமல் கிட்டத்தட்ட அதிவேகத் திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தியபடி சமையல் ஐட்டங் களிலும் அதிக சமரசம் செய்யாமல் கிட்டத்தட்ட எல்லாம் முடித்து விட்ட திருப்தியுடன் கடைசி விஷயமான அரிசியைக் குக்கரில் ஏற்றுவதற்கான முஸ்தீபுகளை ஆரம்பித்தேன்.

அடுப்பு மேடையில் புழக்கத்திற்காக பானை ஒன்றிலும் வாய் அகன்ற சிறிய அண்டா ஒன்றிலும் நல்ல தண்ணீர் வைத் திருப்பேன். அவசரமாகக் காய்கறிகள் கழுவவோ, பருப்பு கழுவ வோ, குழம்புக்குப் புளி கரைக்கவோ தேவையான தண்ணீரை சட்டென்று எடுத்து ஊற்றிக் கொள்ள வசதி. சிறிது சிறிதாகப் பல விநாடிகள் சேமிக்க உதவும் வசதி இது. காலையில் அடுக் களைக்குள் நுழைந்து அவற்றை உபயோகிக்க ஆரம்பித்த பின் மொத்த சமையலும் முடியும் வரை அவை திறந்தே இருக்கும்.

அரிசி களைந்து தண்ணீர் விட அண்டாவிலிருந்து அளவு தம்ளரில் தண்ணீர் மொண்டபோது கண்ணில் பட்டது அண்டா வின் உள்சுவரில் ஒட்டியபடி செத்துக்கிடந்த சிலந்தி. ஐயோ! இது எப்படி இங்கே?

நிமிர்ந்து மேலே பார்த்தேன். சுவர் சுத்தமாகத்தான் இருந்தது.

இப்போது விழுந்திருக்குமா அல்லது ஏற்கனவே இதிலே கிடந்தது தானா? எப்போது விழுந்திருக்கும்?

இதிலிருந்து தானே தண்ணீர் மொண்டு முழு சமையலும் செய்திருக்கிறேன்!

பதறாதேடி! நிதானமாய் யோசி என்று உள்ளிருந்து ஒரு குரல்.

பல்லி விழுந்தால் பாச்சை விழுந்தால் விஷம் என்று தெரியும். சிலந்தி அவ்வளவு விஷம் வாய்ந்ததா?

இதைப் பற்றி எதிலும் படித்தது கூட இல்லையே.

சிலந்தி சாதாரண விஷம்தானே. எல்லா இடங்களிலும் காணப்படுவதுதானே. பெரிய பெரிய தண்ணீர்த் தொட்டிகளில் இது விழுந்து கிடப்பது தவிர்க்க இயலாத விஷயம்தானே.

இதுவரை எந்தப் பத்திரிகையிலுமோ, புத்தகத்திலுமோ கூட சிலந்தி விழுந்த உணவால் யாரும் பாதிக்கப்பட்டதாக வந்ததில்லையே!

வந்ததில்லையா; என் கண்களில் பட்டதில்லையா?

சே! ரொம்பவும் அலட்டிக் கொள்கிறேன். இது ஒன்றுமில்லாத விஷயம்...

அரிசிக்குத் தேவையான நீரை அண்டாவைத் தவிர்த்து பானையில் இருந்து எடுத்து ஊற்றி குக்கரினுள் வைத்து மூடினேன்.

குளிப்பதற்காக நகர முயன்றேன்.

ஏதோ உணர்வு கால்களைக் கட்டி இழுத்தது. பார்வை மீண்டும் அண்டாவினுள் பாய அந்த சிலந்தி இருந்த விதம் அருவருப்பைத் தந்தது.

தலையில் கைவைத்தபடி ஹாலுக்கு வந்தேன்.

குழந்தைகள் இரண்டும் ஒன்றின்மீது ஒன்று கால்களைத் தூக்கிப் போட்டபடி உடைகள் விலகியபடி கலைந்து கிடந்த காட்சியின் அழகைக்கூட ரசிக்க முடியாமல் மனதை ஏதோ பிசைந்தது.

திறந்திருந்த கதவின் வழியே தெரிந்த உள் அறையின் கட்டிலில் சலனமின்றிப் படுத்திருந்தார் அவர்.

அவசரமாக வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போதும் நடுநடுவே தூங்குகின்ற குழந்தைகளையும் அவரையும் பார்த்துக் கொள்வது காரணம் அறியாத பழக்கமாக ஆகிவிட்டிருந்தது. சில சமயங்களில் என் பதற்றம் எதையும் உணராமல் ஜாலியாக தூங்கிக் கொண்டிருக்கும் அவர்களைப் பார்க்கும்போது மறைக்க முயன்றும் முடியாமல் தவறு என்று அடக்க முயன்றும் அடங்காமல் பொறாமை கொஞ்சம் துளிர் விடுவதும் உண்டு.

மூவரின் தூக்கமும் எந்த நம்பிக்கையில் இவ்வளவு அமைதியாக ஆனந்தமாக இருக்கிறது என்று யோசிக்க ஏனோ இரவு நேரப் பேருந்தின் ஞாபகம் வரும். டிரைவரின் பொறுப்பில் தங்கள் உடைமைகளையும் உயிர்களையும் ஒப்படைத்தது போல் எவ்வளவு நிதானமாகத் தூங்குகிறார்கள் பயணிகள். டிரைவர் எப்போதாவது தூங்குபவர்களைத் திரும்பிப் பார்த்து எரிச்சல் பட்டால் என்ன ஆகும் என்று யாராவது யோசித்திருக்கிறார்களா?

பல சமயங்களில் என்னையே ஒரு கற்பனைப் பேருந்தின் டிரைவராக வரித்துக் கொள்வதில் ஒரு கர்வசுகம் ஏற்படும்.

இன்று அதெல்லாம் இல்லை. இனி புது சமையலுக்கு நேரமில்லை. என்ன செய்வது என்கிற சிந்தனைதான் மேலோங்கியது.

சமையலின் போது எது எதற்கு அண்டாவிலிருந்து தண்ணீர் எடுத்தேன். எது எதற்கு பானையில் இருந்து தண்ணீர் எடுத்தேன் என்று ஞாபகப்படுத்திப் பார்த்து இனம் பிரிக்கலாமா?

நடக்கிற காரியமா?

அப்படி ஏதும் தெளிவாக ஞாபகம் வரவில்லை.

அந்தத் தண்ணீர் அவ்வளவு விஷமாகவா இருந்து விடப் போகிறது? சமையலின் போதுதான் நன்கு கொதித்து விடுகிறதே. அதையும் மீறியா எந்தக் கிருமியும் எதுவும் செய்துவிடும்?

அப்படிப் பார்த்தால் ஓட்டல்களில் எதையும் சுத்தமாகவா செய்கிறார்கள்? பல ஓட்டல்களில் சமையல் செய்யும் இடத்தை அருகில் போய்ப் பார்த்தால் சாப்பிட மனசு வருமா?

அவருக்கு நல்ல நாளிலேயே ஓட்டல் சாப்பாடு அறவே பிடிக்காது. சுத்தமாகச் செய்ய மாட்டான். ஆரோக்கியக்கேடு என்று வழக்குப் பேசுவார். அவரிடம் போய் இன்னிக்கு ஒருநாள் ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமா?

அதோடு ஒப்பிட்டால் இதே தேவலையே.

அதற்காக, என்மீது முழு நம்பிக்கை வைத்துள்ள இவர்களை ஏமாற்றுவதா?

என்ன முயன்றாலும் மனம் தேற மறுத்தது.

ஓட்டல் சாப்பாடு சுத்தமில்லாமலே இருந்தாலும்கூட அட்லீஸ்ட் அது கண்களில் படுவதில்லையே. இந்தச் சிலந்தியின் பிணம் கண்ணில்பட்டுத் தொலைத்து விட்டதே. எப்படித் துணிந்து இந்த உணவை நான் அவருக்கும் பிள்ளைகளுக்கும் கொடுக்க முடியும்? எதற்கு சான்ஸ் எடுக்க வேண்டும்?

மண்டைக் குடைச்சலில் இருந்து விடுபட வேகமாக அடுக் களைக்கு விரைந்து குழம்பையும் காய்கறிகளையும் அவசரமாக ஸிங்க்கில் கொட்டினேன்.

ஆவி பறந்து முகத்தில் அடித்தது.

கொஞ்சம் லேசான மாதிரி இருந்தது.

குழந்தைகளைப் பற்றிப் பிரச்சினை இல்லை. பிரட் பட்டர் ஜாம் வைத்துக் கொடுத்து விட்டால்கூட மத்தியானத்துக்கு சந்தோஷமாக சாப்பிட்டுக் கொள்வார்கள். எனக்கு ஆபீஸில் கேன்டீன். இவர்தான் என்ன சொல்லுவாரோ!

''என்னங்க, இன்னிக்கு ஒருநாள் லஞ்ச் ஓட்டலில் சாப்பிட்டுக்கோங்களேன்...'' என்றேன் தயங்கித் தயங்கி.

''என்னாச்சு?'' என்று ஆரம்பித்தார் சலிப்பான குரலில்.

''இன்னிக்கும் தூங்கிட்டியா? உனக்கு இதே பிழைப்பாப் போச்சு. ஏதாவது காரணம் சொல்லி வாரத்தில நாலு நாள்

ஓட்டலல சாப்பிட வைக்கலைன்னா உனக்கு நிம்மதியா இருக்காதே'' என்று பாய்ந்தார் வழக்கம் போல். சோம்பேறி, குடும்பத் தலைவனின் ஆரோக்கியத்தின் மீது அக்கறை இல்லாதவள் என்பது போன்ற அர்ச்சனைப் பூக்களின் அபிஷேகம் வேறு.

மென்று விழுங்கினேன்.

பரவாயில்லை.

இரவில் மதுரையில் பஸ்சில் ஏறி, வழியில் வண்டி பஞ்சர் ஆகி ஸ்டெப்னி மாற்றிக் கிளம்பியது கூடத் தெரியாமல் நன்கு தூங்கிவிட்டு, விழிக்கும்போது தாம்பரமாவது வந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற பயணி அப்போதுதான் மதுராந்தகத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறோம் என்று அறிய வரும்போது டிரைவரைப்பற்றி சாவுகிராக்கி கட்டை வண்டி ஓட்டறான் என்பது போன்ற சொற்களால் வசை முணுமுணுப்பது தான் என் ஞாபகத்துக்கு வந்தது.

# 4. வேஷம்

வரவேற்பு மேஜையின் கணினியில் ஆழ்ந்திருந்த என் தோளைத் தட்டிச் சொன்னாள் குமுதினி, ''உன் ஹஸ்பண்ட் வர்றார்.''

திரும்பினேன். இங்கிருந்தே தெரிந்த போர்டிகோவில் நிறுத்திய காரிலிருந்து அவசரமாக இறங்கினார் என்னவர். அவர் முகத்தில் பதற்றம் இருந்தது. வந்திருந்த காரும் அவர் நண்பருடையது. வேகமாக என்னை நோக்கி வந்தவர் என் புன்னகையைப் புறக்கணித்து, ''உடனே லீவு சொல்லிவிட்டுக் கிளம்பு'' என்றார்.

அவருடைய பதற்றம் என்னைத் தொற்றிக்கொள்ள, ''என்னாச்சுங்க?'' என்றேன்.

''மனசைத் திடப்படுத்திக்கோ. உன் மாமா இறந்துட்டாராம். இப்பதான் செய்தி வந்தது. உடனே கிளம்பணும். பஸ் பிடிச்சுப் போனா லேட்டாயிடும்னுதான் மோகனிடம் கார் வாங்கிட்டு வந்தேன். பெட்ரோல் போட்டுக்கலாம் புறப்படு'' என்றார்.

கண்கள் சட்டென்று பொங்கின. என் பதற்றம் கண்ட குமுதினி நான் உடனே புறப்படத் தேவையான உதவிகளைச் செய்து என்னை அனுப்பி வைத்தாள்.

காரில் அமர்ந்து கதவைச் சாத்தியபடியே என் கண்ணைத் துடைத்துக் கொண்டேன். கண்ணீரில் கரைந்த ரோஸ்பவுடர் கர்ச்சீப்பில் ஒட்டியபடி வந்தது. ''ஐயோ, மேக்கப் கலைக்காமல் இப்படியே போவதா?''

''என்னங்க, வண்டியை ஒரு நிமிஷம் வீட்டுக்கு விடுங்க''

''நேரமாயிடும்மா...''

''இல்லைங்க. பத்தே நிமிஷம்.''

வீடு திறந்து உள்ளே ஓடினேன். பாத்ரூம் போய் லிப்ஸ்டிக் துடைத்து மேக்கப் கலைத்தேன். கண்ணாடி முன் நின்றபோது சேலை பகட்டாகத் தெரிந்தது. களைந்து பழைய வாயில் சேலை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டேன். பவுடரைத் துடைத்து நெற்றியிலிருந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்துவிட்டுக் குங்குமம் வைத்துக் கொண்டேன். வாட்சைக் கழற்றிவிட்டு இடது கையிலிருந்த நான்கு வளையல்களில் மூன்றைக் கழற்றி ஒன்றை மட்டும் வலது கைக்கு மாற்றிவிட்டு மற்ற இரண்டையும் டிரஸ்ஸிங் மேஜை இழுப்பறைக்குள் போட்டுவிட்டு வெளியே வந்தேன்.

காரிலேயே காத்திருந்தார் அவர்.

''இதென்ன வேஷம்?'' என்றார்.

எனக்கு சுருக்கென்றது. ''என்னங்க நீங்களே புரிஞ்சுக்காமப் பேசறீங்க. இது வேஷமில்லை. இதுதான் என் நிஜம்.''

அவர் உதட்டைச் சுளித்துக் கொண்டு சாலையில் கவனம் செலுத்தலானார்.

என் அலங்காரப் பூச்சுகளும் ஆடம்பரச் சேலையும் அதிகப் படி நகையும் ரிஸப்ஷனிஸ்ட் வேலையின் கட்டாயம் என்று அங்கே எத்தனை பேர் உணர்வார்கள்? இது நண்பரின் கார்தான்... அவசரம் கருதி இரவல் வாங்கி வந்திருக்கிறோம் என்று நம்புவார் களா? இவ்வளவு வசதியாக உலா வருபவள் தன்னை எடுத்து வளர்த்த மாமா உடம்பு சரியில்லாமல் கிடந்திருக்கும் போது நல்ல ஆஸ்பத்திரியில் சேர்த்து வைத்தியம் பார்த்திருக்கக் கூடாதா என்று எண்ண மாட்டார்களா? இவரிடம் சொன்னால் புரிந்து கொள்ளவே மாட்டார்.

''ஏன் வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்பதற்கு பயப்படு கிறாய்?'' என்று கேட்பார். ''உன் ஆரம்பகால வறுமையையும்

கஷ்டங்களையும் எப்படி காம்ப்ளெக்ஸ் இல்லா மல் ஏற்றாயோ, அதே மாதிரி இப்போது ஏற்பட்டு வரும் படிப்படி யான முன்னேற்றங்களையும் ஏன் ஏற்க முடியவில்லை உன்னால்?''

''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை.''

''இல்லை. நீ யாருக்கோ பயந்த மாதிரிதான் உன் வசதி களை ஏற்கிறாய். நீ கஷ்டத்தில்தான் இருக்கணும். அப்போதுதான் கஷ்டப்படுகிற உன் சுற்றத்தார் உன்னை ஏற்பார்கள். இல்லா விட்டால் ஏதாவது நினைத்துக் கொள்வார்கள் என்று நீயாகவே கற்பனை செய்து கொண்டு பயப்படுகிறாய். எல்லோருக்கும் ஒரே தளத்தில், ஒரே தரத்தில் வாழ்க்கை அமைவது சாத்தியம் இல்லை. எல்லோரும் அவரவர் வாழ்க்கையை வாழ்கிறார்கள். நீதான் தேவையில்லாத குற்ற உணர்வில் மருகுகிறாய்'' என்று அவர் சொல்லும் போதெல்லாம் எனக்குள் ஏதோ பண்ணும். ''வேண் டாங்க இந்தப் பேச்சு'' என்று தவிர்த்து விடுவேன். ஆனால், அவர் சொல்வது உண்மைதான் என்று பல சமயங்களில் தோன்றும்.

மாமா கஷ்டப்பட்டார் என்று தெரியும். நான் ஏதும் செய் திருக்க முடியுமா? அவர் வாய் திறந்து கடன் என்று கேட்டபோது என்னவரிடம் சொல்லி இரண்டு முறை வாங்கிக் கொடுத்திருக் கிறேன். இன்றுவரை திருப்பிக் கேட்டதில்லை. ஒருமுறை மாமா என் வீட்டுக்கு வந்திருந்த சமயம் அவருக்கு உடல் நலமில்லாமல் போனபோது ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்து லீவு போட்டு சிச்ருஷை செய்து உடல் நலம் தேற்றி அனுப்பி வைத்தேன். நான் வேறு என்ன செய்திருக்க முடியும்? என்ன செய்திருக்க வேண்டும்? தெரியவில்லை. அவருடைய கடைசி இரண்டு பெண் களுக்குத் திருமணம் ஆகவில்லை. அப்படி இருக்க நான் சுக வாழ்க்கை வாழலாமா என்று என்னுள் உறுத்தல் ஏற்படுவது அதிகப்படியானது என்கிறார் இவர். திருமணம் ஆகாதவர்களின் அண்ணன்கள் இருவரும் அக்கா ஒருத்தியும் தத்தமது குடும்பங் களுடன் சந்தோஷமாக வாழவில்லையா என்று இவர் கேட்டும் என் உறுத்தல் ஏன் போகவில்லை?

கார் விரைந்து கொண்டிருந்தது.

மாமா நல்லவர். சிறுவயதிலேயே என் அம்மா இறந்துவிட, நான் ஒற்றைப் பிள்ளை - அதுவும் பெண் பிள்ளை என்பதால் என்மீது அதிகப்படி பிரியம் காட்டியவர். அவர் வசதியானவர் இல்லை. ஆனால் வறுமையிலும் செம்மையாக இருந்தார். அடுத்தவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்க அவரிடம் அன்பைத் தவிர ஏதும் இல்லை. அவரைப் புரிந்து கொள்ளாத அத்தையும் பிள்ளைகளும் அவரை அன்புக்கு ஏங்க வைத்தது எனக்குத் தெரியும்.

அப்பாவும் நிறையச் சம்பாதிக்கவில்லை. மனைவியின் மறைவைத் தன் சோம்பலுக்குத் திரையாக்கிக் கொண்டு நாட்களைக் கடத்திவிட்டார். இருந்த சகலத்தையும் என் திருமணத்தில் கரைத்துவிட்டு, மறுவருடமே இறந்தும் போனார்.

திருமணமாகி வந்த இடத்தில் இவருடைய குடும்பம் பெரியதாக இருந்தது. இவருக்கு திருமணமாகாத நான்கு தங்கைகள். குடும்பத்தின் சகல பொறுப்புகளும் இவர் தலையில்.

மாமா எனக்கு அடிக்கடி ஓர் அறிவுரை சொல்வார். 'எக்காலத்திலும் புருஷனின் பிரச்சினைகளுக்குத் தோள் கொடு. அவனுடைய குடும்பப் பிரச்சினைகள் தீரும்வரை உன் தரப்பிலிருந்து அவனுக்குக் கவலை அளிக்காமல் இரு.'

அதை அப்படியே ஏற்றேன். அவரிடம் கேட்டுக் கொண்டு குழந்தைப் பிறப்பைத் தள்ளிப் போட்டேன். உடன்பிறந்தோர் யாருமில்லாத நான் அவருடைய தங்கைகளையும், தம்பியையும் என்னுடைய உடன்பிறப்பாக மனப்பூர்வமாக எண்ணினேன். முதல் மூன்று வருடங்களில் இரண்டு தங்கைகளைக் கரையேற்றி அனுப்பினோம். ஒருத்திக்கு முழுக்க முழுக்க என் நகைகள்தான் போயின. எந்தவித வருத்தமுமின்றி என்னால் கொடுக்க முடிந்தது.

இவர் மனநிம்மதியுடன் டிபார்ட்மெண்ட் பரீட்சைகள் எழுதிப் பதவி உயர்வுகள் பெற்றார். நான் அஞ்சல் வழியில் என்

3

படிப்பைத் தொடர்ந்தேன். இரண்டு வருடங்களுக்கு முன்புதான் இந்த ஓட்டலில் ரிஸ்ப்ஷனிஸ்ட்டாகச் சேர்ந்தேன்.

அதன் பிறகுதான் கொஞ்சம் பொருளாதார ரீதியாக மூச்சு விட முடிந்தது. இவருடைய தம்பி படிப்பு முடிந்து, வேலை கிடைத்து செட்டில் ஆனார். மற்ற இரு தங்கைகளுக்கும் திருமணம் முடிந்தது. இவருடைய கடன்கள் அடைபடலாம் என்கிற நம்பிக்கை ஒளி சற்றே பளிச்சிடத் தொடங்கியது.

பணம் சேர்ந்ததும் ஒதுங்கிக் கொண்டாள் என்று கூடப் பேசினாள். ஒதுங்கி இருந்தால்தான் பணம் கொஞ்சம் சேர்ந்தது என்கிற நடுத்தர வர்க்க விதியை யாருடன் பகிர்ந்து கொள்வது?

திருமணம் முடித்து எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இனியாவது எனக்கென்று ஒரு வீடு, குழந்தை என்று ஆக வேண்டாமா?

என் கைகள் என்னையும் அறியாமல் வயிற்றைத் தடவின.

இந்த ஆண்டில் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்கிற யோசனையில் இருக்கிறோம்.

மாமாவே எனக்குக் குழந்தையாக வந்து பிறக்கப் போகிறாரோ!

வழியில் ஓர் ஊரில் காரை நிறுத்தினார் என்னவர்.

''ஏதாவது சாப்பிட்டுக்கோ. எல்லாம் முடிய ரொம்ப நேரமானாலும் ஆகும்'' என்றார். என் எண்ணமெல்லாம் மாமா மீது இருந்ததால் எனக்கு ஏதும் தேவைப்படவில்லை. அவர் மட்டும் போய் டிபன் சாப்பிட்டுவிட்டு எனக்கு காபி வாங்கித் தந்தார். ''இதையாவது குடிச்சுக்கோ!''

அப்போதுதான் கவனித்தேன். அவர் ஆபீஸிலிருந்து அப்படியே கிளம்பி வந்திருந்ததால் ஷூவுடன் இருந்தார். உடைகளும்கூட விலை உயர்ந்தவை. இவரும் வீட்டில் உடைமாற்றிக் கொண்டிருந்திருக்கலாம்..

பயணம் தொடர்ந்தது. ''என்னங்க...'' என்று அழைத்தேன்.

''ம்...''

''நாம் நேரே காரில் போய் அவங்க வீட்டில் இறங்க வேண்டாம். காரை எங்காவது விட்டுவிட்டு நடந்தே போகலாம். அதோடு, இன்னொண்ணு சொல்லுவேன். கோவிச்சுக்கக் கூடாது...'' என்று இழுத்தேன்.

''சொல்லு''

''வழியில் உங்களுக்கு ஒரு செருப்பு வாங்கிக்கலாம். சாவு வீட்டுக்கு ஷூவுடன் போவது சரியாப் படலை...'' என்றேன்.

சிரித்தார்.

**மா**மா உடம்பு முழுவதும் போர்த்தப்பட்டு முகம் மட்டும் தெரியும் வண்ணம் வைக்கப்பட்டிருந்தார். முகம் வீங்கியிருந்தது. பல நாட்கள் ஆஸ்பத்திரி, மருந்து என்று இருந்ததால் உடம்பு சீக்கிரம் நாற்றமெடுத்துவிடும் என்று இறுதிச் சடங்குகளை வேகமாகச் செய்து கொண்டிருந்தார்கள்.

''மாமா...'' என்று குரலெடுத்து அழ முயன்றேன். முடிய வில்லை. தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்ட மாதிரி இருந்தது. மாமாவின் பிள்ளைகளும், பெண்களும் மற்ற உறவுக் காரர்களும் என்னைப் பார்த்த பார்வைக்கு அர்த்தம் புரிய வில்லை. அத்தையின் அருகில் போய் உட்கார்ந்து அவளைக் கட்டிக்கொள்ள முயன்றேன். மற்றவர்களின் முகங்களும் கண்களும் அவர்களிடம் கண்ணீர் இனியும் மிச்சம் இல்லை என்று காட்ட நான் எவ்வளவோ முயன்று பார்த்தும் கண்ணீர் வர மறுத்தது அவஸ்தையாக உணர்ந்தேன்.

'அடிப்பாவி! இந்த அளவுக்கா அந்நியமாகிப் போவாள் ஒருத்தி...? நன்றி கெட்டவள்! இவளை அவ்வளவு பிரியமாக வளர்த்தவர் பிணமாகக் கிடக்கும்போது கூடக் கண்களில் ஒரு சொட்டு கண்ணீரைக் காணோமே!' என்று எல்லோரும் நினைக்கும் வண்ணமாக இது என்ன சோதனை...? கடவுளே!

'மாமா, நான் நன்றி கெட்டவளில்லை... உங்களை மறந்து விடவில்லை. எனக்கு இன்று அமைந்திருக்கும் வாழ்க்கைக்கு அடித்தளம் நீங்கள்தான் என்று ஒவ்வொரு கணமும் உங்களை நன்றியுடன் நினைத்தபடிதான் இருக்கிறேன்!'

மனம் அரற்றிக் கொண்டிருந்தது. ஆனால், சடங்குகள் முடிந்து மாமாவின் உடல் எடுத்துச் செல்லப்படும் வரையிலும் சரி. அதன்பிறகும் சரி...ஏதோ அடைத்துக் கொண்டது போல இருந்ததே ஒழிய, கண்ணீர் மட்டும் ஒரு சொட்டுகூட வரவே யில்லை.

''எனக்கு ஏங்க மாமா உடம்பைப் பார்த்ததும் அழுகை வரலே..?'' என்று கேட்டேன். என்னவரிடம் திரும்புகிற வழியில்.

சில விநாடிகள் என்னை உற்றுப் பார்த்துவிட்டுச் சொன் னார். .''ஏனென்றால், அங்கே நீ நீயாக இல்லை. வேஷம் கட்டிக் கொள்ள, அழுகிற ஸீனில் நடிப்பதற்கு நீ ஒன்றும் நடிகை இல்லையே,...''

அவர் சொன்னதை அப்போதைக்கு என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

**ம**றுநாள் வேலைக்குக் கிளம்புவதற்காக மேலலங்காரம், பூச்சுகள், பார்டர் கசங்காத புடவை, கழுத்தில் கூடுதல் செயின் வளையல்கள், வாட்ச் என்று அணிந்தபிறகு லிப்ஸ்டிக்கைச் சரி செய்வதற்காகக் கண்ணாடிமுன் நின்றபோது என்னை நான் முழுமையாகப் பார்த்தேன்.

அடிவயிற்றில் ஏதோ அழுத்திப் பிசைவது போன்ற உணர்வு. பொட்டலத்தினுள் இருக்கும் சுருள்கம்பி காகிதம் பிரியவும் படபடவென்று நிமிர்கின்ற வேகம் போல் உள்ளுக்குள் ஏதோ பொங்கிப் பெருக மாமாவின் முகம் கண்முன் வந்து நின்றது. நினைவுகள் கிளர்ந்தெழ கண்கள் மளமளவென்று குளம் கட்ட ''மாமா...'' என்கிற அலறல் அடிமனதின் ஆழத்திலிருந்து வெளிப்பட குமுறிக் குமுறி அழத் தொடங்கினேன்.

# 5. கூலிங் கிளாஸ் போட்ட வீடு

அரவிந்தனுடைய முகம் கொஞ்சம் இருண்டிருந்தது. எப்போதும் இல்லாவிட்டாலும் கூடியவரையில் புன்னகைத்தபடி இருக்கும் முகத்துக்குச் சொந்தக்காரன் அவன். அலுவல் தொடர்புகளுக்கான பழக்கத்தைத் தவிர என்னிடம் அதிக நெருக்கமும் இல்லாத அவன் என்னுடைய இருக்கை நாடி வந்ததே புதிய விஷயம். ஏதோ உதவி நாடி வந்திருக்கிறான் என்பதை அவன் முகம் அப்பட்ட மாகப் பறைசாற்றியது.

''எனக்கு அவசரமாக பத்தாயிரம் ரூபாய் தேவைப் படுகிறது. ஒரே வாரத்தில் திருப்பித் தந்து விடுகிறேன். இருக்கிறது, இல்லை என்கிற இரண்டு பதில்களில் ஒன்றாக மட்டும் சொல்லுங்கள். உங்களால் தர இயலுமா?'' என்று என்னிடம் கேட்ட போது அவனுடைய குரல் மிகவும் தாழ்ந்திருந்தது. தொண்ணூறு சதவிகிதம் இல்லை என்கிற பதிலை எதிர்கொள்ளத் தயாராக அவன் இருப்பதையே அது காட்டியது. அதுவே அவன் பால் இரக்கத்தை அபரிமிதமாக என்னுள் ஊற்றெடுக்க வைத்தது. சட்டென்று என் பாண்ட் பாக்கெட்டினுள் கையை விட்டு பணத்தை எடுத்து அவனிடம் நீட்டினேன்.

ஆச்சர்யம், ஆனந்தம் முதலான எதையும் காட்டிக் கொள்ளாமல் நன்றி மட்டும் தெரிவித்துக் கொண்டு அவ்விடத்தி லிருந்து நகர்ந்தான். அவனுடைய அவசரம் அத்தகையது போலும் என்று எண்ணிக் கொண்டேன்.

யாரிடமோ பணம் கேட்டு அது கிடைக்காமல் வேறு எதையோ வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது.

அது என்ன என்று தெரிந்தாக வேண்டும். இந்த மாதிரி விஷயங்கள் மறை பொருளாய்ப் புதைவதில்லை; விளைந்து விருட்சமாகி வெளியே வந்தே தீரும் என்பது காலவிதி. எனக்குப் பொறுமை உண்டு.

வயதின் நாற்பதுகளில் பொதுத்துறை நிறுவனத்தில் ஓரளவுக்கு உயர்பணிகளில் இருக்கும் எங்களுக்கு நல்ல சம்பளம் என்பதும் பத்தாயிரம் ரூபாய் குறைந்தகாலக் கைமாற்றுக்கு பெரிய தொகை அல்ல என்பதும் இதனைப் படிக்கிறவர்கள் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

என்னுடையது சராசரி மேல் நடுத்தரக் குடும்பம். ஒரு குழந்தைக்கு மேல் கூடாது என்று நான் சிந்தித்திருந்ததற்கு தண்டனையாக ஒரே பிரசவத்தில் இரட்டையாகப் பிறந்த பெண் பிள்ளைகள், பள்ளிப் படிப்பின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறார்கள். பேராசை இன்றிக் குடும்பம் நடத்த, அவர்களின் படிப்புச் செலவுக்குப் போகக் கொஞ்சம் எதிர்கால பயத்தில் மிச்சம் பிடித்து வைக்க, போதுமான சம்பளம் என்கிற கட்டாய திருப்தியுடன் என் வாழ்க்கை ஓடிக்கொண்டிருப்பதில் என் மனைவியின் அமைதி யான குணத்துக்குப் பெரும் பங்கு உள்ளது.

அரவிந்தனுடைய மனைவி வங்கி ஒன்றில் கிளை மேலாளராக இருப்பவள். ஒரே பையன்தான். அவனும் மெடிக்கலுக்குப் படித்துக் கொண்டிருப்பவன் என்கிற அளவில் மட்டுமே அரவிந்தனைப் பற்றி எனக்குத் தெரியும். ஏ.எஸ். நகரில் உள்ள கூலிங் கிளாஸ் போட்ட வீடு அவனுடையது என்று சொல்லுவார்கள். இந்த ஊருக்கு அதிகப்படியான ஆடம்பர அழகுடன் திகழும் வீடு. வெளிப்பகுதிக்கே கிரானைட் இழைக்கப் பட்டிருக்கும். கதவுகள் பித்தளைப் பூண்களுடன் பளபளக்கும். மாடிப்பகுதி முழுவதையும் குளிர்க்கண்ணாடி போர்த்தி இருக்கும். முக்கிய டாக்டர் ஒருவர் குடி இருப்பதாலும் அவர் மனைவி கொஞ்சம் பிரபலமான எழுத்தாளர் என்பதாலும் பலரின் கவனத் தையும் கவர்ந்த வீடு அது.

ஆஃபீஸில் அரவிந்தனுக்கு தாயுமானவன்தான் நெருக்க மானவன். அவர்கள் இருவரும்தான் ஒன்றாகவே திரிவார்கள். காண்டீன் போவதானாலும் லஞ்சுக்குப் போவதாக இருந்தாலும் ஒன்றாகவே போய்த் திரும்புவார்கள். கல்லூரி நாள் முதலான நட்பு என்று மற்றவர்கள் சொல்லக் கேள்வி. தாயுமானவனின் மனைவி அரவிந்தனுக்கு தூரத்து சொந்தம் என்றும் ஒருமுறை யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அவனை விட்டு அரவிந்தன் என்னிடம் கைமாற்று கேட்டதில் ஏதோ விவகாரம் இருந்தாக வேண்டும் என்கிற என் ஊகம் பொய்யாகவில்லை. மாலை என்னுடைய காரிலேயே வீட்டுக்கு வருவதாக அரவிந்தன் சொன்னபோது நான் வேறு திசையில் சொந்த வேலையாகப் போக இருப்பதாகச் சொல்ல வில்லை. அந்த வேலையைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இன்று அரவிந்தனின் வாயைப் பிடுங்க வேண்டும். இன்றைய சூட்டினைத் தவற விட்டால் நாளைய மசாலா அவ்வளவு சுவையுடன் இருக்க வாய்ப்பில்லையே.

''தாராளமா வாங்க'' என்று காரின் கதவைத் திறந்து விட்டேன். ''பகலில் ஆஃபீஸ்ல உங்களைக் காணலியே, ஏதும் அவசர காரியமா வெளியே போயிருந்தீங்களா?'' என்று ஆரம்பித்து வைத்தேன்.

''ரொம்ப நன்றி சார் சமயத்துக்கு நீங்க கொடுத்து உதவிய பணத்துக்கு'' என்றான் அரவிந்தன். ''அது சம்பந்தமாத்தான் பேங்குக்குப் போயிருந்தேன். அங்கே நல்ல கூட்டம், ரொம்ப தாமதமாயிடுச்சு.''

புன்னகையுடன் அந்த நன்றியை ஏற்றுக் கொண்டேன்.

அவன் இன்னும் நிறைய பேச நினைப்பதும் தொடக்கத் திற்கு சிரமப்படுவதும் தெரிந்தது. ''தவறா நினைக்க மாட்டீங் கன்னா ஒண்ணு கேட்கலாமா? காலையில் ரொம்ப டிஸ்டர்ப்டா இருந்தீங்க. என்ன விஷயம்? எனி திங் சீரியஸ்? ஆர் ஆல் யுவர் பிராப்ளம்ஸ் சால்வ்டு நௌ?'' என்று கேட்டேன் இதமாக.

''உங்க கிட்ட சொல்றதுக்கென்ன சார்? ஆஃபீஸில் தாயுமானவன் எனக்கு நீண்ட கால நண்பன் என்பது உங்களுக்குமே தெரிந்திருக்கும். அவனிடம் தான் முதலில் நான் பணம் கேட்டேன். அவன் இல்லைன்னு சொன்னதால் தான் உங்களைத் தொந்தரவு பண்ணும்படி ஆயிடுச்சு.''

''பரவாயில்லை. அவருக்கு என்ன சூழ்நிலையோ'' என்றேன்.

''ஒரு கஷ்ட சூழ்நிலையும் இல்லை சார். சரி அப்படியே இருந்தால் தான் என்ன? நான் பணம் கேட்டேன். தர்றதுக்கு இஷ்டமில்லைன்னா என்னிடம் இல்லைன்னு ஒரு வார்த்தையில் முடிச்சுக்க வேண்டியது தானே? என்னென்ன சொன்னான் தெரியுமா சார்? அவனெல்லாம் ஒரு நண்பனா?'' என்றான் அரவிந்தன் கழுத்தைத் திருப்பி வானத்தை வெறித்தவனாக.

என்னென்ன சொன்னான் தாயுமானவன் என்பது குறித்த ஆவலும் என்னென்ன சொல்லி இருக்கக் கூடும் என்பது குறித்த ஊகங்களும் என்னுள் ஓடத் தொடங்கினாலும் நானாகக் கேட்பது முறையில்லை என்கிற இங்கிதம் என் நாவினைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

உடைப்பெடுத்த அணை எப்படி பாதித் தண்ணீரைத் தேக்க இயலும்? அரவிந்தன் தொடர்ந்து பேசினான். ''அவன் சொல்றான் சார். நீ எப்போவாவது எனக்கு கைமாத்து கொடுத்திருக்கியா? என்னை விடு, யாருக்காவது கொடுத்த பழக்கம் இருக்கா? கேட்கும் போதெல்லாம் பணம் இல்லை இல்லைன்னு பஞ்சப்பாட்டுதானே பாடி இருக்க? உன்னிடம் ஏன் பணம் இல்லை? ஐந்து பைசா கிடைத்தாலும் அதைப் பத்தாக்குவதற்கு ஏதாவது திட்டம் போட்டு முடக்கிடற. வட்டிக்குக் கொடுத்து வாங்கறதும் வேற மாதிரியான முதலீடுகளில் போடறதும் பங்கு மார்க்கெட்டில் நீ சம்பாதிச்சுத் தள்ளறதும் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சயா? அப்போ உன் பணம் மட்டும் பெருகணும். எங்க பணமெல்லாம் சும்மா தேங்கி இருக்கணும் அல்லது உன்னை

மாதிரி ஆட்கள் பெருக்கிக்கிடறதுக்கு இளிச்சவாய்த் தனமா உதவணும். அது இதுன்னு பேசிட்டே போறான்...'' அரவிந்தனுக்கு மூச்சு திணறியது. பேச்சின் தொடர்ச்சி தடைப்பட்டது.

''ம் சொல்லுங்க'' என்று நான் ஊக்க முடியாத விஷயம் இது. ''சரி, விடுங்க, மனுஷங்க எல்லாரும் ஒரே மாதிரியாவா இருக்காங்க'' என்று சமாதானம் சொல்லவும் என் மனம் இடம் தரவில்லை.

''ரொம்ப சங்கடமா போயிடுச்சு சார். நான் என் பணத்தை என்னவும் செய்திட்டுப் போறேன். இவனுக்கு என்ன சார்? இவனை எதுவும் செய்யவிடாமல் தடுத்தோ இவனுடைய ஏதாவது வாய்ப்புக்களைத் தட்டிப் பறிச்சோவா நான் சம்பாதிக் கிறேன்? என்னை சுயநலமிங்கறான். யார்தான் சார் சுயநலம் இல்லை? இவன் தான் என்றில்லை சார். ஆஃபீஸில் பலருக்கும் இதே மாதிரியான சிந்தனை தான் சார். அடுத்தவன் என்ன செய்யறான் எவ்வளவு சம்பாதிக்கிறான் என்னென்ன சொத்து சேர்க்கறான் இதே பிழைப்பு. என்னால் பட்டியல் போட முடியும் சார் யார் யார் கிட்ட என்னென்ன இருக்குனு. அதையெல்லாம் கண்டுகிட்டா இருக்கேன்? பொறாமை சார், எல்லாம் பொறாமை. இவ்வளவு பொறாமையை உள்ளுக்குள் ஊற வச்சிட்டே என்னுடன் பழகி இருக்கான்னு இப்போதான் தெரியுது. நண்பனாச்சேன்னு நான்தான் ஏமாந்திருக்கேன். சே.''

கொட்டிவிட்ட விடுபடலில் அவன் அமைதியாகிவிட எனக்குள் குறைந்த காற்றழுத்த மண்டலம் உருவாகத் தொடங்கி இருந்தது. தாயுமானவன் சொன்னவற்றில் என்ன தவறு இருக் கிறது என்று தான் தோன்றியது. நான் அரவிந்தனுக்குப் பணம் கொடுத்ததே தப்போ என்கிற திசையில் என் சிந்தனை பயணப் படத் தொடங்கி இருந்தது. ''நான் கேட்டவுடன் பையிலிருந்து எடுத்துத் தந்தீர்களே, நீங்கள் ஏதாவது தேவைக்காக வங்கியி லிருந்து எடுத்து வைத்திருந்தீர்களா? எனக்குத் தந்துவிட்டதால் உங்களுக்கு ஏதும் சங்கடம் நேர்ந்து விடவில்லையே'' என்று

மரியாதை நிமித்தமாகக்கூட அவன் கேட்காதது இப்போது நினைவு வந்தது.

கார் விரைந்து கொண்டிருக்க, திடீரென்று அரவிந்தன் ஏதோ யோசித்துக் கொண்டவன் போல் கொஞ்சமாகச் சிரித்தான்.

''தாயுமானவனுக்கு என்னைப்பற்றி நல்லாத் தெரியும் சார். ரொம்பநாள் பழக்கமில்லையா? அதனாலேயே வயித்தெரிச்சலில் இருந்திருக்கான். இன்னிக்கு நான் பணம் கேட்டது எதுக்குன்னு தெரிஞ்சிருந்தா இன்னும் பொசுங்கிப் போயிருப்பான்'' என்று பீடிகை போட்டது போல் சொல்ல எனக்குள் அதை அறிந்தே ஆக வேண்டும் என்கிற வேகம். இவனுடைய சிரிப்பில் தெரியும் அலட்சியம் அப்படி ஒன்றும் தலை போகிற அவசரத்துக்காக என்னிடம் அவன் பணம் வாங்கி இருக்கவில்லை என்று காட்ட என்னுள் எரிச்சலும் முளைவிடத் தொடங்கி இருந்தது.

''என் மாமா சினிமாவுக்கு ஃபைனான்ஸ் பண்றவர் சார். அவர் அவசரமா ரெண்டு லட்ச ரூபாய் கேட்டார். அவரிடம் பணம் போனால் வட்டி கரெக்ட்டா வந்திடும். கொடுப்பதற்கு எனக்கு பத்தாயிரம் ரூபாய் உள்ளடித்தது. அதைத்தான் உங்களிடம் வாங்கினேன். நான் கலெக்ஷனுக்குப் போட்டிருக்கும் ரெண்டு மூணு டிவிடெண்ட் செக்குகள் அடுத்த வாரத்துக்குள் கிளியர் ஆகி வந்துவிடும். உங்க பணத்தைத் தந்திடுவேன். இந்த விஷயத்தை ஊகிச்சிருப்பான் தாயுமானவன். அந்த வயித் தெரிச்சலில் தான் பேசி இருக்கான். போறான் சார். அவனும் சராசரி மனுஷன் தானே? எல்லாரும் உங்களை மாதிரி இருப்பாங்களா?''

இன்று ஏதோ நல்ல நாள் என்றும் மகள்களுக்கு ஏதாவது தங்கத்தில் இன்று வாங்கினால் பெருகும் என்றும் மனைவி சொன்னதற்காக வங்கியில் இருந்து எடுத்த பணம் அது. அரவிந்தனின் முகத்தைப் பார்த்து ஏதோ தலை போகிற அவசரம் போலும். இல்லையென்றால் கணவனும் மனைவியும் வேலை பார்க்கும் வீட்டில் அவசரத் தேவை ஏன் வருகிறது என்கிற

எண்ணத்தில் தானே முன்பின் யோசிக்காமல் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து நீட்டினேன்.

எனக்குள் நான் ஏமாந்துவிட்டதாக ஓர் உணர்வு வந்து அழுத்தியது.

எந்த வகையிலான ஏமாற்றம் என்று புரியவில்லை. என் பணத்தை அவன் ரெட்டிப்பாக்கிவிட்டு என்னை இளிச்சவாய னாக்குகிறானே என்கிற பொறாமையா?

அந்த உணர்வு இருந்தால் எனக்கு இத்தனை சதவிகித வட்டி போட்டுக் கொடுங்க என்று என்னால் கேட்டுவிட முடியாதா? ஒருவாரக் கைமாற்றுக்கு ஏதும் பேசாமல் பணத்தைக் கொடுத்து விட்டு இனிமேல் வட்டி பற்றிப் பேசுதல் சாத்தியமா? என் இயல்புக்கு ஒத்து வரும் செயலா அது? என்னால் எப்படி அந்த மாதிரி உணர முடிகிறது?

அவன் பணத்தைத் திருப்பித் தரப்போகும் நாளில் தங்கத்தின் விலை இன்றைய விலையைவிட அதிகமாகி இருந்தால்... என்கிற எண்ணம் அந்த உணர்வு நெருப்புக்கு நெய் வார்க்க முயன்று தோற்றது. இவ்வளவு தூரம் சுயநலவாதியா இவன்? சே! என்கிற வெறுப்பினை ஏற்படுத்திக் கொள்ள பிரயத்தனப்பட்டேன்.

அவன் இவ்வளவையும் என்னிடம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லையே. நிஜமான பணத்தேவை என்பது மாதிரி யான பொய்யை ஜோடித்து இருக்கலாமே. யோக்கியன் என்பதால் தானே வெளிப்படையாகச் சொல்கிறான்? அவன் காரணம் சொல்லும் வரை எனக்குள் எதுவும் தோன்றாததும் அந்தப் பணம் என்ன ஆகப்போகிறது என்று தெரிந்த மாத்திரத்தில் இவ்வளவு உணர்வுகளும் பொங்க முயல்வதும் எனக்குள்ளே இருந்த மூன்றாவது அம்ப்பயர் முன் விசாரணைக்கு நின்றன.

எனக்கு சாமர்த்தியம் இல்லை அதற்கு யாரை நோவது? நமக்கு இந்த மாதிரி ஒரு மாமா இல்லையே என்கிற பொறாமை தான் ஏமாற்றம் என்பது போல் கௌரவ வேடம் போடுகிறதா?

இனிமேல் எப்போதாவது அவன் என்னிடம் பணம் கேட்டுப் பெற்றுவிட முடியுமா? அப்பாடி! எவ்வளவு விவரமாக இருக்கிறார்கள் மக்கள். நான் தான் இந்த தலைமுறைக்கே சம்பந்தமில்லாதவனாக இருக்கிறேன். இதுவே கடைசி. இதில் பாடம் கற்கவில்லை என்றால் நான் மனிதனே இல்லை.

குழப்பங்களுடன் என்னைத் தனித்து விட்டு தன்னுடைய வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டான் அரவிந்தன். ''உள்ளே வந்து காஃபி சாப்பிட்டுப் போங்க என்று சொல்ல முடியாததற்கு வருந்துகிறேன் சார். என்னுடைய மனைவி இன்னும் வந்திருக்க மாட்டாள். அவளுடைய வங்கியில் வருடாந்தரக் கணக்கு முடிக்கும் சமயம். அதிக வேலை'' என்று இழுத்தாற்போல் சொன்னான். ''பரவாயில்லை'' என்று கிளம்பினேன். பாங்க் உத்தியோகம், என்ன சம்பளம் வரும்!

தாயுமானவன் சொன்னதாக அரவிந்தன் சொன்னவற்றில் நீ யாருக்காவது எப்போதாவது கைமாத்து கொடுத்ததுண்டா என்கிற கேள்வி அந்த முழு உரையாடலிலும் பதில் இல்லாமல் நின்றிருப்பது மற்ற எண்ணங்களை அகற்றிக் கொண்டு முன் வந்தது. பணத்தைக் கொடுத்து கேணையன் ஆகி விட்டோமோ என்கிற உறுத்தலைத் தாண்ட வேண்டுமென்றால் இந்தக் கேள்விக்கு அனுபவபூர்வமான பதிலை அறிந்தே ஆக வேண்டும் என்கிற வேகம் என்னுள் எழுந்தது.

அரவிந்தனிடம் பதினைந்தாயிரம் ரூபாயாவது அடுத்த வாரம் கேட்டுப் பார்க்க வேண்டும் என்கிற முடிவுக்குத் துணை யாக அதற்கான பொருத்தமான காரணத்தை இப்போதிருந்தே சிந்திக்கத் தொடங்கினேன்.

# 6. மன்னிப்பு

செந்தில் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு வித்யா மிகவும் சந்தோஷமாகக் கிளம்பினாள். அவளுடைய சந்தோஷம் காண வியப்பாகவும் கொஞ்சம் எரிச்சலாகவும்கூட இருந்தது எனக்கு. எல்லோருமே நல்லவர்கள்; எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பன போன்ற பல நல்ல குணங்களின் மொத்த உருவம் அவள். எத்தனை முறை காயப்படுகிறாள். எத்தனை முறை அவமானம் அடைகிறாள். எத்தனை முறை உடைந்து போகிறாள். அப்புறமும் சகலமும் மறந்து எல்லோரிடமும் பழகுகிறாள்.

இந்த செந்தில் விவகாரத்தில் முன்பு எந்த அளவுக்கு இவளை முன்னிறுத்தி இவளுடைய அப்பாவித்தனத்தை மற்றவர்கள் உபயோகப்படுத்தினார்கள் என்று எனக்கே தெரிந்தது. எவ்வளவோ எச்சரிக்கை செய்து பார்த்தேன். அவள் கேட்பதாக இல்லை. செந்தில் வீட்டாராலும் ரமாவாலும் உதாசீனப்படுத்தப் பட்டதெல்லாம் எளிதில் மறக்கக் கூடிய விஷயங்களா? அவள் அதன் பிறகு காயப்பட்டுக் கலங்கி அழும் போது கணவன் என்ற முறையில் நான் தானே தேற்ற வேண்டியிருந்தது? என்னால் அது போன்ற நினைவுகளை எளிதாக மறக்க முடிவதில்லை. இவள் மறந்து விடுகிறாள். இல்லை என்றால் இப்படிப் பரபரப்பாக ஏதோ சொந்தத் தம்பியின் வீட்டு கிரகப்பிரவேசத்திற்குக் கிளம்புவது போல் புறப்படுவாளா?

''நான் முன்னமே சொன்னேனா இல்லையாங்க, செந்தில் நல்லா பெரிய ஆளா வருவான்னு? இப்போ பார்த்தீங்களா?

இவ்வளவு கொஞ்ச வயசிலேயே சொந்த வீடு கட்டி கிரகப் பிரவேசம் பண்ற அளவுக்கு வளர்ந்திட்டானா இல்லையா?'' என்றாள். பெரிய விஷயம் ஒன்றை சாதித்த திருப்தியில், சம்பந்தம் இல்லாத ஒருவனின் முன்னேற்றத்துக்காக துளிக்கூட பொறாமை இல்லாத சந்தோஷம் அடைய இவள் ஒருத்தியால்தான் முடியும்.

''ரமாவும் கூட இப்போ எல்லாவற்றையும் மறந்திட்டு நல்லா பழகறாள்னு செந்தில் சொன்னான். இது தாங்க நான் எதிர்பார்த்தது'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டாள்.

இருக்காதா பின்னே? ரமாவுக்கும் செந்திலுக்கும் முன் னின்று கல்யாணம் செய்து வைத்தவளாயிற்றே! ஒரு நாளில்லை என்றால் ஒரு நாள் ரமா தன்னைப் புரிந்துகொண்டு அன்பு செலுத்திப் பழகுவாள் என்கிற நம்பிக்கையை அவ்வளவு சீக்கிரம் அவளால் விட்டுவிட முடியுமா?

செந்தில் இவளுடைய தோழியின் தம்பி. தோழி என்றால் பக்கத்து வீட்டிலேயே இருந்ததால் கிட்டத்தட்ட ஒரே குடும்ப மாகப் பழகியதாகச் சொல்லிக் கொள்வார்கள். தோழி இவளு டைய பெற்றோரை அம்மா அப்பா என்றழைப்பதும் இவள் அவளுடைய பெற்றோரை அம்மா அப்பா என்றழைப்பதுமாக நெருக்கம் காட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். செந்தில் தன் சொந்த அக்காவைவிட அதிகமாக இவள் மீதுதான் பாசம் காட்டு வான். என் மீதும் நிஜமான மரியாதை உள்ளவன். அவன் ரொம்ப நல்ல பையன்தான் என்பதில் இரு கருத்துக்கு இடம் கிடையாது. பத்து வருடங்களுக்கு முன் அவனுக்குத் திருமணம் நடந்த போது அவனிடம் பெரியதொரு குறை இருந்தது. அவனுக்கு படிப்பறிவு கிடையாது.

இதுபற்றித் தெரிய வந்தபோது முதலில் என்னால் நம்பவே முடியவில்லை. அவனைப் பார்த்தால் எவரும் படிக்காதவன் என்று சொல்ல மாட்டார்கள். அப்படி ஒரு தோற்றம். தெளிவாக ஓரளவு உலக அறிவோடு பேசுவான். அது எல்லாமே சினிமா

பார்த்தும் மற்றவர்களுடன் பேசியும் மட்டுமே பெற்ற அறிவு என்று நெருங்கிப் பழகியவர்களால் கூடக் கண்டுபிடிக்க முடியாது. அதெப்படி இந்த நாட்களில் கொஞ்சம்கூடப் படிக்காமல் ஒரு பையன் வளர்ந்திருக்க முடியும் என்று கேட்ட போது வித்யா சொன்ன பதில் எனக்கு இன்னும் வியப்பை அளித்தது.

அவனுடைய தாத்தாதான் அவனைக் கெடுத்தாராம். அவர் ஒரு திண்ணைப்பேச்சு ஆசாமி. வாழ்நாள் முழுவதும் ஒரு வேலையும் செய்யாமல் வெறும் வாய்ப்பேச்சிலேயே முன் னோர் சொத்தை அழித்தபடி குந்தித்தின்று குன்றை மாய்த்தவராம்.

மகன் பிள்ளைப் பேரன் என்று செந்திலை அவருக்கு ரொம்பவும் பிடிக்குமாம். செந்திலின் சிறு வயதிலேயே அப்பா இறந்து போக அம்மாவின் கண்டிப்புக்குப் பயந்து தாத்தாவிடம் தஞ்சம் அடைந்து விட்டவனைத் தனக்கு துணையாக்கிக் கொண்டு பள்ளிக்குப் போகவிடாமல் ஊர் சுற்ற வைத்திருக்கிறார் அந்தப் பெரியவர். இவனும் எவருடைய கண்டிப்பையும் கண்டு கொள்ளாமல் அலட்சியமாகவே வளர்ந்திருக்கிறான். அவனைக் குட்டிச்சுவராக்கிவிட்ட தாத்தா அவனுடைய பதினைந்தாவது வயதில் இறந்து போன பிறகு புத்தி வந்திருக்கிறது. காலம் கடந்த ஞானம். முதியோர் கல்வி வகுப்புகள், பிரைவேட் டியூஷன் என்றெல்லாம் சேர்ந்து படிக்க முயற்சி செய்திருக்கிறான். அந்த இடத்தின் மக்களுக்கு சம்பந்தமில்லாத இளமையோடு இருந்ததும் மனதுக்குள் இருந்த கூச்ச மனப்பான்மையும் அவனைப் படிக்க விடாமல் செய்துவிட நான் சம்பாதிக்கப் போகிறேன் என்று இறங்கி விட்டானாம்.

எனக்கு அவனிடம் பிடித்த குணம் அவனுடைய தன்னம்பிக்கை. எப்படியும் முன்னேறிவிட முடியும் என்பதில் உறுதியாக இருந்தான். சொந்த வீட்டின் கேலிகளையும் அலட்சியங்களையும் அவன் பொருட்படுத்தியதே இல்லை. பெட்டிக்கடை, பலசரக்குக் கடை, பத்திரிகைக் கடை, பழக்கடை, சினிமாக் கொட்டகையில் கோன் ஐஸ்கிரீம் கடை, காய்கறிக்

கடை, மார்க்கெட்டில் மொத்த வியாபாரம், ஏலம் என்று ஏதேதோ இடங்களில் வேலை பார்த்தான். படிப்பில்தான் டல்லாக இருந்தானே ஒழிய இந்த விஷயங்களில் மஹா சுறுசுறுப்பு அவன்.

வித்யாதான் அவனுக்கு நிறைய ஊக்கம் கொடுத்தவள் என்பதால் அவளை அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும். அவன் அளவுக்கு அவனுடைய அம்மாவோ அக்காவோ வெளிப்படை யானவர்கள் கிடையாது; காரியக்காரர்களாகத்தான் தெரிந்தார்கள் எனக்கு.

அவனுடைய தாழ்ச்சியான நேரங்களில் அலட்சியமாக இருந்த அவனுடைய அக்காவும் அம்மாவும் அவன் நிலை உயர ஆரம்பித்ததும் எங்க செந்திலைப் போல் உண்டா என்று பெருமை அடித்துக் கொள்ளத் தொடங்கிவிட அதையே தன் வெற்றி என்று களங்கமின்றி சந்தோஷப்பட்டாள் வித்யா.

திடீரென்று ஒருநாள் செந்திலின் அம்மா ஒரு பெண்ணு டைய ஜாதக விவரங்களுடன் வித்யாவிடம் வந்தாள். ''இந்தப் பொண்ணு எல்லா விதத்திலயும் பொருந்தி வர்ற மாதிரி இருக்கு வித்யா. பேரு ரமாவாம். ப்ளஸ் டூ வரைக்கும் படிச்சிருக்கு. இவன் தான் படிக்கலை. பொண்ணாவது படிச்சிருக்கிறது நல்லது தானே? வாரிசு கொஞ்சமாவது படிப்பறிவோட வரும் இல்லையா?

வித்யா அந்தப் பெண்தான் செந்திலுக்கு என்பது போல் மேற்படி செயல்களில் இறங்கிவிட்டாள். செந்திலின் அக்கா, அவள் புருஷன் எல்லாம் ஏதேதோ சாக்கு போக்குகளில் அவ்வப் போது காணாமல் போக இவள்தான் அலைந்தாள். பெண்ணிடம் மாப்பிள்ளையின் படிப்பு டிகிரி இன்கம்ப்ளீட் என்றும், அவள் தாய் மாமனிடம் எஸ்.எஸ்.எல்.சி என்றும், அவள் அப்பாவிடம் எட்டாவது என்றும் விதவிதமாகச் சொல்லி வைத்து அந்தத் திருமணம் நடந்தது. பொய்களைச் சொன்னவர்களெல்லாம் யாரோ எவரோ என்றிருக்க வித்யாதான் எல்லாக் காட்சிகளிலும் இருந்ததாகப்பட்டது.

''ரொம்ப ரிஸ்க் எடுக்கற நீ வித்யா'' என்று பலமுறை எச்சரித்தேன்.

''இதில் கொஞ்சமும் எனக்கு வருத்தமோ உறுத்தலோ இல்லைங்க. நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். நல்ல பொண்ணா தெரியறா. கூடப் பிறப்புன்னு ஆம்பளைப் பையன் கள் இல்லை. செந்திலால் அந்தக் குடும்பமும் லாபப்படும். அவனுக்கும் இதனால் உயர்வு வரும் என்று படுகிறது,'' என்றாள்.

''அதெல்லாம் சரி, அந்தப் படிப்பு விவகாரம்?''

''அதற்கென்னங்க பண்றது? நிச்சயமா நான் அந்தப் பொண்ணுக்கு துரோகம் பண்ணலை. செந்தில் அவளுக்கு ஒரு நல்ல புருஷனா இருப்பான். அவளுக்கு ஏமாற்றம்னு ஏதாவது இருந்தால் அதுவும் இவனுடன் குடும்பம் நடத்த ஆரம்பிச்ச கொஞ்ச நாள்ல சரியாயிடும்னு எனக்கு நம்பிக்கை இருக்குங்க...''

கல்யாணத்திற்குப் பின் அந்த விவகாரம் வெடித்த போது, தான் மிக மோசமான முறையில் ஏமாற்றப்பட்டதாக பெரிய தாண்டவமே ஆடிவிட்டாள் ரமா. இரண்டு குடும்பத்துப் பெரியவர் களும் கூடி பஞ்சாயத்து பண்ணுவது போல் ஆகிவிட்டது விஷயம். பையனுடைய குணம், சம்பாதிக்கும் திறமை, சாமர்த்தியமான பேச்சு, மனைவியை நல்லபடியாக வைத்துக் கொள்ளும் பொறுப்பு முதலான எல்லாக் கணைகளையும் அவருடைய படிப்பு பற்றி ஏன் பொய் சொன்னீர்கள் என்கிற ஒரே பதில் கணையில் வீழ்த்தினாள் ரமா.

வித்யா சமாதானம் செய்ய முயன்ற போது, 'நீ யாரும்மா இந்த வீட்டு விவகாரத்துல தலையிட? ஆரம்பத்துல இருந்து நீதான் இந்தப் பொய்களுக்கான மூல காரணகர்த்தான்னு தெரியுது' என்று அந்த வீட்டுப் பெரிய பெண் ஒருத்தி கூறிய போது பேச வேண்டியவர்கள் காட்டிய அலட்சிய மௌனம் என்னை அதிர்ச்சியுற வைத்தது.

அதன் பிறகு நாங்கள் செந்தில் வீட்டுக்குப் போவது அடியோடு நின்றுவிட்டது. ஆனால் செந்தில் மட்டும் அவ்வப் போது வந்து போவான். அவனுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் எங்களுக்குத் தெரிந்தது. ரமாவுடன் நாளாவட்டத்தில் சமாதானம் ஆகிவிட்டதையும் கொஞ்சம் கொஞ்சமாக அவள் அவனுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பதையும், யாருடனெல்லாம் சண்டை போட்டாளோ அவர்களுடனெல்லாம் சமாதானம் ஆகிவிட்டாள் என்பதையும் இப்போதெல்லாம் அவனுடன் சந்தோஷமாகவே இருக்கிறாள் என்பதையும் அவன் கூற வித்யா ரொம்பவும் மகிழ்ந்து போனாள். அந்த சந்தோஷம் தந்த உந்துதலில்தான் கிரகப்பிரவேசத்துக்கும் உற்சாகமாகக் கிளம்பினாள்.

கிரகப்பிரவேச வீட்டில் எல்லாம் நிறைவாக இருந்தது. எல்லோரும் எல்லோருடனும் நன்றாகப் பேசிக் கொண்டார்கள். வித்யா வாங்கிக் கொடுத்த குத்துவிளக்கைதான் ஏற்றினார்கள். செந்திலின் சுறுசுறுப்பைப் பாராட்டினார்கள்.

ரமாவுடைய தங்கையின் மேற்படிப்புக்குக்கூட செந்தில் செய்கிற உதவிகளை சிலாகித்துச் சொன்னார்கள். ரமாவுக்கு இப்படி நல்ல மாப்பிள்ளையை ஏற்பாடு செய்த வித்யாவை ஆளாளுக்குப் புகழ்ந்தார்கள். முன்பு ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் குறித்து எவர் மன ஓரத்திலும் நினைவின் நிழலை பார்க்க முடியவில்லை. பெண்கள் பக்கம் எப்படி இருந்தது என்று அறிய முடியவில்லை.

திரும்பி வரும் வழியில் வித்யாவின் முகத்தில் சந்தோஷத் தையும் மீறி ஒரு வலி. எனக்குத் தெரியாதா என்ன, மனைவி ஆயிற்றே!

''என்ன வித்யா?'' என்று கேட்டேன்.

''ரமா என்னிடம் மட்டும் சரியாகவே முகம் கொடுத்துப் பேசலைங்க'' என்றாள்.

மௌனம் சாதித்தேன். நான் ஓரளவுக்கு இதை எதிர்பார்த்திருந்தேன். ஆனால் வித்யாவிடம் உடைத்துச் சொல்ல மனம் வரவில்லை.

ரமாவால் தன் வாழ்நாள் முழுதும் வித்யாவை மன்னிக்கவே முடியாது என்றுதான் பட்டது. வித்யாவிடம் அதைச் சொல்லாமல் அப்படியே தோளோடு அணைத்துக் கொண்டேன்.

''ரமாவும் செந்திலும் இப்போ சந்தோஷமா ஒற்றுமையா இருக்காங்க இல்லையா?''

''ஆமாம்''

''அதுதானே நீ விரும்பியதும்?''

''நிச்சயமா''

''அந்த சந்தோஷ வெளிச்சத்தின் நிழல்தான் இந்த வருத்தமும். விடு'' என்றேன்.

# 7. கொக்கொக்க

''ஹரிராசந்த் அங்கிளைப் பார்த்தேன் அண்ணா'', என்று ஆரம்பித்து அடுத்த அரைமணி நேரம் ராஜி பேசினாள் செல்ஃபோனில்.

சென்ற வாரம் சந்திரா சித்தி வீட்டு கிரகப்பிரவேசத்துக்குப் போயிருந்தாள். நான் போக முடியவில்லை. அலுவலகத்தில் அமைச்சரின் விசிட் இருந்தது. முக்கியப் பொறுப்பில் இருக்கும் எனக்கு விடுப்பு மறுக்கப்பட்டது. மனைவிக்கு நிறை மாதம். பிரசவத்திற்கு அம்மா வீடு போயிருக்கிறாள். வாழ்த்துத் தந்தி மட்டும் அனுப்பி இருந்தேன்.

எந்த விசேஷ வீட்டுக்குப் போய் வந்தாலும் நிகழ்ச்சி குறித்தும் அங்கே சந்தித்தவர்கள் குறித்தும் என்னிடம் முழுதுமாக ஒப்பிக்காவிட்டால் ராஜிக்குத் தூக்கம் வராது. மாப்பிள்ளை இவளுக்கு நேர் எதிர். சென்னைக்காரர்கள் தண்ணீரைப் புழங்குவது போல் தான் வார்த்தைகளை உபயோகிப்பார். விஷயத்தைத் தெரியப்படுத்த எத்தனை வார்த்தைகள் அவசியமோ அதற்கு மேல் ஒரு வார்த்தைகூடப் பேசுவதற்கே முடியாது அவருக்கு. ராஜியின் மடை திறந்த பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாலே தனக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுவிடும் என்று பயந்தோ என்னவோ அவளுக்கு செல்ஃபோன் வாங்கித் தந்து, நீயாச்சு, உன் அண்ணன் ஆச்சு, அவரிடம் பேசிக்கோ, என்னை விட்டுடு தாயே என்று ஒதுங்கிக் கொண்டார்.

அதற்காக எனக்கும் ராஜிக்கும் பாசமலர் சிவாஜி ஒற்றுமை என்று அர்த்தம் இல்லை. அவளுக்கு கமெண்ட் அடிக்காமல்

பேச்சுக் கேட்க ஒரு ஆள் வேண்டும்; எனக்கு நம்மை விட்டால் அவளுக்கு யார் இருக்கா என்கிற பச்சாதாபம். அவ்வளவுதான். மற்றபடி தன் காரியங்களில் கண்ணாக இருப்பாள் அவள். நானுமே?

கிரகப்பிரவேச நிகழ்ச்சியை விடவும் அங்கே வந்திருந்த உறவினர்கள் பற்றிய விமரிசனங்களை விடவும் எனக்கு ஆர்வம் அளித்த செய்தி ஹீராசந்த் மாமா, சித்தி வாங்கியுள்ள அதே ஃப்ளாட்ஸின் மேல்மாடியில் வாடகைக்கு இருக்கிறார் என்பதுதான்.

எங்கே இருக்கிறார் என்றே தெரியாமல் தொடர்பு விட்டுப் போய்விட்டதே என்று அடிக்கடி நிஜமாகவே கவலைப்படுவோம் அவரைக் குறித்த பேச்சு எழும்போதெல்லாம். அவர் இப்போது பார்க்க முடிகிற எல்லைக்குள் வந்து விட்டார் என்கிற செய்தியே எனக்கு உற்சாகம் அளித்த போதிலும் தொடர்ந்து ராஜி சொன்ன விஷயங்கள் மனதில் ஒருவித பாரத்தைத் தான் ஏற்றின.

''பாவமா இருந்ததுண்ணா! ஆண்ட்டி கழுத்தில் வெறும் மஞ்சள் கயிறுதான் இருக்குது இப்போது. அது கூடப் புதுசா இல்லை.''

என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை அப்படி ஒரு கோலத்தில் அத்தையை. நான் சிறு வயதில் பார்த்த அத்தை கழுத்திலும் கைகளிலும் தங்க நகைகள் டாலடிக்க வலம் வந்தவள். நாங்கள் ஏழ்மையில் இருந்த காலம் அது. ஏழ்மையை மீறி என்னுடைய மற்றும் ராஜியுடைய முகங்களில் ஏதோ தேஜஸ் இருக்கிறது என்று சொல்லிச் சொல்லி அணைத்துக் கொள்வாள் அத்தை.

அப்பாவின் நேர்மையான சொற்ப வருமானம் தவிர, சொத்து என்று ஏதும் இல்லாமல் நாங்கள் வளர்வதற்குத் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் அது. இந்தக் குடும்பம் இனி இவ்வளவுதான்; இவர்களின் வளர்ச்சிக்கு வாய்ப்புகள் ஏதும்

இல்லை என்று கருதியோ என்னவோ எங்களுடைய இரத்த சம்பந்த உறவுகள் இடைவெளி ஏற்படுத்திக் கொண்டு விலகி இருந்த நேரம் அது.

நாங்கள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர்தான் ஹீராசந்த் மாமா. அவர்களுக்குக் குழந்தைகள் கிடையாது. குழந்தைகள் இல்லாத வீடு எப்படி சாத்தியம், அத்தையின் கழுத்திலும் கைகளிலும் இருக்கின்ற சமாசாரங்கள் ஏன் நம் அம்மாவின் கைகளில் இல்லை என்பது போன்ற கேள்விகளுக்கான விடைகள் ஒரு புறம் இருக்க கேள்விகளின் அர்த்தம் கூடப் புரியும் முன்பே நானும் ராஜியும் மாமாவுக்கும் அத்தைக்கும் ராசியாகிவிட்டிருந் தோம்.

அவர்கள் வீட்டில் எதுவும் வாங்கிச் சாப்பிடக்கூடாது; எந்தப் பொருளையும் கேட்கக் கூடாது; அவர்களே கொடுத் தாலும் பிடிவாதமாக மறுத்துவிட வேண்டும் என்பது போன்ற கண்டிஷன்களுடன் அம்மா எங்களை அவர்கள் வீட்டுக்கு அனுப்புவாள். அம்மா சொல்லை நாங்கள் ஒரு போதும் மீறியது இல்லை என்பதால் எங்கள் வளர்ச்சியில் மாமா மற்றும் அத்தையின் வீடு பெரும் பங்கு வகித்தது.

எங்களுக்கு அம்மா அப்பா மீது அளவு கடந்த மரியாதையை ஏற்படுத்தியது அத்தையின் அறிவுரைகள்தாம். எங்களை மட்டமாக எண்ணும் உறவினர்கள் மத்தியில் நாங்கள் மிக நல்ல நிலைக்கு உயர்ந்து எங்கள் பெற்றோரின் தலையை உயர்த்த வேண்டும் என்று எங்கள் சிந்தனையில் வேகம் ஏற்படுத்தியது மாமாதான்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஹீராசந்த் மாமாவிடம் இருந்து ஒரு தற்காலிகப் பிரிவு ஏற்பட்டது. நான் ஒரு பக்கமும் ராஜி ஒரு பக்கமும் கல்லூரி, ஹாஸ்டல்கள் என்று பிரிந்துவிட விடுமுறை களில் மட்டுமே மாமா அத்தையைப் பார்க்க முடியும் என்கிற நிலை ஏற்பட்டது. இருந்தும் எங்கள் உறவின் நெருக்கத்தில் எந்த இடைவெளியும் ஏற்படவில்லை. நானும் ராஜியும் அப்பாவுக்கு

அதிக செலவு வைக்காமல் ஸ்காலர்ஷிப்பில் படித்தது குறித்து மனப்பூர்வமாக வாழ்த்தும் ஜீவன்களாக அவர்கள் இருந்தார்கள். படிப்பின்மீது எங்களுக்கு ஊக்கம் குறையாமல் பார்த்துக் கொண் டார்கள்.

நான் படிப்பு முடிந்த கையோடு நல்ல வேலை ஒன்றில் பெரிய சம்பளத்துடன் அமர்ந்ததும் எங்கள் வீட்டில் மாறுதல்கள் வரத் தொடங்கின. உறவினர்கள் வரத் தொடங்கினார்கள். அவர் களின் வரவை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது போன்ற பால்ய கால சங்கற்பங்கள் எங்கே போயின என்று தெரிய வில்லை. எங்கள் மனதிற்குள் அதுநாள் வரை அவர்கள் குறித்து இருந்ததெல்லாம் ஏக்கம் தானே ஒழிய, வெறுப்பு அல்ல என்று அதன் பிறகுதான் தெரிந்தது. அப்பாவின் பதவி உயர்வும் பணி மாற்றமும் எங்களை ஹீராசந்த் மாமாவிடம் இருந்து நிரந்தரமாகப் பிரித்து விட்டன.

இந்த இடைவெளியில் மாமாவின் உறவினர்கள் அவருக்கு வாரிசு இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு தத்தமது பிள்ளை களைக் கேடயமாக வைத்து சுரண்டத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதும் அதில் மாமா நிறையவே ஏமாந்து வருகிறார் என்பதும் எங்களுக்குத் தெரிய வந்தது.

''ஒருவருக்கு உதவி செய்யணுன்னு நினைக்கறதெல்லாம் நல்ல விஷயம்தான் மாமா. கொஞ்சம் யோசனை பண்ணிச் செய்யக் கூடாதா?'' என்று கல்லூரி நாட்களில் ஒருமுறை கேட்டிருக்கிறேன்.

மாமா சிரிப்பார். ''யோசனைன்னு பண்ணினால் உதவி செய்ய முடியாதுப்பா''

''புரியலை மாமா''

''யோசனைங்கறது மூளை சம்பந்தப்பட்ட விஷயம்; உதவி செய்யறதுங்கறது மனம் சம்பந்தப்பட்ட விஷயம். வெள்ள நிவாரணம், புயல் பூகம்ப நிவாரணம் எல்லாம் நிகழ்ச்சி நடந்த

சூட்டோடு வசூலிச்சால் தான் பணம் வரும். ஒரு மாசம் கழிச்சு யாரிடமாவது கேட்டுப் பார். ஒண்ணும் கிடைக்காது. கார்கில் போர் நிவாரண நிதின்னு கேட்ட உடனே கோடிக்கணக்கில் பணம் சேர்ந்ததே. வருஷம் பூராவும் வசூலிக்கப்படற முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ஏன் பணமே சேரமாட்டேங்குது? யோசனை, சிந்தனைங்கறதெல்லாமே உதவி செய்யறதைத் தவிர்க்க வைக்கிற விஷயம்தான்'' என்பார்.

எனக்குப் புரிந்ததில்லை. புரிந்ததெல்லாம் மாமா நல்லவர் என்பது மட்டும்தான். அவருடைய ஏமாற்றத்தின் உச்சமாக, ஒருவர் தான் தொடங்கிய ஃபைனான்ஸ் கம்பெனிக்கு ஷ்யூரிட்டி கையெழுத்து மாமாவிடம் வாங்கிவிட்டுக் கோடிக்கணக்கில் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டதில் மாமா கிட்டத்தட்ட போண்டி யாகி ஊரை விட்டே போய்விட்டார் என்பதைப் பிற்பாடு செவி வழிச் செய்தியாகவே அறிய முடிந்தது.

அவர் இன்று இப்படி ஒரு வாடகை வீட்டில் கஷ்டப் படுகிறார் என்கிற விஷயம் மனதைப் பிசைந்தது. நான் நல்ல நிலைக்கு உயர வேண்டும் என்று மனதார ஆசைப்பட்டவர் அவர். அவருடைய ஆசீர்வாதத்தில் இன்று நான் நன்றாக இருக்கிறேன். அவருக்கு சர்ப்ரைஸாகக் கொஞ்சம் பணம் அனுப்பி வைத்தால் என்ன என்று தோன்றியது.

ஐந்தாயிரம், பத்தாயிரம் என்பது எனக்கு இன்று ஒரு பெரிய தொகையே அல்ல. மாமா பெயருக்கு நாளையே அனுப்பி வைக்க முடிவு செய்தேன். இரவு மாமாவுக்கு நீண்டதொரு கடிதம் எழுதினேன். அத்தையின் நலம் விசாரித்ததோடு இருவரையும் என் வீட்டிற்கு வருந்தி அழைத்தும் எழுதினேன்.

**ம**றுநாள் சனிக்கிழமை தான். காலையிலேயே கிளம்பி னேன். வங்கியில் நல்ல கூட்டம். இடப்புறம் திரும்பி கயிற்றுக் கிளைகளில் தொங்கிக் கொண்டிருந்த அப்ளிகேஷன் கத்தைகளில் ஒன்றை உருவி ஹீராசந்த் மாமா பெயருக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு டிராஃப்ட் வேண்டி எழுதத் தொடங்கினேன். கூடவே பே டூ

யுவர்செல்ஃப் டிடி போட்ட செக் ஒன்றும் எழுதத் தொடங்கிய போது மண்டைக்குள் பல்பு எரிந்தது.

டிராஃப்டை ஹீராசந்த் மாமாவுக்கு அனுப்புவது கடினமான காரியம் அல்ல. அவர் சந்திரா சித்தி வீட்டு மாடியில் தான் இருக்கிறார் என்பதால் முகவரி தெரிந்ததுதான். ஆனால் திடீரென்று என்னிடமிருந்து போகின்ற கடிதத்துடன் இணைக்கப் பட்டிருக்கும் இந்தத் தொகையைப் பார்த்ததும் என்ன நினைப் பார்? என்னைப்பற்றிப் பெருமையாய் ஒரு கணம் நினைத்தாலும் மறுகணமே என்னை அவரோ நான் அவரையோ பார்த்துப் பல வருடங்கள் ஆகிவிட்டது என்கிற விஷயம் அவர் எண்ணத்தில் வராதா? சமீபத்தில் ராஜிதான் அவரைப் பார்த்திருக்கிறாள். அவருடைய கஷ்ட நிலையை அவள் விளக்கிச் சொல்லித்தான் அல்லது அவள் சிபாரிசு செய்துதான் நான் இந்தப் பண உதவியைச் செய்கிறேன் என்று நினைத்துவிட மாட்டாரா? பணஉதவி நான் செய்ய அதில் ராஜிக்கு ஓசிப் பெருமையா? அது கூடப் பரவாயில்லை, ஒருவேளை கணவர் தந்த சிறுசெலவுப் பணத்தில் சேர்த்து வைத்திருந்து இந்தப் பணத்தையே ராஜிதான் என்னிடம் கொடுத்து அவருக்கு அனுப்பச் சொல்லி இருப்பாளோ என்று நினைத்து விட்டாரென்றால்...?

செக் எழுதுவதை நிறுத்தினேன்.

டிராஃப்ட் அப்ளிகேஷனை ஒருமுறை வெறுமையாக உற்றுப் பார்த்துவிட்டுக் கிழித்துப் போட்டேன்.

வங்கியை விட்டு வெளியே வந்தேன்.

அடுத்த வாரம் சாதாரணமாகப் போவது போல் சந்திரா சித்தியைப் பார்க்கப் போய்விட்டு ஹீராசந்த் மாமாவைப் புதி தாகப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு அதன் பிறகு இரக்கப்பட்டுக் கொடுப்பது போல் கொடுக்கலாம் என்று முடிவு செய்தேன்.

அடுத்த வாரத்துக்குள் வேறு ஏதாவது கிளைக்காரணம் தோன்றிவிடக் கூடாதே என்றும் உள்ளூர ஒரு வேண்டுதல் எழுந்தது.

# 8. அடைப்பான்கள்

அழைப்பு மணியின் ஓசை கேட்ட போது வழக்கம் போல் ஒரு நிமிடம் குழப்பம், நம் வீட்டில்தான் ஒலித்ததா அல்லது பக்கத்து வீட்டில் ஒலித்ததா என்று. பக்கத்துப் போர்ஷன் ஜெயா அக்காவுடன் நல்ல நட்பும் பழக்கமும் இருந்த நாட்களில் கடைகளுக்குப் போகும்போது எது வாங்கினாலும் இருவரும் ஒரேமாதிரி வாங்கிச் சேர்த்த நாட்களில் வாங்கியது இந்த அழைப்பு மணி. முதலில் இந்த மணியை மாற்ற வேண்டும். ஒவ்வொரு முறையும் அந்தப் போர்ஷனுக்கு யார் வந்து மணி அழுத்தினாலும் நம் வீட்டுக்குத்தான் வந்திருக்கிறார்கள் என்று கதவு திறந்து, திகைத்து நிற்கும் யாரையாவது கண்டு ஏமாற்றம் மறைத்து அசட்டுச் சிரிப்புடன் கதவு சார்த்த வேண்டிய அவசியம் தினம் இரண்டு முறையாவது ஏற்பட்டு விடுகிறது. சில சமயங்களில் பாத்ரூமுக்குள் இருக்கும்போது இதுமாதிரியான தர்ம சங்கடம் நேர்ந்தால் எவ்வளவு எரிச்சல் வருகிறது.

அடுப்பில் கடுகு தாளித்துக் கொண்டிருந்ததால் நடுவில் விட்டுப் போக முடியாமல் தயங்கிக் கொண்டிருந்தேன். பக்கத்துப் போர்ஷன் கதவு திறப்பது கேட்டது. மீண்டும் அழைப்பு மணி ஒலிக்க இது நம் வீட்டுக்குத்தான் என்பது உறுதிப்பட்டது. அடுப்பை அணைத்து விட்டு வாசலுக்கு விரைந்தேன்.

கதவு திறந்தேன். ஆஜானுபாகுவான உயரத்துடன் நின்று கொண்டிருந்தவரை இதற்கு முன் ஒருமுறை பார்த்திருக்கிறேன். யார் என்று உடனடியாக நினைவு வரவில்லை.

''தினகரன் இருக்காரா? நான் அவருடைய மேலதிகாரி...'' என்று அவர் சிரித்த முகத்தோடு சொல்ல சட்டென்று நினைவு வந்தது. முன்பொரு முறை பார்த்திருக்கிறேன்.

''வாங்க சார், உள்ளே வாங்க'', என்றபடிக் கதவுகளை விரியத் திறந்தேன் பரபரப்போடு.

பக்கத்துப் போர்ஷன் கதவைப் பிடித்தபடி எங்களையே பார்த்துக் கொண்டிருந்த ஜெயா அக்கா கதவை மூடிக்கொள்வது தெரிந்தது.

அவர் உள்ளே வந்து உட்கார்ந்த மறுகணம்தான், ஏன் அவரை உள்ளே அழைத்தேன் என்று பட்டது. ''அவர் வெளியே போயிருக்கிறார்'', என்று இழுத்தேன். அது கேட்டு அவர் ஏதாவது சொல்லிவிட்டுத் திரும்பிப் போய் விடுவார் என்று நான் நினைக்க அவரோ சாவதானமாக நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு எதிரே இருந்த செய்தித்தாளைப் பிரித்துக் கொண்டார். எனக்கு பகீர் என்றது.

ஒருவேளை நான் சொன்னது அவர் காதுகளில் விழ வில்லையோ என்று எண்ணியவளாக மீண்டும் ஒருமுறை ''அவர் வெளியே போயிருக்கிறார். எப்போ வருவார்னு தெரியலையே,'' என்றேன் கொஞ்சம் உரத்த குரலில்.

அவர் புன்னகைத்தவராக ''அதான் முதலிலேயே சொல் லிட்டீங்களே. இப்போ நான் கிளம்பணும், அவ்வளவு தானே?'' என்றார்.

''சேச்சே! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை சார்...'' என்றேன் பதறியவளாக. இப்படி நான் சொல்லியிருக்கத் தேவை யில்லை என்று அப்புறம் தோன்றியது. பேசாமல் மௌனம் சாதித் திருக்கலாம். அவரும் புரிந்து கொண்டு எழுந்திருக்கக் கூடும். என் படபடப்பும் அவசரமும்தான் எனக்கு எதிரிகள்.

''எனிஹௌ, ரெண்டு நாளா தினகரன் ஆஃபீஸ் வரலை. ஏதோ உடல் நலமில்லைன்னு ராகவன் சொன்னார். அதான்

பார்த்துட்டுப் போகலாமேன்னு வந்தேன். வெளியே போகிற அளவுக்கு உடல் தேறி இருக்குன்னா அது நல்ல விஷயம் தான். ஓ.கே. இன்னிக்கும் நாளைக்கும் வீக்எண்ட் தானே? நல்லா ரெஸ்ட் எடுத்திட்டு ஆஃபீஸ் வரட்டும். கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?'' என்றார்.

''ஒரு நிமிஷம் சார்'', என்றபடி உள்ளே போனேன். போவதற்கு முன் அநிச்சையாக இரண்டு கதவுகளும் திறந்திருக் கின்றனவா என்று பார்த்துக் கொண்டு நடந்தேன்.

அவரே உடம்பு சரியில்லைன்னு இருக்கிறவரைப் பார்க்க வந்திருக்கிறார். அவரிடம் போய் இவர் வெளியே போயிருக் கிறார் என்று சொன்னது தப்போ? லீவுக்கான காரணமே பொய் என்று நினைத்து விட மாட்டாரா? அதுவும் மேலதிகாரி என்கிறார். நான் ஏதாவது உளறப்போக அது இவருக்கு ஆபீஸில் பிரச்சினையை உண்டாக்கி விடக் கூடாதே...

தண்ணீருடன் வெளியே வந்து அவரிடம் நீட்டிய போது, ''இப்போ கூட டாக்டரிடம் தான் போயிருக்கார் சார். அவருக்கு ரெண்டு நாளா நல்ல காய்ச்சல்'' என்றேன். கூடவே இந்த மனுஷன் வழக்கம் போல் சிகரெட் பிடித்தபடியே காய்கறிப் பையுடன் வந்து தொலைக்கக் கூடாதே என்கிற வேண்டுகோளும் எழுந்தது உள்ளூர.

அவர் எந்த ரியாக்ஷனும் காட்டாமல் செய்தித்தாளில் கவனமாக இருந்தபடியே தண்ணீரை வாங்கிக் குடித்தார். இதுவரையில் மின்விசிறி ஓடாது இருந்ததைக் கவனித்த நான் அதன் ஸ்விட்சைப் போட, ''எதற்கு? நான் கிளம்பறேன்'' என்றார்.

நான் பிரயத்தனப்பட்டு ஒன்றும் சொல்லாமல் நின்றேன். அவர் தண்ணீர் குடித்த தம்ளரைக் கீழே வைத்தார். ஆனால் எழுந்திருக்கிற பாடாகத் தெரியவில்லை. செய்தித்தாளில் ஏதோ ஒரு காலத்தைத் தீவிரமாக வாசித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு விநாடியும் யுகமாய் நகர எனக்கு அவஸ்தை யாக இருந்தது.

''உங்களுக்கு ஏதாவது வேலை இருந்தால் பாருங்கள். நான் இதோ கிளம்பிவிடுவேன்'' என்று சொன்னபடியே செய்தித் தாளை மூடி மடித்தார். திடீரென்று ஏதோ கண்களில் பட்டுவிட மீண்டும் பிரித்து விரித்துப் படிக்கத் தொடங்கி விட்டார்.

என்ன இந்த ஆள் இங்கிதமே தெரியாமல் இப்படி ஆம்பளை இல்லாத வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு சாவகாசமாக இருக்கிறார். அந்த செய்தித்தாளை வேண்டுமானால் எடுத்துப் போகட்டுமே. எப்படி இவரை வெளியே அனுப்புவது?

''அவரிடம் எதுவும் முக்கிய விஷயம் சொல்லணுமா? அவர் வந்தவுடன் உங்களை வந்து பார்க்கச் சொல்லட்டுமா?'' என்று கேட்டேன்.

''தேவை இல்லை. நான் திங்கட்கிழமை ஆஃபீஸ்லயே பேசிக்கறேன். அவரை உடம்பைப் பார்த்துக்கச் சொல்லுங்கள்'' என்றபடி எழுந்தார்.

எனக்கு அப்பாடா என்றிருந்தது.

வாசல் வரை போனவர் ''இது தானே ராகவன் வீடு?'' என்று கேட்டார் ஜெயா அக்கா போர்ஷனைக் காட்டியபடி.

நான் தலையசைக்க அதன் அழைப்பு மணியை அழுத்தினார்.

கதவு திறந்து வெளிப்பட்ட ஜெயா அக்கா அவர் யாரென்று தனக்குத் தெரியாது என்பது போன்ற முகக் குறிப்புடனேயே அவரை எதிர் நோக்கினாள்.

''ராகவன் இருக்காரா?''

''இல்லை. வெளியே போயிருக்கிறார்,'' என்றாள் கதவருகிலேயே நின்று.

அவளுடைய முகத்திலும் சரி, குரலிலும் சரி வரவேற்புக் குறி சிறிதும் தென்படவில்லை. எனக்கு ஜெயா அக்காவைத்

தெரியும், எங்கள் இருவரையும் தெரிந்த யாராக இருந்தாலும் அவள் வீட்டுக்குத்தான் முதல் மரியாதை தந்து விஜயம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவளுக்குப் பொறுக்காது. இவரை அவளுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் தெரியாதது போல் நடிப்பதற்குக் காரணம், அவள் புருஷனுக்கும் என் புருஷனுக்கும் பொது மேலதிகாரியாக இருக்கும் இவர் முதலில் என் வீட்டுக்குள் வந்தது ஒருபுறம் இருக்க, இவ்வளவு நேரம் இருந்து பேசிவிட்டும் போகிறார் என்பதால் ஏற்பட்ட பொறாமையாக இருக்கும். எனக்கு உள்ளூர சந்தோஷமாக இருந்தது.

''ஐ.ஸீ.'' என்றவர் ''ஓ.கே. நான் போயிட்டு வர்றேங்க'' என்று எங்கள் இருவருக்கும் பொதுவாகச் சொல்லிவிட்டுப் படிகளில் இறங்கத் தொடங்கினார்.

நான் மேற்கொண்டு ஜெயா அக்காவை நிமிர்ந்துகூடப் பார்க்கும் முன் அவள் உள்ளே போய்க் கதவை சார்த்திக் கொள்ள முயன்றாள். அவளுடைய முகத்தில் இருந்த வெறுப்பு என் குஷியைக் கிளப்பிவிட, ''என்னக்கா, இன்னும் குளிக்கலையா?'' என்று கேட்டேன் இளக்காரமாக.

என்னை ஏறிட்டுப் பார்த்தவள், ''இப்போ என்ன அவசரம்? இங்கே எவன் பார்க்க வரப் போகிறான்?'' என்று முணு முணுத்துவிட்டு கதவைச் சார்த்திக் கொண்டாள்.

ஐயோ! என்ன ஜெயா அக்கா இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறாள்? எனக்குள் இருந்த உற்சாகம், வெற்றிக் களிப்பு எல்லாம் திடீரென்று வற்றிப் போக தனிக்காட்டில் விடப்பட்டது போன்ற உணர்வு அழுத்தியது.

அவளிடம் வாயை கொடுத்தது தப்பு என்று பட்டது.

வீட்டினுள் வந்து சமையலைத் தொடர முயன்றேன். இனம் புரியாத பயம் ஒன்று அழுத்த, பெருங்காற்றில் அலைக்கழியும் மரக்கலமாக மனதினுள் ஒரு சிறு பயம் வந்தது. பிடித்துக் கொள்ள பற்றுக் கொம்பாக ஜெயா அக்காவுடனான ஆரம்பகாலங்கள் நினைவில் வந்தன.

எப்படி இருந்த நட்பு! அவள் வாயாடிதான் என்றாலும்கூட பழகும்நாட்களில் எல்லாவிதமான உதவிக்கும் கரம் நீட்டியவள். நான் திருமணமாகி வந்த புதிதில் என் கணவருடனான பிரச்சினைகளின் போதெல்லாம் எனக்கு தாய்வீடு தேடாதபடி நெருக்கம் காட்டியவள். எந்த விஷயமாக இருந்தாலும் எனக்கு ஒரு ராட்சஸ பலம் தந்த துணை அவளுடையது. ஆனால் அவளுடைய டாமினேஷன் அளவுக்கு அதிகமாக இருக்க ஆரம்பிக்கவே அவளுடைய நட்பின் விலை சற்று ஓவர் என்று உணர்ந்து தொடர்பை நானாகத் துண்டித்துக் கொண்டேன்.

வீட்டில் ஆம்பளை ஆள் இல்லாதபோது அவரைத் தேடி வருகின்ற, அதிகம் அறிமுகம் இல்லாத ஆடவனை எதிர்கொண்ட விதத்தில் எனக்கும் ஜெயா அக்காவுக்கும் இருந்த வித்தியாசத்தை மனம் அசை போடத் தொடங்கியது.

நானும் ஜெயா அக்கா மாதிரியே அவரை வாசலிலேயே வைத்துப் பேசி அனுப்பி இருக்க வேண்டுமோ? ஜெயா அக்கா வின் பார்வைக்கு உட்பட்டபடியே அவரை வீட்டினுள் அழைத்தது தவறோ? வந்தவர் இரண்டு வீட்டு ஆம்பளைக்கும் தான் மேலதிகாரி. அதற்காக ஜெயா அக்கா அலட்டிக்கவா செய்தாள்? நான் செய்தது கொஞ்சம் ஓவர்தான் என்று எனக்கே படுகிறதே.

இவர் என்ன சொல்லுவார்? ஆம்பளைங்க எப்போ எதுக்கு எப்படி ரியாக்ட் பண்ணுவாங்கன்னு எங்கே தெரியுது?

யோசித்துப் பார்த்தால், விடுப்பில் இருக்கும் இவர் வீட்டில் இல்லாமல் வெளியே போயிருக்கும் போது வந்த மேலதிகாரியை நான் அலட்சியம் செய்யாமல் நாகரிகமான முறையில் தண்ணீர் கொடுத்து அனுப்பியது தான் சரி என்று பட்டது. ஆனால் ஜெயா அக்காவின் வாயைக் குறித்து பயம் எழுந்தது மனதின் ஓர் ஓரத்தில். ''இங்கே எவன் பார்க்க வரப் போறான்?'' என்றாளே, என்ன அர்த்தத்தில்?

எப்பேர்ப்பட்டோரையும் எப்பேர்ப்பட்ட விஷயத்துக்கும் கொச்சைப்படுத்திப் பேசிவிடுவதில் அவளுக்கு நிகர் அவளே. அவள் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று அவள் புருஷனிடம் சொல்லி வைக்க அவர் என்னவருக்கு எதிரான கணையாக அலுவலகத்தில் அதை உபயோகித்து தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால்...?

தலை சுற்றாத குறையாக உணர்ந்தேன். ஒரு கோணத்தில் என்னுடைய பயம் அதீதமாக எனக்கே பட்டாலும்கூட ஜெயா அக்காவின் வாயில் புகுந்து களங்கப் பூச்சுடன் வெளி வந்திருக்கும் பலரை எனக்கே தெரியும் என்கிற நிஜமே என்னை மிகவும் உறுத்தியது.

அவளுடன் பகை மறந்து நட்பு பாராட்டி விடுவதே நல்லது என்று தோன்றியது. என்னவரின் மீதான நம்பிக்கையைவிட ஜெயா அக்கா போன்றோரின் நட்பு எதிர்காலப் பாதுகாப்புக்கு உகந்தது என்று பட்டது.

மெல்ல எழுந்தேன். ஜெயா அக்காவின் வீட்டுக் கதவைத் தட்டினேன்.

# 9. அப்பாக்கள்

மாரிமுத்து வந்திருந்தான். இந்த மாதத் தவணைக்கும் தவணை சொன்னான். முகத்தையும் உடலையும் பார்த்தால் அவனுடைய நிலை சரியில்லை என்பது அப்பட்டமாகத் தெரிந்தது. போன முறை பார்த்த போது இருந்ததை விடவும் இம்முறை முகத்தில் தாடியின் அடர்த்தி கூடி இருந்தது. மனிதனின் மனநிலையிலோ பொருளாதார நிலையிலோ தாழ்வு நிலை வந்தால் அவனால் முதலில் அலட்சியப்படுத்தப்படுவது முகச்சவரம் தான். அது ஏன் என்று எனக்குள் பலமுறை கேள்வி எழுந்துள்ளது; மனம் ஒப்புக் கொள்ளும் விதமான பதில் கிடைத்ததில்லை. முகச்சவரம் என்பது அழகு கருதி அல்ல. அது ஒருவித சமூக ஒழுங்கு என்பது என் கருத்து. தலையிலும் முகத்திலும் சீரில்லாது முளைக்கும் முடி யினை ஓர் ஒழுங்கில் வெட்டி வைத்திருப்பது நம்மை முகம் பார்த்துப் பேசவிருக்கும் அடுத்தவருக்கு நாம் தரும் முதல் வரவேற்பு அல்லவா?

''உங்களிடம் சொல்லவே கூச்சமாகத்தான் சார் இருக்கு. அடுத்த வாரம் தந்திடறேன் சார். எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்திட்டேன். சொன்ன வாக்கைக் காப்பாத்த முடியலை.'' என்றான் தயங்கினாற் போல்.

''சரி மாரிமுத்து'' என்றேன். நான் மாரிமுத்துவிடம் இந்தப் பணத்தைத் தந்தபோது அது திரும்பி வரும் என்று நம்பித் தரவில்லை என்பதால் எனக்கு ஏமாற்றம் ஏதும் இல்லை.

அவனுக்கு என்ன கஷ்டம் என்று கேட்கலாமா என என்னுள் தோன்றிய எண்ணத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். ஏழு மாதங்களுக்குள் ஒரு மனிதனுக்கு தலைகீழாக

மாறிப் போகும் நிலையும் வர முடியும் என்பதற்கு நடமாடும் உதாரணமாக இருக்கிறான். ஆனால் தன்னைப்பற்றி எதுவும் சொல்லிக் கொள்ளாத அழுத்தம் மட்டும் அப்படியே. அவனாகச் சொன்னால் கேட்டுக் கொள்ளலாம் என்கிற தயார் நிலையில் இருந்தேன். அவன் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. கிளம்ப யத்தனித்தான்.

''காஃபி சாப்பிட்டுவிட்டுப் போ'' என்று சொன்னேன். அவன் மறுக்கவில்லை. நான் உள்ளே போய் காஃபி தம்ளரை வாங்கிக் கொண்டு வெளியே வரும்போது அவன் தன் மேல் துண்டினால் அங்கே நின்றிருந்த காரினைத் துடைத்துக் கொண்டிருந்தான். ஏற்கனவே துடைக்கப்பட்டிருந்த கார்தான் என்றாலும் மிக மெல்லிய படலமாகப் படிந்திருந்த தூசியும் அவன் துண்டு பட்டு நீங்கியது. காரின் பின்புறக் கண்ணாடியில் ஒட்டியிருந்த ப்ரீத்தி என்கிற எழுத்துக்களின் மீது இரண்டு முறை துடைத்தான். நான் வந்து அருகில் நிற்பதை உணர்ந்தவனாக என் பக்கமாகத் திரும்பி அசட்டுப் புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்தபடி காஃபியை வாங்கிக் குடித்தான். விடை பெற்றுப் போனான்.

''சார்! நான் எப்படியும் இந்தக் காரினை மீட்டுவிடுவேன்னு நம்பறேன். அது வரைக்கும் இந்தக் காரில் எந்த மாற்றம் செய்தாலும் இந்தப் பெயரை மட்டும் எடுத்திடாதீங்க சார்!''

''இந்தக் காரினை மீட்க முடியுங்கற நம்பிக்கை எனக்கு விட்டுப் போச்சுங்க சார். தயவு பண்ணி நான் இந்த வண்டிக்கு டிரைவரா இருக்கிற நாள் வரைக்குமாவது இந்தப் பெயரை எடுத்திடாதீங்க சார்.''

''என்னால் இங்கே முழுமனசோட டிரைவரா இருக்க முடியாத நிலையாகிப் போச்சுங்க சார். என்னை மன்னிச்சுக் கோங்க. கூடவே ஒரு வேண்டுகோள். இன்னும் மூணு மாசத்துக் காவது இந்தப் பெயரை எடுத்திடாம இருங்க சார்''

இவை எல்லாம் அடுத்தடுத்த கால கட்டங்களில் நான் மாரிமுத்துவிடமிருந்து கேட்ட வசனங்கள்.

இன்றைய தேதிக்கு இந்தக் கார் என்னுடையதாகிவிட்ட போதிலும் அவனுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து இன்று வரை காரில் நான் எந்தவித ஆல்ட்ரேஷனும் செய்யாமல் இருப்பதற்கு என் பெருந்தன்மை மட்டும் காரணம் என்று சொல்ல மாட்டேன். ஏற்கெனவே சுத்தமாக அழகாக இருக்கும் காரில் மாறுதல் செய்கிறேன் பேர்வழி என்று பணத்தை விரயம் செய்ய விருப்பமில்லை. மேலும் இப்போதைக்கு இது டாக்ஸியாகவே ஓடிக் கொண்டிருப்பதால் இதனை அப்படியே சொந்தக் காராக ஆக்கிக் கொள்வதா அல்லது இதில் சம்பாதித்து வேறு புதுக் காரே வாங்குவதா என்பது குறித்து திடமான முடிவு ஏதும் நான் எடுக்காததும் காரணம்.

அம்மா இரண்டு வருடங்களுக்கு முன்பு ஊரில் இருந்து வந்திருந்த இடத்தில் திடீரென்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடிக்க, பக்கத்துப் பெரிய ஊரின் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்ல டாக்ஸி ஓட்ட வந்தவன்தான் இந்த மாரிமுத்து. இரவுநேரப் பயணம் என்பதாலும் உடல்நலக் குறைவு கேஸ் என்பதாலும் பேரம் பேசிச் சண்டை பிடித்துத் தொலைய வேண்டியிருக்குமோ என்கிற என் எதிர்பார்ப்புக்கு மாறாக எனக்கு தைரியம் சொல்லியபடி வண்டி ஓட்டி வந்தான். அங்கே போய் இறங்கிய கையோடு நான் அவனுக்குப் பணத்தை செட்டில் செய்யும் முனைப்பில் இறங்க, ''சார்! முதலில் போய்ப் பெரியம்மாவுக்கு என்ன ஏதுன்னு பாருங்க சார். நான் வெயிட் பண்றேன்,'' என்று என்னை உள்ளே துரத்தினான். நான் இன்னும் தயங்குவதைக் கண்டு என்னுடைய மிடில் க்ளாஸ் சந்தேகத்தைத் தெரிந்து கொண்டவன் போல், ''வெயிட்டிங் ஏதும் போட மாட்டேன் சார். நீங்க தைரியமா போங்க'' என்றான் என் மனதில் அறைந்தாற் போல.

ஊசிபோட்ட இரண்டு நிமிடங்களில் அம்மா சரியாகி விட்டது என்று உட்கார்ந்து கொண்டாள். எதற்கும் காலை வரை இங்கே ஆப்ஸர்வேஷனில் வைத்திருந்து பார்த்துவிடலாம் என்று டாக்டர் சொல்லிவிட நிம்மதியுடன் வெளியே வந்த போது அக்கறையாக விசாரித்தான்.

"நானும் இங்கேயே தூங்கி விடுகிறேன் சார். காலையில் அம்மாவுக்கு எதுவும் இல்லை என்பதை உறுதி செய்த பிறகு இப்படியே வீட்டுக்குப் போகலாம். நம்ம வண்டில வந்தவங்க, சிரிச்சபடியேதான் சார் வீட்டுக்குத் திரும்பி இருக்காங்க" என்று அவன் சொன்னது மிகவும் ஆறுதலாக இருந்தது. இங்கே வரும் முன்பாக பயந்த நிலையில் துணைக்கு உடன் வர இயலுமா என்று ஃபோன் செய்து அழைத்த போது சாக்குச் சொன்ன உள்ளூர் மச்சானுடைய பின்னணியில் இந்த மாரிமுத்து எனக்கு தேவதூத னாகத் தெரிந்தான்.

வீட்டுக்கு அவன் சொன்ன மாதிரியே சிரித்தபடி வந்து இறங்கினோம். அதிகப்படியாக நான் கொடுத்த பணத்தை வாங்க பிடிவாதமாக மறுத்து விட்டான் அவன். அம்மாவுடைய மதிப்பில் எங்கோ உயர்ந்து போனான். அதன் பிறகு எங்கேயாவது வெளியூர்ப் பயணம் என்றால் மாரிமுத்துவின் வண்டியில்தான் என்றானது.

அவனுடனான இறுக்கம் இன்னும் கூடியதற்கு வேறொரு காரணம் உண்டு. பலமுறை பயணம் செய்ததில் எங்கள் பேச்சுக் களால் எங்களுக்குக் குழந்தை கிடையாது என்பதைத் தெரிந்து கொண்ட மாரிமுத்து ஒருநாள் மிகப் பணிவுடன் திருக்கருக்காவூர் கர்ப்பரட்சாம்பிகை கோயிலைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னான்.

எனக்கு இந்த மாதிரியான விஷயங்களில் அதிகம் நம்பிக்கை கிடையாது என்றாலும் என் மனைவிக்கு அந்தப் பேச்சு ஏதோ உந்துதலைத் தந்திருக்கிறது. அவள் என்னை வற்புறுத்திச் சம்மதிக்க வைக்க மாரிமுத்துவின் காரிலேயே அங்கு போய் வந்தோம். இனிமேல் நமக்குக் குழந்தை இல்லை என்கிற விரக்தியில் இருந்த என் மனைவிக்கு அங்கே போய் வந்த பிறகு ஏற்பட்டிருந்த அதீத நம்பிக்கை காரணமாகவோ என்னவோ இந்த முறை ஏற்பட்ட கர்ப்பம் கலையாமல் தங்கியது.

கர்ப்பமான பிறகு எப்போது மெடிகல் செக்கப்புக்குப் போக வேண்டும் என்றாலும் மாரிமுத்துவின் வண்டியில்தான்

போக வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அந்த வண்டி மீது அவளுக்கு ஈடுபாடாகிப் போனது.

வெண்மை நிறம் கொஞ்சமும் மங்கிப் போகாமல் சுத்தமாகத் துடைத்து பளபளப்பாக வண்டியை வைத்திருப்பான் மாரிமுத்து. எங்கே சவாரி போனாலும், நாங்கள் போய் இறங்கிய மறு விநாடி வண்டியைத் துடைக்க ஆரம்பித்து விடுவான். நான் கூட சில சமயம் சிரிப்பேன். இப்படித் துடைத்துத் துடைத்தே வண்டியின் தகடு தேய்ந்துவிடப் போகிறது மாரிமுத்து என்று. வண்டியில் அநாவசியமான ஸ்டிக்கர்கள் ஒட்டி இருக்க மாட்டான். பின்புறக் கண்ணாடியில் மட்டும் நீலநிற செலோஃபன் ஃபில்மின் பின்புறத்தில் ப்ரீத்தி என்று அழகுற எழுதப் பட்டிருக்கும். அவனுடைய பார்வை அதன் பக்கமாகத் திரும்பும் போதெல்லாம் விழிகள் விரிவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அது குறித்து நான் கேட்டதில்லை. அது அவனுடைய பர்ஸனல் விஷயம் என்கிற அளவுக்கு அதன் புனிதத்துவம் காக்கப்பட வேண்டும் என்று எண்ணுபவன் நான்.

எல்லாம் நல்லபடியாகத்தான் போய்க் கொண்டிருந்ததாக எண்ணிக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாள் மாரிமுத்து என்னிடம் வந்து கார் வாங்கும் எண்ணம் ஏதும் எனக்கு இருக்கிறதா என்று விசாரித்தான். நான் இல்லை என்று அப் போதைக்கு மறுத்தாலும், எனக்குள் அந்த எண்ணத்தை அவன் விதைத்து விட்டதென்னவோ நிஜம் என்றானது.

அதன் தொடர்ச்சியாக அவனுக்கு ஏதோ பணக்கஷ்டம் என்று என்னிடம் பெரும் தொகை ஒன்றை வாங்கியதும், அதற்கு ஈடாகக் காரினை என்னிடம் ஒப்படைத்ததும், அப்புறம் இன்னும் கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு காரினை என் பெயருக்கு மாற்றிவிட்டு அதிலேயே டிரைவராக இருந்ததும், பின் அதிலும் தொடர முடியாமல் நின்று கொண்டதும், கடைசியாக கடனாக வாங்கிப்போன தொகையைக் கொடுக்க முடியாமல் இப்போது கஷ்டப்படுவதும் நிகழ்ந்து போயின. எல்லாவற்றிற்கும் நடுவே

காரில் இருக்கும் அந்தப் பெயரை அழித்து விடாதீர்கள் என்று கேட்க மட்டும் அவன் மறப்பதே இல்லை.

ஒருவேளை அது அவனுடைய ஒரே மகளாக இருக்கலாம். அவளுக்கு ஏதாவது பெரிய உயிர்க்கொல்லி வியாதி வந்திருக்க லாம். அதற்கான ட்ரீட்மெண்ட்டுக்காகத்தான் இந்தக் காரினை அவன் விற்றிருக்கலாம். தொடர்ந்து இந்த ஊரிலேயே வண்டி ஓடிக்கொண்டிருப்பதால் இன்னும் அது தங்கள் வண்டிதான் என்று அந்தக் குழந்தையை அவன் நம்ப வைத்துக் கொண்டிருக்கலாம். இன்னும் மூன்று மாதம் டாக்டர் அந்தக் குழந்தைக்குக் கெடு கொடுத்திருக்கலாம். அதுவரையிலாவது வண்டி அந்தக் குழந்தை யின் கண்களில் படும்போது அந்தப் பெயரைக்கண்டு திருப்தி கொள்ளட்டும் 'என்கிற ஆசை அப்பா என்கிற முறையில் மாரி முத்துவுக்கு இருக்கலாம். என்னால் பரிதாபப்பட மட்டுமே முடிந்தது.

இதனை ஒருமுறை மனைவியிடம் பேசிக் கொண்டிருந்த போது அவள் சொன்னாள். ''நீ கவலைப்படாதேன்னு மாரிமுத்து விடம் சொல்லுங்க. நமக்குப் பிறக்கப் போவதும் பெண் குழந்தை தான்னு ஸ்கேன்ல சொல்லியிருக்காங்க. அதற்கு ப்ரீத்தின்னு பெயர் வைத்துக் கொள்ளலாம். அதன் பிறகு காரில் அந்தப் பெயருக்கு நிரந்தர இடம் கிடைத்துவிடும். அப்போ அவனுக்கு திருப்தி ஏற்படும் தானே?''

'அற்பாயுசில் போன பிள்ளையின் பெயரை தவம் கிடந்து பெறுகின்ற நம்ம பிள்ளைக்கு வைப்பதா' என்கிற வார்த்தைகள் என் மனைவியின் வாயிலிருந்தே வந்திருந்தால் இந்தப் பொம்பளைகளே இப்படித்தான், நல்லபடியான சிந்தனையே அவங்களுக்கு வராதே என்கிற சலிப்பில் என் உறுத்தல் காணாமல் போயிருக்கும். இப்போது வேறு நல்ல காரணம் யோசிக்க வேண்டும் நான் என் மகளுக்கு வேறு பெயர் வைப்பதற்கு.

# 10. அவள்

அவள் சாதாரணமாகவே அழகாக இருந்திருப்பாள் என்று தோன்றியது.

பிரத்தியேகமாக சிரத்தை எடுத்து தன்னை மேலும் அழகு படுத்திக் கொண்டிருந்தாள். உச்சித் தலைமுடியிலிருந்து ஒரு கற்றைப் பகுதியைத் தனித்தெடுத்து நெற்றியின் மீது படரவிட்டி ருந்தாள். உருண்ட முகத்துக்கு அந்தக் கற்றைகள் வந்து விழுந் திருந்தது பேரழகாய் இருந்தது. நிறம் சற்று கம்மிதான். அடிப்பது போல் தெரியாத வண்ணம் பவுடர் பூச்சு இருந்தது. சதைப் பற்றுடன் இருந்த இதழ்களில் சாயம் பூசி அசிங்கப்படுத்திக் கொள்ளாமல் இயற்கையாக விட்டிருந்தாள். முகத்தின் அளவுக்கு சரியான விகிதத்தில் கண்கள். அவள் எதிரே என்னை இவர் ஏன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் என்பது புரியாமல் இருந்தேன்.

''வெல்கம். வெல்கம். என்ன, ஆன் த வே டு ஹனிமூன் டிரிப்பா?'' என்று வரவேற்றாள் திறந்த மனத்தைக் குரலில் காட்டி,

''இவங்க ஹேமா. உங்கிட்ட பலமுறை இவங்களைப் பற்றிச் சொல்லி இருக்கேனே. இது என் மனைவி சபிதா'' என்றார்.

புது மனைவிகளுக்கு ஏற்படும் தர்ம சங்கடங்களில் இதுவும் ஒன்று என்று தோன்றியது. யாரை அறிமுகப்படுத்தி னாலும் ஏற்கனவே அவர்களைப்பற்றி நிறையச் சொல்லி இருப்பது போன்ற இமேஜ் ஏற்படுத்திக் கொள்ளும் வண்ணம் கணவன் சொல்லும் பொய்களை சுவீகரித்துக் கொள்ள வேண்டி இருக்கும். தன்னுடைய மறதியின் காரணமாக அவர் முன்பே

சொல்லி இருப்பதாகக் கூறியுள்ள விஷயங்கள் கவனத்தில் இருந்து தப்பிவிட்டதாகத் தோல்வி ஒப்புக்கொண்டு கணவனின் கௌரவம் காக்க வேண்டும்..

பொதுவாகப் புன்னகைத்து வைத்தேன்.

''ஐயம் சாரி. உங்க மாரேஜுக்கு வரமுடியாமல் போச்சு. உங்களை இப்போ தான் பார்க்கிறேன். மாரேஜுக்கு வந்தவர்கள் சொன்னதை விடவும் அழகாக இருக்கிறீர்கள்.''

''நீங்க என் கல்யாணத்துக்கு வர மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும்'' என்றார் இவர் புன்னகையுடன்.

ஹேமா இவரைப் பார்த்த பார்வையைப் படிக்க முடிந்தது. ''சும்மா எதையாவது கற்பனை பண்ணிக்காதீங்க. நிஜம்மாவே அம்மாவுக்கு அப்போ உடல் நலமில்லாமல் போய் ஆஸ்பத்திரி யில் அட்மிட் பண்ணும்படி ஆயிடுச்சு...''

''அடடா!'' என்றேன் நான். ''இப்போ எப்படி இருக்காங்க?''

அவள் என் பக்கமாக சிநேகத்துடன் திரும்பினாள். ''நல்லா ஆயிட்டாங்க. திடீர்னு பிளட்ல சுகர் கூடிடுச்சு. இப்போ தேவலை. எப்படி இருக்கிறது மாரேஜ் லைஃப்? எப்படி இருக்கார்? அலட்டல் கொஞ்சம் ஜாஸ்தி இருக்குமே'' என்றாள் சிரித்தபடி.

''உங்களுக்கு இவரை எப்படித் தெரியும்?'' என்று கேட்டேன் சம்பிரதாயமாக.

''இங்கே டிரான்ஸ்ஃபர் ஆகிவரும் முன் அந்த பிராஞ்சில் தான் இருந்தேன். சார்தான் நமக்கு அங்கே பாஸ்.''

''ஓ'' என்றேன்.

''நீங்க பேசிட்டிருங்க, ஜி.எம்மைப் பார்த்திட்டு வந்தர்றேன்'' என்று எங்களை விட்டுச் சென்றார்.

ஜன்னலுக்கு வெளியே தெரிந்த ஆகாயம் இன்று மழை பெய்யலாம் என்று அறிகுறி காட்டியது. நாளைதான் விமானப்

பயணம். இன்று மாலை கொஞ்சம் ஷாப்பிங் செய்யலாம் என்றிருந்த திட்டங்கள் பாழாகலாம் என்று தோன்றியது. வானம் மேக மூட்டமாகும் போதெல்லாம் எனக்கும் முகம் வாடி விடுவது வழக்கம்.

''என்ன, வானம் பார்த்த சிந்தனை?'' என்று கேட்டாள் ஹேமா. அவசரமாக பார்வையின் கோணத்தை மாற்றினேன். மழை, குளிர், புதுத் திருமணம் இவற்றை இணைத்து நகைச்சுவை என்கிற பெயரில் அபத்தமாக அவள் ஏதும் சொல்லாதது எனக்குப் பிடித்திருந்தது. பேச்சிலும் சராசரி விஷயங்களுக்கு அப்பாற்பட்ட தளம் விரிந்திருந்தது. வீட்டுக்கு வாங்களேன் என்று அழைத்தாள். முகவரி கொடுத்தாள். நல்ல தோழியாக இருக்கத்தக்க இலக்கணங் கள் காட்டினாள்.

அதிகபட்சமாக கால்மணி நேரத்தில் இவர் வந்து விட்டார். இன்னும் கொஞ்சநேரம் கழித்து வந்திருக்கலாம் என்று தோன்றியது. ஹேமா காண்டீன் போகலாமா என்று கேட்டபோது இவர் மறுக்க காஃபி வரவழைத்துக் கொடுத்தாள். கிளம்பி விட்டோம்.

இவருடைய இறுக்கமும் அமைதியும் எனக்குப் புரிந்தது. எப்போதாவது புகைப்பதாகச் சொல்லிக் கொள்பவர் தொடர்ந்து இரண்டு சிகரெட்டுகள் புகைத்தார். இன்று இன்னொருமுறை எனக்கு ஹேமாவதாரம் என்று உணர்ந்து கொண்டேன்.

என்னுடைய திருமணம் சம்பந்தமான பேச்சு ஆரம்பித்த போது நான் வேலைக்குப் போகிறவள் என்று தெரிந்த மாத்திரத்தில் இவர் எழுந்து விட்டார். இவர் போட்டிருந்த முதல் கண்டிஷனே பெண் வேலைக்குப் போகிறவளாக இருக்கக்கூடாது என்பதுதானாம். முழு விவரங்களையும் தெளியப் பேசியா இங்கே திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன? பொய்களுக்கு ஆயிரம் என்கிற அப்பர் லிமிட் வைத்துக்கொண்டு, வயதில் மூத்தவராக இருப்பதை மட்டுமே தகுதியாகக் கொண்டுள்ள ஸோ கால்டு பெரியவர்கள் தம்முடைய சின்னத்தனங்கள் சகலத்தையும்

கூச்சமின்றி பெருமையுடன் வெளிக்காட்டும் அசிங்கங்களாகத் தானே இங்கே திருமணங்கள் நிகழ்கின்றன. அதனால் தானே இங்கே புழுக்கங்கள் இல்லாத மணவாழ்க்கையே சாத்தியமில்லை என்று ஆகிவிட்டது?

'மடையா! வேலைக்குப் போகாத பெண் வேலைக்குப் போயாக வேண்டும் என்றால்தான் உடனடியாக வேலை கிடைப்பது கஷ்டம். வேலைக்குப் போகிற பெண் ஒரே நொடியில் விட்டுவிட முடியாதா?' என்று சபையில் அறிவித்தவரும், அதை ஆமோதித்த என் பெற்றோரும் ஒரு சம்பிரதாயத்துக்காகக்கூட என்னிடம் கேட்கவில்லை. நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டாள் என்பதுதானே மகள் குறித்தோ மனைவி குறித்தோ ஆண்களுக்கு சமூகம் அங்கீகரித்திருக்கும் உச்சக்கட்ட கௌரவம்?

வேலையை விட்டுவிடப் பணிக்கப்பட்டேன். அதுவும் உடனடியாக விட்டுவிட வேண்டும். திருமணத்துக்கு நான்கு மாதங்கள் இருந்தன. அதுவரைக்கும் போகிறேனே என்கிற வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டது. 'ஒரு விஷயம் தீர்மானித்து விட்டால் தள்ளிப் போடக்கூடாது. இப்போது திருமணம் வரைக்கும் போகலாமே என்று தோன்றும்; அப்புறம் இப்போது தானே முடிந்திருக்கிறது, குழந்தை உண்டாகும் வரை போகலாமே என்று தோன்றும்; அப்புறம் இருக்கிற விலைவாசியில் இந்தச் சம்பளம் கசக்கவா செய்கிறது என்று மனம் வியாக்கியானம் பேசும். ஒருநாள் கூடத் தாமதிக்க வேண்டாம்' என்கிற இவருடைய வாதம் வேதமாகப் பாராட்டுதல் பெற நான் தோற்கடிக்கப் பட்டேன்.

இந்த நான்கு மாதங்களில் ஏதாவது ஆகி இந்தத் திருமணம் தடைபட்டு விட்டால் நீயா எனக்கு இந்த வேலையைத் திரும்ப வாங்கிக் கொடுப்பாய்? என்று கேட்க முடியவில்லை.

இந்தக் காலத்தில் பெண் வேலைக்குப் போயே தீர வேண்டும் என்று அவனவன் டிமாண்ட் பண்றான். சபிதா கொடுத்து வச்சவதான் என்கிற பாராட்டுப் பத்திரங்கள் சபையிலேயே வாசித்தளிக்கப்பட்டன.

'நீ வேலையை விட்டு மூன்று மாதங்கள் கழிந்தும் உன்னை நினைத்து எத்தனை பேர் திருமணத்துக்கு வருகிறார்கள் என்று பார்க்கலாம்; அதுதானே நிஜமான அன்புக்கு அடையாளம்?' என்று இன்னொரு கட்டத்தில் இவர் சொன்னபோது எனக்கு இவருடைய நோக்கங்கள் குறித்த சிந்தனையை எழுப்பிவிடாதே பகவானே என்கிற வேண்டுதல் தான் உள்ளூர எழுந்தது.

திருமணத்தின் போதும் வரவேற்பின் போதும் இவர் என்னுடைய நண்பர்கள் என்று எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் என்பதை அறியக் காட்டிய ஆர்வத்துக்கும் அதன் பிறகு வீடியோ கேசட்டுகள் வந்ததும் ஒன்றாக உட்கார்ந்து பார்க்கும்போது என்னுடைய வட்டம் யார் யார் என்று கேட்டுத் துளைத்ததற்கும் காரணம் யோசிக்காமல் தவிர்த்தேன்.

அவருடைய அமைதியைக் கெடுக்க விரும்பாமல் அவருடன் பேச்சைத் தவிர்த்து தொலைக்காட்சியின் சேனல்களில் விளையாடிக் கொண்டிருந்தேன். அறையின் குளுமை இதமாக இருந்தது. திறந்திருந்த திரைக்கு வெளியே தெரிந்த வெளியில் மழை சிறு தூறலாக ஆரம்பித்திருந்தது. கையில் இருந்த டீ கோப்பையிலிருந்து நடனமாடியபடி வெளிக்கிளம்பிக் கொண்டிருந்த ஆவியின் போக்குகூட சுவாரஸியமாக இருந்தது.

நீண்டநேர அமைதிக்குப் பிறகு வாய் திறந்தவர், ''நான் உங்களைத் தனித்து விட்டிருந்த போது என்னைப்பற்றி என்ன சொன்னாள்?'' என்று கேட்டார்.

உண்மையில் அவள் ஒன்றும் சொல்லி இருக்கவில்லை. ''நீங்க ஒரு ஜெம் என்றாள், நான் கொடுத்து வைத்தவள் என்றாள்'' என்றேன்.

''இவள் இங்கே டிரான்ஸ்ஃபர் ஆகி வருவதற்குமுன் என்னிடம் கொஞ்சம் வழிந்திருக்கிறாள். எனக்கு மனைவியாக ஆகவேண்டும் என்றால் சபிதா அளவுக்கு நீ இருந்திருக்க வேண்டும் என்று அவளுக்குக் கோடி காட்டவேண்டும்

அல்லவா? அதற்காகத்தான் உன்னை இங்கே கூட்டி வந்து அவள் எதிரே உட்கார வைத்தேன்.''

இது எனக்கான பாராட்டா, அல்லது என்னை செலக்ட் பண்ணியதற்கான சுயஸ்துதியா? என் முகத்தில் என்ன மாதிரி குறிப்பு இருந்தது என்று தெரியவில்லை.

''ஏன்? நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டார்.

அவள் பக்கத்தில் என்னை வைத்து ஒப்பீடு செய்து பார்த்து அப்படி என்ன அவளிடம் ஸ்பெஷலாக இருந்தது, தான் சொக்கித் திரிந்ததற்கு என்றோ; அப்படி என்ன இருக்கிறது, இன்னும் மறக்க முடியாமல் உள்ளுக்குள் புழுங்கும் அளவுக்கு என்றோ அறிந்து கொள்ளத் துடிக்கும் துடிப்பு தான் இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கம் என்பது புரியாமல் இல்லை நான்.

''நம்புகிறேன்'' என்றேன்.

எவளையோ நம்புவதற்குப் பதிலாக என்னுடைய மீதி வாழ்நாள் முழுதும் கூடயிருக்கப் போகிற உங்களை நம்புவதில் எனக்கு என்ன சிரமம் இருக்கப் போகிறது என்று சொல்லவில்லை.

திருமணத்துக்குமுன் நானும் வேலை பார்த்தவள் தானே.

என் ஒற்றை வார்த்தை பதில் அவர் முகத்தில் தெளிவைக் கொண்டு வந்திருந்தது.

''இது ஒரு புது அனுபவம் இல்லையா? உன்னை ஓர் ஒப்பீட்டுப் பொருளாக்கி விட்டேனே என்று கோபம் வரத்தான் செய்யும் இல்லையா?'' அவர் குரல் ஓங்க ஆரம்பித்திருந்தது.

நான் இரக்கம் கலந்து அவரைப் பார்த்தேன். என் பார்வையின் பொருள் அவருக்குப் புரியவில்லை.

''இதேபோல் என்னைக் கொண்டு போய் முன்பு நீ வேலை பார்த்த இடத்தில் இருக்கும் ஏதாவது ஒரு ஆணின் பக்கத்தில்

உட்கார வைத்து ஒப்பீடு செய்து பார்க்கணும்னு உன் பெண்ணுரிமைச் சிந்தனை துடிக்குமே.''

தூண்டிலாய் வீசப்பட்ட வார்த்தைகள்.

''இல்லை'' என்றேன் சாதாரணமாக அவரையே உற்றுப் பார்த்தபடி.

''ஏன்?''

''இதே மாதிரி வேறு சில ஆண்கள் தம் மனைவியரை அழைத்து வந்து என் அருகில் உட்கார வைத்துப் பேசிப் போயிருக்கிறார்கள்.''

பார்வையைத் தொலைக்காட்சியின் பக்கம் திருப்பிக் கொண்டேன். வெளியே மழை வலுத்திருந்தது.

# 11. கழுதை மருத்துவம்

“கடைசியில் உங்க கஞ்சப் பிசினாறி ஃபிரண்ட் என்னதான் செய்தார்? அந்தத் தேஜலை டாக்டரிடம் கூட்டிப் போனாரா இல்லையா?”

உதடுகளைப் பிதுக்கினேன் இல்லை என்கிற பொருளில். கேள்வி கேட்ட என் மனைவி ரூபிணி காஃபிக் கோப்பையை என் எதிரே வைத்து விட்டு உள்ளே சென்றுவிட்டாள். என்னுடைய கவனம் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் இருந்து திசை திரும்பியது.

தேஜல்!

அவளுடைய அறியாமைப் படபடப்புடன் கூடிய பார்வை ஒரு புறமும், சிவந்து கொப்பளித்திருந்த விழிகள் இன்னொரு புறமுமாக என்னைப் படுத்தின.

அஜய்சிங் இவ்வளவு கல் நெஞ்சுக்காரனா என்று அவன் மீது எரிச்சல் கூட வந்தது.

என்னுடைய கம்பெனி அலுவலகத் தோழன் அவன். பீகாரைச் சேர்ந்தவன். இரண்டாண்டுகளுக்கு முன்தான் திருமணம் ஆனது. ஊரிலிருந்து பீஹாரி மனைவியுடனும் ஏராளமான வரதட்சணைப் பொருள்களுடனும் வந்திறங்கிய போது ஏக்கப் பெருமூச்சு விடாதவர்கள் கிடையாது. அடுத்த ஜென்மத்திலாவது இன்ஜினியராகப் பிறந்தால் பீஹார் மத்தியப் பிரதேசத்தில் பிறக்க வேண்டும் என்றுகூட வேடிக்கையாகப் பேசி வயிற்றெரிச்சலைத் தணித்துக் கொண்டவர்கள் பலர்.

அவன் வரதட்சணைப் பொருள்களுடன் கொண்டு வந்த அதிசய விஷயம் தான் தேஜல். பத்து வயதுச் சிறுமி. அவன் மாமனாருடைய நிலத்தில் வேலை பார்க்கும் விவசாயி ஒருவரின் மகளாம். வீட்டு வேலைகளில் அவன் மனைவிக்கு ஒத்தாசைக் காகக் கொடுத்தனுப்பப்பட்டிருப்பவள். அவளுடைய பரம்பரை யே இப்படித்தானாம். அவளுடைய உடன்பிறப்புகள் கூட இது மாதிரிதான் இந்தியாவின் பல்வேறு மூலைகளில் இருக்கிறார்க ளாம். நாட்டில் கொத்தடிமைமுறை ஒழிந்துவிட்டது என்று யார் சொன்னது?

அஜய்சிங் நெருங்கிப் பழகும் ஒரே நண்பன் என்கிற முறையில் நான் அவனுடைய வீட்டுக்கு அடிக்கடி செல்பவன். ரூபிணி படிக்கிற காலத்தில் இந்தி பிரச்சார சபா மூலம் ப்ரவீண் வரை இந்திப் பரீட்சைகள் தேறியவள் என்பதால் அவளுக்கும் அஜய்சிங்கின் மனைவியுடன் நட்பு கொள்வது எளிதாக இருந்தது. தமிழ்நாட்டில் இந்தி பேசும் தோழமை கிடைத்ததில் அவளுக்கும் இவளைப் பிடித்துப் போனது.

''அந்தப் பெண் எல்லா விதங்களிலும் நல்லபடியாதான் இருக்கிறா. ஆனால் அந்தத் தேஜலை வேலை வாங்கும் போதும் அதட்டும் போதும் மட்டும்தான் என்னாலேயே ஜீரணித்துக் கொள்ள முடியாத அளவுக்கு முரட்டுத்தனமா நடந்துக்கறா. எப்படித்தான் அவ்வளவு சின்னப் பிள்ளையை அடிக்க மனம் வருமோ தெரியலை'' என்பாள் ரூபிணி, நாங்கள் இருவரும் அவன் வீட்டுக்குப் போய் வரும் நாட்களில் எல்லாம்.

''என்ன செய்வது? அதுதான் முதலாளித்துவ இரத்தம் என்பது. அஜய்சிங்கிற்கோ அவன் மனைவிக்கோ அந்தத் தேஜலை மனிதப் பிறவியாகவே பார்க்க முடியாது. பரம்பரையாக ஊறிப்போயிருக்கும் விஷயம். அவ்வளவு சீக்கிரம் போய் விடுமா என்ன?'' என்பேன்.

தேஜல் என்கிற அந்தப் பெண் துருதுருவென்றிருப்பாள். அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும் அந்த வயதுக்கே உரிய

அறியாமைப் படபடப்பு அவள் கண்களில் மிளிர்வது பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். காஃபி தரும்போதெல்லாம் நான் அவளுக்கு தேங்க்ஸ் சொல்வது கேட்டு அவளுக்குள் சிரிப்பு பொங்குவது தெரியும். ஓரிருமுறை சாக்லெட் கொடுத்திருக்கிறேன். மிகுந்த பயத்துடன் அஜய்சிங் ஒப்புதல் தந்த பிறகு வாங்கிக் கொண்டிருக்கிறாள். அவளையும் மதித்து 'கைஸே ஹோ?' என்று நான் கேட்பது அவளுக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன். காஃபி எடுத்து வந்து கொடுக்கும் போதோ வேறு ஏதாவது ஸ்நாக்ஸ் கொண்டு வந்து எதிர் மேசையில் வைக்கும் போதோ அஜய்சிங் அருகில் இல்லை என்றால் ஒருவித புன்சிரிப்புடன் ஒரு கணம் பார்ப்பாள். நான் பதிலுக்குப் புன்னகைத்தால் வெட்கப்பட்டுக் கொண்டு ஓடி விடுவாள். அவன் இருந்தால் ஒரே மிரட்சி மட்டும்தான்.

சென்ற வாரம் ஒருமுறை அஜய்சிங் என்னிடம் அவளைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டிருந்தான். ''கொழுத்த மூதேவி! ஒழுங்கா வீட்டு வேலை பார்க்க மாட்டேங்கறா. கவனமெல்லாம் எங்கேயோ இருக்கு. சும்மா எப்போ பார்த்தாலும் ஒரே அழுகை'' என்றான் மொத்த எரிச்சலையும் சிகரெட்டின் மீது காட்டியவன் போல் ஓங்கிய ஓர் இழுப்புக்கு குபுகுபுவென்று புகை விட்டபடி.

''என்ன விஷயம்?'' என்று கேட்டேன்.

''தெரியலை எழவு. சொல்லித் தொலைச்சால் தானே?''

அன்று மாலை அலுவலகம் முடிந்து செல்லும்போது அவனுடனேயே அவன் வீட்டில் இறங்கினேன். ''வாங்க பாய்சாப்'' என்று வரவேற்ற அவனுடைய மனைவியிடம் சிறிய சோர்வு தெரிந்தது.

''நீங்க நல்லா இருக்கீங்களா?'' என்று விசாரித்த போது அவள் கர்ப்பமாக இருப்பது தெரியவர வாழ்த்துச் சொன்னேன்.

காஃபி எடுத்து வந்த தேஜலின் கண்கள் சிவப்பாக இருந்தன. குறிப்பாக இடது கண் கோவைப்பழமாக இருந்தது.

மறுநாள் ரூபிணியை அழைத்துக்கொண்டு அங்கே சென்றேன். அவள் செய்து எடுத்துக்கொண்டு வந்திருந்த புளிக்குழம்பு அஜய்சிங்கின் மனைவிக்கு ரொம்பவும் பிடித்துப் போனது. இதற்கு முன்பும் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் போது அதனை சாப்பிட்டிருக்கிறாள். இருந்தாலும் கர்ப்ப ஆரம்ப காலத்தில் புளிக்குழம்பு பெண்களுக்குத் தரும் ஆனந்தமே தனிதான் என்பாள் ரூபிணி அடிக்கடி. அதிலும் குறிப்பாக இந்தக் குழம்பை பிரமாதமாக வைப்பாள் அவள். அதிலேயே அஜய்சிங்கின் மனைவியை அயர வைத்ததில் வியப்பில்லை.

அன்று தேஜலின் கண்களில் சிவப்பு இன்னும் கூடி இருந்தது. அஜய்சிங்கிடம் அது குறித்துச் சொன்னேன். ''கொழுப் புடா'' என்று வெடித்தான். ''வேணுமின்னே ராத்திரியெல்லாம் அழுதா ஏன் கண் சிவக்காது? காலையில நல்லாத்தான் இருந்தது. இப்போ சிவந்திருக்கு. ஏதோ மாய்மாலம் பண்றா'' என்றான் கோபமாக. நாங்கள் என்ன பேசுகிறோம் என்று புரியாவிட்டாலும் தன்னைப் பற்றித்தான் பேசப்படுகிறது என்பது புரிந்த மாதிரி அங்கேயே நின்று என்னைப் பார்த்துக் கொண்டிருந்த தேஜலின் பார்வை என்னை என்னவோ செய்தது. ''ஆயிண்மெண்ட் ஏதாவது போட்டால் என்ன?'' என்று மட்டும் சொன்னேன் அவனிடம். ''ம்', என்றவன் ''மெடிக்கல் ஷாப்பில் தான் கேட்டு ஏதாவது வாங்கித்தர வேண்டும்'' என்றான்.

மறுநாள் ஏதோ சந்தர்ப்பத்தில் தேஜல் குறித்து பேச்சுவர ''இப்போ எப்படி இருக்கா?'' என்று கேட்டேன்.

''நீ சொன்னியேன்னு ஐ டிராப்ஸ் வாங்கிக் கொடுத்தேன். எரியுது எரியுதுன்னு அலர்றா. எனக்கென்னவோ நடிக்கிறாள்னு தோணுது'' என்றான்.

''ஐயோ! ஐ டிராப்ஸ் எரிஞ்சா டாக்டரிடம் காட்டணும்டா. வேற ஏதாவது காம்ப்ளிகேட் ஆயிடப் போகுது'' என்றேன் பதற்றமாக.

அவன் அலட்சியமாகச் சிரித்தான்.

''இன்னிக்கு ஏதாவது முடிவு பண்றேன்னு சொல்லி இருக்கான்'' என்றேன், மீண்டும் காஃபி தம்ளரை எடுக்க வந்த ரூபிணியிடம். அவளும் தேஜலுக்காக இரக்கப்பட்டாள். ''பாவம் அந்தப் பெண். இப்போதாவது டாக்டரிடம் காட்டணுன்னு தோணித்தே உங்க ஃப்ரண்டுக்கு'' என்று சலித்துக் கொண்டாள்.

''ஒய்ஃபுக்கு நேத்து செக்கப்புக்குப் போயிருந்தோம். அந்த லேடி டாக்டரிடமே தேஜலையும் காண்பிச்சோம். அவள் ஏதாவது ஐ ஸ்பெஷலிஸ்ட்டிடம் காட்டுங்கன்னு சொல்றா. இவளுக்குக் கண்ணைப்பத்தி எதுவுமே தெரியாமலா இருக்கும்? எல்லா டாக்டர்களும் மெட்டீரியலிஸ்ட்களா போயிட்டாங்கடா'' என்று குறைபட்டுக் கொண்டான் அஜய்சிங்.

நான் சிரித்தேன். ''சரி, அப்போ சீனிவாசனிடம் இன்னிக்கு அப்பாயிண்ட்மெண்ட் சொல்லிடலாமா?'' என்று கேட்டேன் ஃபோன் ரிஸீவரை எடுத்தபடி.

அவன் மிகுந்த யோசனையுடன், ''சீனிவாசனா? அவர் கன்ஸல்டிங் ஃபீஸே நூறு ரூபாய் வாங்குவாரே'' என்று முணுமுணுத்தான்.

''அந்தப் பெண்ணுக்காக இல்லாவிட்டாலும் அவளுடைய கண்ணின் கிருமிகள் உங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது பாதிப்பு ஏற்படுத்தாம இருக்கணுமே'' என்றேன் மெல்ல.

''சரி, ஆனது ஆகட்டும். சொல்லிடு'' என்றேன். நான் ஃபோனிலேயே அவருடைய கிளினிக்குக்குப் பேசி தேஜல் பெயரைப் பதிவு செய்து ''டோக்கன் நம்பர் முப்பத்திநாலுடா. எட்டரை மணிக்கு மேல வரச் சொல்லி இருக்காங்க'' என்றேன்.

அடுத்த நாள் ஆர்வக்கோளாறில் ஆஃபீஸ் வரும் முன்பே அவனுடைய வீட்டுக்குச் சென்று விட்டேன். தேஜலின் கண்கள் லேசாக வீங்கியும் இருந்தன. ''நேத்து எட்டு மணிக்கு மேல லேசா தலைவலிக்கிற மாதிரி இருந்தது. இன்னிக்குத்தான் டாக்டரிடம் போகணும்'' என்றான் சர்வசாதாரணமான குரலில்.

அன்று பகலில் அவனுக்கு ராஞ்சியில் இருந்து ஃபோன் வந்தது. பேசி முடித்ததும் அவன் முகமெல்லாம் மலர்ந்து இருந்தது. ''அப்பாடா! என் பிரச்சினை ஒரு வழியா முடிஞ்ச துடா'' என்று பெருமூச்சு விட்டான்.

''மாமனாரிடம் ரெண்டு நாட்கள் முன்னால் விஷயத்தைச் சொல்லி இருந்தேன். மகளைப் பார்க்க நாளை மறுநாள் எல் லோரும் வர்றாங்க. அப்போ தேஜலுக்குப் பதிலாக வேறு ஒரு பெண்ணைக் கூட்டி வர்றாங்க. அது வந்ததும் இவளைப் பேக் பண்ணிடலாம். கழுதை, வரவர ஒண்ணுமே சரியாப் பண்ற தில்லை. எப்போ பாரு ரகசியமா அழுகை. சே! இவள் ஒழிஞ்சாலே வீட்டில் பாதி அமைதி வந்திடும்'' என்றான்.

அதன்பிறகு நான் சீனிவாசன் டாக்டரைப்பற்றி ஞாபகப் படுத்திய போது அவன் கண்டு கொள்ளவே இல்லை. ''இது நிஜமான கண்வலியே இல்லைடா. வேணும்னு நடிக்கறா. நிஜமா கண்வலி இருந்தா அடுப்பு வேலை எல்லாம் பார்க்க முடியுமா? அன்னிலேர்ந்து எல்லாம் பார்க்கத்தானே செய்யறா? எல்லாம் நடிப்பு'' என்றான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அவள் ஒன்றும் செய்வ தில்லைன்னு பிலாக்கணம் பாடினியே, அது பொய்யா இப்போது சொல்வது பொய்யா என்று நான் கேட்கவில்லை. நட்புக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

ஆனாலும் உள்ளூர உறுத்தல் இருந்தது. இவன் இனி தேஜலை நிச்சயமாக டாக்டரிடம் காட்டப் போவதில்லை. அவளு டைய கண்களைப் பார்த்தால் ஏதோ பிரச்சினை என்பது தெளி வாகத் தெரிகிறது. இப்படியே அவளை ஊருக்கு அனுப்பிவிடப் போகிறான். அவளுடைய ஏழைப் பெற்றோர் எங்கே மருத்துவம் பார்ப்பார்கள்?

ஏதோ நினைவின் ஓரத்தில் தேஜல் ஒரு குருட்டுப் பிச்சைக்காரியாகத் திரிந்து கொண்டிருக்கும் காட்சி உருப்பெற துடித்துப் போனேன். மனைவியிடம் புலம்பினேன்.

''கண்ணெதிரே நடக்குதுன்னு தெரிஞ்சும் ஒரு அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடியாதவனா கையாலாகாதவனா வேடிக்கைப் பார்க்கிறேனே ரூபா! நான் என்ன செய்யட்டும்? நானாவது அவளை டாக்டரிடம் கூட்டிப் போகிறேனே என்று உரிமையும் எடுக்க முடியாத நிலை. அவனுடைய வீட்டு உள் விவகாரத்தில் தலையிடுவதாக அவனுடைய ஈகோ அஃபக்ட் ஆனா எங்க ஃப்ரண்ட்ஷிப்புக்கு ஆபத்து. அப்படியாவது அந்தப் பெண்ணுக்கு நியாயம் கிடைக்கும்னா நான் அதைகூடத் செய்யத் தயார். அப்படி நட்பு முறிஞ்சாலும் அவன் அவளுக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப் போவதில்லை. அந்தப் பொண்ணு ஊருக்குப் போயிட்ட பிறகும் இது என்னை உறுத்திட்டே இருக்கும்னு தோணுதே ரூபி. ஏதாவது பண்ணேன்'' என்று இறைஞ்சினேன்.

அன்று இரவு ஆழ்ந்த யோசனைக்குப் பின் ரூபிணி ஒரு ஐடியா தந்தாள்.

மறுநாள் அஜய்சிங்கிடம் தயங்கித் தயங்கிக் கேட்டேன்: ''அந்தத் தேஜல் என்னிக்கு ஊருக்குப் போகுது?''

''இன்னும் நாலு நாளில்'' என்றான்.

''ஒரு ஹெல்ப் வேணும். எப்படிக் கேட்கறதுன்னு தயக்கமா இருக்கு. நீ தப்பா எடுத்துக்கக் கூடாது. இதெல்லாம் அதிக பட்ச எதிர்பார்ப்புன்னு உனக்கு பட்டதுன்னா ஃப்ராங்க்கா சொல்லிடு'' என்றெல்லாம் பீடிகை போட்டேன்.

''ஓ கமான்'டா. என்ன விஷயம்? சொல்லு. பாபிஜிக்கு ஏதாவது பிராப்ளமா?'' என்று கேட்டான் அக்கறையுடன்.

''ஆமாண்டா. ரூபிணி பீரியட்ஸ் டைமில் கொஞ்சம் அதிகமா சிரமப்படுவா. இப்போ பிரச்சினை. ஒரு ரெண்டு நாளைக்கு தேஜலை என் வீட்டுக்கு வேலைக்கு அனுப்பி வைக்க முடியுமா?'' என்று தயங்கிக் கேட்டேன்.

''இதில் இவ்வளவு தயங்கறதுக்கு என்னடா இருக்கு? இன்னிக்கு சாயங்காலமே கழுதையைக் கூட்டிட்டுப் போ. ரெண்டு நாளில்லை. அவள் ஊருக்குப் போகிறவரைக்கும் உங்க வீட்லயும் வேலை பார்க்கட்டும். ஓ.கே.? பாபிஜியின் உடல் நலத்தைக் கவனி.''

அடுத்த மூன்று நாட்கள் தேஜல் எங்கள் வீட்டுக்கு வந்தாள். அவள் அடிக்கடி அழுததற்குக் காரணம் விசாரித்தோம். வேறொரு ஊரில் வேலைக்கு அனுப்பப்பட்டிருந்த அவளுடைய அக்கா இறந்துபோய்விட்டதாக அஜய்சிங்கும் அவன் மனைவியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டாளாம். அவள் இவளுக்கு சிறுவயதில் மிகவும் பிரியமானவளாம். அவள் ஞாபகம் வந்து அழும் போதெல்லாம் அஜய்சிங்கின் மனைவி 'நிறைந்த வீட்டில் அழுது தொலைக்காதே' என்று அடிப்பாளாம், தேஜலைக் கதறி அழவிட்டு அவள் துக்கம் தீர அனுமதித்தோம். பிறகு ஆறுதல் சொல்லித் தேற்றினோம். ரூபிணி அவளைக் கண் டாக்டரிடம் அழைத்துப் போய்க் காட்டி மருந்து வாங்கிக் கொடுத்தாள். காலம் கடந்து கூட்டி வந்ததற்காக அவர் திட்டி இருக்கிறார். ஒரு மாதத்துக்கு விடாமல் சொட்டு மருந்து ஊற்ற வேண்டும், இல்லை என்றால் கண்ணே போய்விடும் என்றார். அவர் தந்த மருந்து மாத்திரைகளை தேஜலிடம் கொடுத்து ரகசியமாக வைத்துக் கொள்ளச் சொன்னோம். டாக்டரிடம் கூட்டிப் போனதை யாரிடமும் சொல்லக்கூடாது என்று உறுதி மொழி வாங்கிக் கொண்டோம். கடந்த நாட்களில் அவள் முகத்தில் இருந்த வாட்டம் மறைந்து மலர்ச்சி மீண்டிருந்ததாகப் பட்டது.

அவள் ஊருக்குக் கிளம்புகிற நாளில் கண்களின் சிவப்பு கணிசமாக மாறி இருந்தது.

''நான் சொல்லலை, எல்லாம் நடிப்புன்னு? இப்போ பாரு நான் மருந்து எதுவும் தரவில்லை. கண் சிவப்பும் வீக்கமும் எங்கே போச்சுதாம்?'' என்றான் அஜய்சிங் வெற்றிக் களிப்பில்.

# 12. குசேல மாளிகை

என்னைக் கடந்து சென்ற கார் அவசரமாக இடப்புறம் ஒதுங்கி சாலையுடன் டயரை அழுத்தித் தேய்த்துச் சத்தமிட்டு நின்று என் கவனத்தை ஈர்த்தது. வெந்தய வர்ண ஜென். எத்தனைமுறை பார்த்தாலும் சலிக்காத அதன் பின்னழகு எனக்கு மிகவும் பிடிக்கும். வேறெந்தக் காரிலும் காண முடியாத ஒரு வித வளைவு. சிம்ரன் மாதிரியான அழகான இடுப்புக்காரப் பெண் கர்ப்பமான ஆரம்ப மாதங்களில் வயிறு லேசாக மேடிட்டிருக்கும் போதுதான் இந்த மாதிரியான வளைவு சாத்தியம். இதனை வடிவமைத்த ஜப்பான்காரனுக்கு என்ன ஒரு ரசனை என்று ஒவ்வொரு முறை ஜென் காரினைப் பார்க்கும் போதும் நினைத்து மனதுக்குள் பாராட்டுவேன்.

அந்தக்காரின் பின்பக்கக் கண்ணாடியில் ஜெயின் மெரைன்ஃபுட்ஸ் என்று எழுதப்பட்டிருந்தது. ஓட்டுநர் பக்கக் கதவைத் திறந்துகொண்டு வெளி இறங்கி என் பக்கமாகத் திரும்பி, ''ஹலோ பாஸ்கர்! எப்படிடா இருக்க?'' என்று கேட்ட படியே தன் ரேபான் கண்ணாடியைக் கழற்றும் வரை ராஜேஷை எனக்கு அடையாளமே தெரியவில்லை. இவன் இங்கே எப்படி? நம்ப முடியாமல் பார்த்தேன்.

எனக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது. வேகமாக அவன் அருகில் போனேன். மீண்டும் தன்னை வண்டிக்குள் திணித்துக் கொண்ட ராஜேஷ், காரின் மறுபக்கக் கதவினைத் திறந்து விட்டவனாக, ''ஏறுடா'' என்றான் அதே பழைய உரிமையுடன்.

அந்தக் காருக்குப் பொருத்தமில்லாத என் உடையைப் பற்றிய பிரக்ஞையே இன்றி நான் ஏறிக்கொள்ள சில்லென்ற குளிர்

என்னைத் தாக்கியது. மாலை வேளைதான் என்றாலும் இறங்கு வெயிலின் தாக்கம் வெளியே அதிகமாகத்தான் இருந்து இருக்கிறது என்பதை இந்தக் காரின் குளிர்ச்சித் தழுவலில் உணர முடிந்தது.

''பார்த்து எவ்வளவு வருஷங்களாச்சுடா'' என்று பேச்சினை ஆரம்பித்தான் ராஜேஷ்.

நானும் அவனும் கல்லூரி நாட்களில் அப்படி ஒரு நெருக்கம். எனக்கும் அவனுக்கும் இடையே இருந்த பொருளா தார வித்தியாசத்தை நாங்கள் இருவருமே எப்போதும் உணர்ந்தது கிடையாது. நான் தூத்துக்குடிக்காரன், உப்பளம் ஒன்றில் கணக்குப் பிள்ளை என் அப்பா. அவன் சென்னை. அவனுடைய அப்பா செக்கரட்டேரியல் சர்வீஸில் இருந்தார். இருவரையும் ஒன்றாக்கி யிருந்தது மதுரை கல்லூரி ஹாஸ்டல். என்னிடம் அவனுக்கு என்ன பிடித்தது, அவனிடம் எனக்கு என்ன பிடித்தது எதுவும் இரு வருக்கும் தெரியாது. ஆனால் இருவருக்கும் பரஸ்பரம் அடுத்த வரைப் பிடித்திருந்தது. ஆழமான நட்புக்கு அடிப்படை இலக் கணமே அதுதான் என்று எங்கள் ஹாஸ்டலில் இருந்த சைக்காலஜி படித்த திலீப் அடிக்கடி சொல்லுவான்.

''எங்கே போகலாம் சொல்லு'' என்றான் ராஜேஷ்.

''என்ன விஷயம்? பீச்சுக்குப் போகலாமா?''

''ஓ, கம்மான்'டா. நான் இன்னிக்கு ரெட்டை சந்தோஷத்தில் இருக்கேன். என்னுடைய டிரிப்பில் கிடைத்துள்ள வெற்றியைவிட உன்னை இத்தனை வருஷங்களுக்கு அப்புறம் பார்க்க முடிந்த சந்தோஷம். ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் திஸ். இதனைக் கொண்டாடியே ஆகணும்.''

ராஜேஷுக்கு சந்தோஷம் வந்துவிட்டால் உடனடியாக பீர் அடித்தே தீர வேண்டும். அதுவும் என்னுடன். எல்லாச் செலவும் அவனே செய்வான். அவனுக்குத் தேவை எல்லாம் என்னுடைய கம்பெனி மட்டும்தான். காம்ப்ளெக்ஸ் இல்லாமல், பஞ்சப்பாட்டு

பாடாமல், ஏக்கப் பெருமூச்சு விடாமல் கல்லூரிகளில் நண்பர்கள் கிடைப்பது பத்து வருடங்களுக்கு முன், அதுவும் மதுரையில், கொஞ்சம் கடினம்தான். அவனுடைய பேச்சுக்களைக் கேட்பதற்கு, அவனுடன் வாதம் செய்வதற்கு, அவன் இழுத்த இழுவைகளுக்கு ஈடு கொடுப்பதற்கு சில சமயங்களில் லகான் போடுவதற்கு எல்லாம் நான்தான் சரி.

என்னுடைய வசதிக்கு நினைத்துக் கூடப் பார்க்க முடியாத மதுரையின் பல ஓட்டல்களும் பார்களும் ராஜேஷின் உபயத்தில் தான் அடியேனுக்கு அறிமுகம். அதெல்லாம் ஒரு காலம்.

சுகம் ஓட்டலின் மாடி பாருக்குப் போனோம்.

''பீர் தானா? வேறு ஏதாவது ஹாட் ட்ரிங்க்ஸ்?'' என்று கேட்டான் ராஜேஷ்.

''ஆஸ் யூ விஷ்'' என்றேன்.

''நீ மாறவே இல்லைடா'' என்று சிரித்தவாறே பீருக்கு ஆர்டர் செய்தான்.

''ஸோ, நீ என்ன பண்ற?''

சிரித்தேன். ''அப்படியே தான் இருக்கேன். வேலைக்கு முயற்சி பண்ணிட்டிருக்கேன்'' அப்பாவுக்கு வாதம் வந்து கணக்குப்பிள்ளை உத்தியோகம் போனதையும், அம்மா உப்புக் கம்பெனிக்கு தினக் கூலியாளாக அவ்வப்போது பண்டல் போடப் போய் சம்பாதிப்பதில் தான் குடும்பமும் தங்கைகளின் படிப்பும் தடுமாறிக் கொண்டிருப்பதையும் இவனிடம் ஏன் இப்போது சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

''படிப்பு முடிச்சதும் வேலையில்லாத பட்டதாரியா குறைஞ்சது நாலு வருஷமாவது வெட்டிச்சோறு தின்னுட்டு ஊர் சுத்தணும்னு படிக்கிற காலத்தில் சொல்லுவியே, தடியா அதை நிரூபிக்கணும்னு அலையறியா?'' என்று சிரித்தபடியே சிகரெட்டு ஒன்றைப் பற்றவைத்து என்னிடம் நீட்டினான். இன்னொன்றைத்

தனக்காகப் பற்றவைத்துக் கொண்டு புகை இழுத்து ஊதினான். இதுவும் கல்லூரி நாள் பழக்கம் தான்.

பலப்பல மாதங்களுக்குப் பிறகு சிகரெட் பிடிப்பதில் எனக்கு லேசாக இருமல் வந்தது.

''வேலை ஒண்ணு தேடிக்கோடா. நிஜமாகவே பொறுப்பு வந்திடும். நான் ஒருவருஷம் சும்மா இருக்கலாம்னு முயற்சி பண்ணினேன். மாமாவோட பிஸினஸில் ஜஸ்ட் போய் ஒட்டிக் கிட்டேன். இப்போ நினைத்ததைவிட அதிக வளர்ச்சி. இங்கே வந்தது கூட ஜெயின் மெரைன்ஃபுட்ஸ் கம்பெனியோட ஒரு சின்ன ஒப்பந்தத்துக்காகத்தான். அனிக்கா ஓட்டலில்தான் தங்கி யிருக்கேன். ஜெயினோட கார்தான் நான் ஓட்டிட்டிருப்பது. ஊருக்குப் போறது வரைக்கும் வச்சுக்கோன்னு கொடுத்திட்டார். பெரிய புள்ளி போலடா. பிஸினஸ் அவரோட இரத்தத்திலேயே இருக்கு. என்ன மாதிரியான ஒரு பேச்சு சாதுரியம். நாமெல்லாம் இந்த விஷயத்துல வடக்கத்திக்காரனுங்க கிட்ட பிச்சைதான் எடுக்கணும்.''

பீர் வந்து சேர கோப்பைகளில் நுரை பொங்க ஊற்றிக் கொடுத்து முந்திரியும் பக்கோடாவும் வைத்து விட்டு நகர்ந்தான் பேரர்.

நான் பழைய வழக்கம்போல் ஒரே மூச்சில் அரை கோப்பையைக் காலிசெய்து அதே அவசரத்துடன் பக்கோடாத் துண்டு ஒன்றை வாயில் போட்டுக்கொள்ள ராஜேஷ் மெதுவாக சீப்பிக் குடித்தான். ''நீ மாறவே இல்லைங்கறது எனக்கு சந்தோஷமா இருக்குடா. அப்படியே பழைய் நாட்களுக்குப் போயிட்ட மாதிரி இருக்கு'' என்றான்.

ஏதோ பேசியபடியே இருந்தோம். பத்து வருடங்களுக்கு முன்போய் இருவரும் வயது மறந்து திளைத்தோம். நான் விலை கருதி பதறி மறுத்த உணவுப் பதார்த்தங்களை எல்லாம் ஆர்டர் செய்தான் ராஜேஷ். இருவருக்கும் இருக்கும் மனோ நிலையில்

அவற்றில் பாதிக்கும் மேலானவை வீணாகத்தான் போகிறது என்று நான் தடுத்தும் அவன் கேட்கவில்லை.

பில் தொகை என்னை உறுத்தாமல் இல்லை.

''டிப்ஸ் நீதான் கொடுக்கணும்னு சொல்லுவியே'' என்று சிரித்தான் ராஜேஷ்.

பழைய நாட்களில் குறைந்த பட்சம் அந்தச் செலவாவது நான்தான் செய்வேன் என்று பிடிவாதமாக இருப்பது வழக்கம். என் காசா என்ன? அப்பா மணியார்டர் பண்ணியது தானே? அதுவும் அப்போதைய மதுரை ஓட்டல்களில் ஒரு ரூபாய் டிப்ஸெல்லாம் பெரிய தொகை. தண்ணி அடித்தால் வருகிற தாராள மனப்பான்மையினால் இரண்டு ரூபாய் வைத்துவிட்டு மயிலுக்குப் போர்வை தந்த பேகனாக வரித்துக்கொண்டு மகிழ்ந்ததுண்டு.

இன்று சட்டைப் பையில் இருக்கும், எவ்வளவோ செலவு களுக்கான பட்ஜெட் தொகையாகிய ஐம்பது ரூபாய் நோட்டு இப்போது டிப்ஸாகப் போகிறதே என்கிற பதற்றம் வெளித் தெரியாமல் இருக்க பிரயத்தனம் செய்யவேண்டி இருந்தது.

சிகரெட் பற்ற வைத்தபடி வெளியே வந்தோம்.

''நாளைக் காலை கிளம்பிடுவேண்டா. மதுரையில் ஒரு வேலை இருக்கு. சென்னை வந்தா கட்டாயம் வந்து பாருடா'' என்றபடி கார்டு எடுத்து நீட்டினான்.

நான் பல காரணங்களால் கனத்திருந்த நெஞ்சுடன் மௌனமாக இருந்தேன்.

அவனுடைய வீட்டார்பற்றி நான் விசாரித்தாலோ என்னு டைய வீட்டார்பற்றி அவன் விசாரித்தாலோகூட பழைய நாட் களின் நினைவுச் சங்கிலியின் தொடர் அறுந்து விடுமோ என்று பயந்தது போல் இருவரும் அதைத் தவிர்த்தோம்.

''தென்? வேறென்ன?'' என்று கேட்டான் ராஜேஷ்.

வெறுமனே புன்னகைத்தேன். ஐம்பது ரூபாயின் இழப்பில் சட்டைப்பை மிகவும் லேசாகி இருந்தது.

என்னுடைய அவசரத் தேவைகளை நிறைவேற்றித் தர முடிகிற நிலையில் அவன் இருப்பதும், கேட்டுக்கொள்ள முடிகிற நெருக்கத்தில் நான் இருப்பதும் தெரிந்திருந்தும்கூட ஏதோ ஒன்று என் வாயைக் கட்டிப் போட்டு அமைதியை அடைகாத்தது.

சிகரெட்டின் கடைசித் துணுக்கை ஆழ இழுத்துவிட்டுக் கீழே எறிந்த ராஜேஷ் சந்தோஷம் குறையாத குரலில், "நான் சற்றும் நினைத்துக் கூடப் பார்க்காத இன்ப அதிர்ச்சி. இன்று நான் உன்னைச் சந்தித்ததும் அதன் பிறகான கணங்களும், என்னுடைய இன்றைய தூத்துக்குடி வியாபாரப் பயணத்தின் வெற்றியே அதை என் மனம் விரும்பிய விதத்தில் கொண்டாட முடிந்ததில் தான் இருந்தது என்பேன்" என்றான் என் கைகளை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு.

நான் மறுத்தும் பிடிவாதமாக என்னை வீட்டில் இறக்கி விட்டுப் போவதாக வண்டியைக் கிளப்பினான். காரில் இருவருமே ஏதும் பேசிக் கொள்ளவில்லை. டூவிபுரத்தின் ஆரம்ப முனையில் இறங்கிக் கொண்டேன்.

எனக்காகவோ அல்லது என்னுடனோ அவன் இன்று செலவழித்த அல்லது வீணாக்கிய தொகையில் பாதியை என்னிடம் தந்திருந்தால்கூட அடுத்த சில நாட்களை நிம்மதியாகக் கடத்தி இருக்க முடியும். மூன்று நாட்களாக இருமிக் கொண்டிருக்கும் அம்மாவை வேலைக்குப் போகாமல் ஆஸ்பத்திரிக்குப் போக வைத்திருக்க முடியும். மூத்த தங்கைக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டி இருக்க முடியும். இரண்டொரு வேலைக்கான விண்ணப்பங்கள் அனுப்பி இருக்க முடியும்.

வாய்க்கு வாய் 'நீ மாறவே இல்லைடா' என்பவனிடம் நான் மாறி இருப்பதை எப்படிக் காட்ட முடியும்? எனக்காக இவ்வளவு செலவழிக்க முடிந்தவனுக்கு, அவனுடைய பழைய

நண்பனாகவே கம்பெனி கொடுப்பதைவிட வேறெந்த விதத்தில் என்னால் சந்தோஷம் அளித்திருக்க முடியும்?

''சாப்பிட்டுப் படுடா'' என்று சொல்லப் போகும் அம்மாவிடம் நான் வெளியே சாப்பிட்டு விட்டேன் என்று சொல்ல வேண்டும். நான் வேலை கிடைக்காத வருத்தத்தில் சாப்பாட்டைக் குறைத்து விட்டதாக எடுத்துக்கொண்டு ஒரு பாட்டம் வருந்துவாள். தகுதி இல்லாத ஒரு தியாகிப் பட்டம் கிடைக்கும்.

என்னை இறக்கி விட்டுவிட்டு அவனுடைய கார் பறந்து விட்டது. வாயருகில் கையை வைத்து ஊதிப் பார்த்து பீர் வாடையோ சிகரெட் வாடையோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டேன். மீண்டும் என் சாஸ்வதமாகிய நடை பாதையில் நடந்தேன். சந்துமுனை திரும்பினால் மூன்றாவது ஓட்டு வீடு என்னுடையது. அங்கே திரும்பியதும் அந்த வீட்டில் ஒளி வெள்ளமாக இருக்க, வெளியிலேயே அம்மாவும் அப்பாவும் தங்கைகளும் நகைகள் மற்றும் புத்தாடைகளில் மிளிர்ந்த வண்ணம் எனக்காகக் காத்திருக்க, வாசலில் நின்றிருக்கும் கார் ஒன்றிலிருந்து இறங்கும் சேவகன், 'சார்! ஜெயின் மெரைன்ஃபுட்ஸில் இருந்து வந்திருக்கேன். இதோ உங்க அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர். உங்களை நாளைக் காலையில் வந்து ஜோனல் மேனேஜரா ஜாயின் பண்ணச்சொல்லி முதலாளி அனுப்சாருங்க சார்' என்று சொல்வது போன்ற கற்பனைகளுடன் நடக்க சுகமாக இருந்தது.

# 13. மனைவி

**வீ**ட்டைப் பார்த்த மாத்திரத்தில் கவுசல்யாவின் விழிகள் பெரிதாக விரிந்தன.

''பிரமாதமா இருக்குங்க. இங்கேயே வந்து விடலாம். பக்கத்துலதான் ரயில்வே ஸ்டேஷன். நீங்க ஆஃபீஸுக்கு எலக்ட்ரிக் டிரெயின்லேயே போயிட்டு வர்றதுக்கு எளிதாயிருக்கும்.''

சிரித்தேன். ''பொறு. என்னவோ எனக்கு டிரான்ஸ்ஃபர் ஆர்டரே கைக்கு வந்து அங்கே இருந்து ரிலீவ் பண்ணிட்ட மாதிரிப் பேசறியே.''

''இவர் எப்பவும் இப்படித்தான் திவ்யா. எல்லாம் நடந்து முடியும்வரை வாயே திறக்கக் கூடாதுன்னு ஒரு பிரின்சிபிள். இன்னும் ஒரு வாரத்தில் டிரான்ஸ்ஃபர் ஆர்டர் கைக்கு வந்திடும். அதுக்கப்புறம் வீட்டுக்கு அலைந்தால் கிடைக்குமா? நல்ல வேளை, உன் வீட்டு விசேஷத்துக்கு வந்தோம். உனக்குப் பக்கத்திலேயே இந்த அழகான புது வீடு கிடைத்தது. ஓனர் கிட்ட சொல்லி வைடி.''

''ஆமாம் சார். நீங்களே வந்திடுங்க. லேடீஸ் ஒருத்தருக் கொருத்தர் நல்ல கம்பெனியா இருந்துப்பாங்க. பக்கத்துலயே ஸ்கூல் இருக்கு. எங்க பெண்ணும் அங்கேதான் படிக்கிறா. நல்ல ஸ்டாண்டர்டு'' என்று திவ்யாவின் கணவரும் சிபாரிசு செய்வது போல் பேச ஆரம்பித்தார்.

''மலர் ஆஸ்பத்திரியோ அப்போலோவோ இங்கிருந்து ரொம்ப தூரமாச்சேன்னு பார்க்கிறேன். பக்கத்தில் நல்ல நர்ஸிங்

ஹோமோ ஆஸ்பிட்டலோ இருக்கா?'' என்று தயங்கினாற் போல் கேட்டேன்.

கவுசல்யா என்னைப் பார்த்த பார்வைக்கு அப்போது எனக்கு அர்த்தம் தெரியவில்லை.

''என்ன சார், யாரும் வீடு பார்த்தா ஸ்கூல் வசதி, பஸ் டிரெய்ன் வசதி, மார்க்கெட் வசதிபற்றி யோசிப்பாங்க. நீங்க வித்தியாசமா ஆஸ்பத்திரிபற்றி யோசிக்கிறீங்க...'' என்று சிரித்தார் அவர்.

நான் பதில் சொல்ல யத்தனிக்கும் முன், ''அவர் எப்பவும் இப்படித்தாங்க. எல்லோரும் ஒரு திசைல யோசிச்சா இவருக் குன்னு ஒரு திசை இருக்கும். நான் பார்த்துக்கறேன். திவ்யா! நீ இந்த வீட்டுக்குக் கட்டாயம் சொல்லி வச்சிடு. நாங்கதான் வர்றோம். ஓ.கே.?'' என்றாள் கவுசல்யா முத்தாய்ப்பாக.

சென்னையிலிருந்து ஊருக்குத் திரும்புகையில் வழி நெடுக எனக்கு இதே சிந்தனையாக இருந்தது.

கவுசல்யா உற்சாகத்தின் உச்சத்தில் இருப்பது வெளிப்படை யாகவே தெரிந்தது. கடந்த ஐந்து நாட்களாகவே இப்படித்தான் இருக்கிறாள்.

அதற்கு முன்பு வரை அவளுக்குள் சென்னை போய் வாழ வேண்டும் என்கிற விருப்பம் எல்லாம் இருந்த மாதிரி காட்டிக் கொண்டதில்லை. இப்போது இருக்கும் ஊரில் அவள் சந்தோஷ மாக இருப்பதாகத்தான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

கனவிலும் நினைத்திராத வாய்ப்பு திடீரென்று கண் முன் தெரிய இப்படி பிரமித்துப் போய் விட்டாளோ என்று பட்டது. சென்னைக்குப் பணி மாற்றம் கூடவே பழைய நாள் தோழியின் வீட்டுக்குப் பக்கத்திலேயே குடியிருக்க வீடு என்று அடுத்தடுத்த பம்பர் பரிசுகள் அவளைத் திணற வைத்துக் கொண்டிருப்பது புரிந்தது.

இந்தியாவெங்கும் பரந்து விரிந்து கிளைகள் பரப்பி இருக்கும் பிரம்மாண்ட கம்பெனியின் இந்த ஊர் ப்ராஜக்டில்

இருப்பவன் நான். கிராமம் என்றும் சொல்ல முடியாத நகரம் என்றும் சொல்ல முடியாத ரெண்டுங்கெட்டான் ஊர் இது. சராசரி வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை விஷயங்கள் மட்டுமே கிடைக்கும். சாதாரண பள்ளிக்கூடங்கள், ஒரே ஒரு அரசினர் கலைக் கல்லூரி, சாதாரண ஓட்டல்கள், இரண்டே இரண்டு ஏ.சி. இல்லாத சினிமா தியேட்டர்கள், சொற்ப எண்ணிக்கையில் ஓடும் ஆட்டோ மற்றும் டாக்ஸிகள்...இவ்வளவுதான் ஊர்.

இந்த ஊரில் சுமாரான அளவு வீட்டில், நான், மனைவி திவ்யா, எட்டு வயது மகன், ஆறு வயது மகள், வயதான அம்மா, என் தங்கை என்கிற ஆறு பேரும் எங்கள் கஷ்டங்களுடன் இஷ்டமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எங்கள் கம்பெனியின் தெற்கு பிராந்திய உயர்நிலை மேலாளர் ரமேஷ் சார். மிகவும் திறமைசாலி. கம்பெனி வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தவர். அதனாலேயே சக்தி வாய்ந்தவர். அவர் இங்கிருந்து விடுபட்டு அமெரிக்கா போய் செட்டில் ஆகப் போகிறார் என்ற போது மொத்தக் கம்பெனியும் வாழ்த்து ஒருபக்கமாகவும் வருத்தம் ஒருபக்கமாகவும் உணர்ந்தது. ஒவ்வொரு கிளையும் அழைத்து அழைத்து பிரிவு உபச்சார விழா நடத்தியது. அப்படித்தான் இரண்டு நாள் விஜயமாக எங்கள் கிளைக்கு வந்திருந்தார்.

வேலையில் ஒழுங்கானவன் என்பதனாலேயே என்னை அவருக்கு மிகவும் பிடிக்கும். வரும்போதெல்லாம் என்னைப் பற்றித் தனியே விசாரித்து நான்கு வார்த்தைகளாவது பேசாமல் போனதில்லை அவர்.

அந்த உரிமை தந்த தைரியத்தில் ''எங்க வீட்டுக்கு வாங்களேன் சார்...'' என்று நான் அழைக்க, அவரும் சட்டென்று ''ஓ.கே. இன்னைக்கு மாலை டீ உங்க வீட்டில் தான்'' என்று ஒப்புக் கொண்டது எனக்கு மட்டுமல்ல, கம்பெனியில் எல்லோருக்குமே ஆச்சரியம்.

வீட்டுக்கு அவசரமாக ஃபோன் செய்து கவுசல்யாவிடம் விவரம் சொன்னேன்.

கை வேலைகளில் கவுசல்யாவின் நேர்த்தி யாருக்கும் வராது. விருந்து உபசரிப்புகளில் அவள் இணையற்றவள். ''தாராளமாகக் கூட்டிட்டு வாங்க. ஜமாய்த்து விடலாம்'' என்றாள்.

''முக்கியமான விஷயம். அம்மாவும் தங்கையும்...'' என்று இழுத்தேன்.

''நான் பார்த்துக்கறேன். நீங்க கவலைப்படாதீங்க'' என்றாள்.

மாலை. வீட்டுக்கு ரமேஷ் சார் உள்ளிட்ட மேலதிகாரிகள் புடைசூழப் போனபோது அவரே பிரமித்து விட்டார்.

''என்ன மிஸ்டர் பிரேம், வெறும் டீன்னு சொல்லிட்டு டின்னரே வச்சிட்டீங்க'' என்றார்.

கவுசல்யா கைப்பட செய்து மேசை முழுக்க பரப்பி இருந்த பலவித பட்சணங்களையும் ரசித்து சுவைத்தார். வீட்டின் அழகை அதைப் பராமரித்திருந்த நேர்த்தியைப் பாராட்டினார். கவுசல்யா வைப் புகழ்ந்தார். குழந்தைகளின் படிப்புபற்றி விசாரித்தார்.

எல்லாம் நன்றாக இருந்தது. அவர் கிட்டத்தட்ட கிளம்ப இருந்தார்.

எங்கிருந்து எப்படி வந்தாள் என்று தெரியவில்லை. தங்கை கிழிந்த புடவையுடனும் புதிதாகக் கீறிக் கொண்டிருந்த கன்னக் கோடுகளுடனும் விரிந்த தலையுமாக அங்கே ஓடி வந்தாள்.

என்ன நடக்கிறது என்கிற திகைப்பிலிருந்து யாரும் விடுபடும்முன் மேசை மீது இருந்த பாத்திரங்களைத் தட்டி விட்டாள். பயந்து விலகிய ஓரிருவரைப் பார்த்து பழிப்புக் காட்டினாள்.

பின்னேயே ஓடிவந்த அம்மாவின் நெற்றியில் வீக்கம் இருந்தது. புதிதாக வாங்கிய அடி என்று தெரிந்தது.

நான் துள்ளி எழுந்து முன்னே போய் நிற்க தங்கை பெட்டிப் பாம்பாய் அடங்கினாள். ''பாருண்ணா! அம்மா என்னை அடைத்து வைக்கப் பார்க்கிறாள். கட்டிப் போடப் போறா. நான்

நல்லாத்தானே இருக்கேன். நான் என்ன மிருகமா?'' என்றாள் தெளிவான குரலில் கண்களில் நீர் மல்க.

நான் அவளைத் தட்டிக் கொடுத்தவாறே உள் அறைக்குக் கூட்டிப் போய் சமாதானம் செய்து உட்கார வைத்துவிட்டு முன் அறைக்கு வந்தேன்.

கொஞ்ச நேரம் முன்பு வரை உற்சாகமும் களிப்புமாக இருந்த இடம் இழவு வீடு மாதிரி கோலம் கொண்டிருந்தது.

ரமேஷ் சாரின் முகத்தில் இருந்த உணர்வுகளை என்னால் படிக்க முடியவில்லை. என்னுடைய மேலதிகாரியின் முகத்தில் தெரிந்த எரிச்சலும் கோபமும் நியாயமானவையே என்று பட்டது. என்ன செய்வது என்று புரியவில்லை.

பொதுவாக மன்னிப்புக் கேட்டேன்.

அனைவரும் அமைதியாக விடைபெற்றுச் சென்றார்கள்.

மறுநாள் காலை. ரமேஷ் சார் கிளம்பும்முன் சம்பிரதாயக் கை குலுக்கல்கள், கடைசி நேரப் பிரியா விடைகள், வாழ்த்துக்கள், அறிவுரைகள் எல்லாம் முடிந்தபடி இருக்க நான் அவை எதிலும் பட்டும் படாமலுமாக ஒதுங்கி இருந்தேன். குற்ற உணர்வில் மருகிக் கொண்டிருந்தேன்.

ரமேஷ் சார் என்னை ப்ராஜக்ட் மானேஜரின் அறைக்கு அழைப்பதாக செய்தி வந்தது.

நேற்றைய நிகழ்வுகள் எனக்குள் உறுத்தலாக இருந்தன. நான் கொஞ்சம்கூட எதிர்பாராமல் நடந்து விட்டவை அவை. என்னுடைய கவனக் குறைவுதான் காரணம் என்கிற அளவுகூட என்னால் சமாதானம் செய்துகொள்ள முடியவில்லை. எல்லாவற் றையும்மீறி நடந்துவிட்ட அசம்பாவிதம் அது. ரமேஷ் சாரை வீட்டுக்கு அழைத்ததுதான் தவறோ என்று வேண்டுமானால் சுய பச்சாத்தாபம் பூசிக் கொள்ளலாம். என்ன பயன்?

தயங்கியபடி சென்று அவரை ஏறிட்டேன்.

மற்ற அனைவரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு ரமேஷ் சார் என்னிடம், ''உங்க வீட்டில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?'' என்று ஆரம்பித்தார்.

என் விதவைத் தாய், தங்கை இருவரையும் பற்றிச் சொல்ல வேண்டியதாயிற்று.

''அண்ணன்கள் இரண்டு பேர் மும்பையிலும் டில்லியிலும் இருக்காங்க சார். அம்மாவும் தங்கையும் கிராமத்துல இருந்தாங்க. தங்கை சிறுவயதில் ஒரு விபத்தில் மூளை வளர்ச்சி சரிவர இல்லாதவளா போயிட்டா. கிராமத்துல பேய், முனி, ஆவின்னு அந்த கோணத்துல சிகிச்சை தர்றதா சொல்லிப்படுத்திய பாட்டில் அவள் நிலைமை மோசமாயிட்டே போச்சு. அது சகிக்காமத்தான் என்னோட கூட்டி வந்து வச்சுக்கிட்டேன். இங்கே ஓரளவு நல்லா இருப்பா. வீட்டுக்குள்ளே எந்தத் தொந்தரவும் தராம வளைய வருவா. எனக்கு நல்ல மனைவி வாய்ச்சது நான் செய்த புண்ணியம். இன்று வரைக்கும் அவள் எங்கம்மாவும் தங்கையும் இருப்பதுபற்றி ஒரு முணுமுணுப்பு ஏற்படுத்தினது கிடையாது. இன்ஃபாக்ட் அவளுடைய பாந்தமான பேச்சுக்களாலதான் தங்கை ஓரளவு குணமாயிட்டு வர்றாள்னு சொல்லணும்...''

ரமேஷ் சாரின் முகம் தீவிர சிந்தனையில் இருந்தது.

''நேற்று அவளை அறையில் அடைத்து வைத்ததனால் தான் அக்ரஸிவ்வா ஆயிட்டாள்னு நினைக்கிறேன். உங்களை வீட்டுக்குக் கூப்பிட்டு அவமானப்படுத்தின மாதிரி ஆயிடுச்சு. மன்னிப்பு கேட்கக்கூடக் கூச்சமா இருக்கு சார்...''

ரமேஷ் சார் இடது கையை உயர்த்தி அடக்கினார்.

''உங்க அண்ணண்களுடன் உங்களுக்குத் தொடர்பு எப்படி?''

''பேச்சளவில் ஓ.கே. சார். ஆனா அம்மாவையும் தங்கையையும் ஏன் கூட்டிட்டுப் போக மாட்டேங்கறாங்கன்னு தெரியலை சார்.''

''உங்க தங்கைக்கு என்ன டிரீட்மெண்ட் கொடுக்கறீங்க?''

''மாசம் ஒரு தடவை சென்னைக்குக் கூட்டிப் போய் சைக்கியாட்ரிஸ்டிடம் காட்டறேன். அங்கேயே அட்மிட் பண்ணி டிரீட்மெண்ட் கொடுக்க வாய்ப்பில்லை. ஏதோ ஓடிட்டிருக்கு...''

''ஐ.ஸீ. நீங்க ஏன் சென்னைக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிக்கக் கூடாது?''

''சார்...'' என்று திக்கினேன். ''நடக்கிற காரியமா சார்? இருக்கிற போட்டியில எனக்கு சென்னை டிரான்ஸ்ஃபர் எல்லாம் நினைச்சுக்கூடப் பார்க்க முடியுமா?''

''நீங்க இப்போதே ஒரு அப்ளிகேஷன் கொடுங்க. நான் போவதற்கு முன் இன்னும் ஒரே வாரத்தில் உங்களை சென்னைக்கு மாற்றிவிட்டுப் போகிறேன்.''

ரமேஷ் சாரின் முகம் தீவிரமாக இருந்தது.

பேருந்து ஒரு திருப்பத்தில் விரைந்து திரும்ப கவுசல்யா முழு கனத்துடன் என் மீது சரிந்தாள். அந்த அதிர்விலேயே விழித்தும் கொண்டாள்.

''என்னங்க, தூக்கம் வரலியா?''

''ம்'', என்றேன் சிந்தனை வயத்துடன்.

''நாம் இப்போ பார்த்திருக்கிற வீட்டில் தங்கையும் அம்மாவும் இருப்பதற்குத் தனி அறை இல்லையே. அதுதான்...'' என்று தயக்கமாக இழுத்தேன்.

கவுசல்யா முழுதுமாகத் திரும்பி என்னை ஒருமுறை உற்றுப் பார்த்தாள்.

அவளுடைய பார்வையின் தீட்சண்யம் தாங்காமலோ என்னவோ திரும்பிக் கொண்டேன்.

''இதுதான் கவலையா? ஏதாவது ஏற்பாடு பண்ணிக்க லாம். நாளைக்குச் சொல்றேன். இப்போதைக்கு நிம்மதியா தூங்குங்க.'' என்றபடி கொட்டாவி விட்டாள்.

எனக்குத் தூக்கம் வரவில்லை.

என்ன ஏற்பாடாக இருக்கும்? இப்போதைக்கு அம்மாவையும் தங்கையையும் கிராமத்துக்கு அனுப்பிவிட்டு நாம் மட்டும் சென்னைக்குப் போகலாம். அங்கே பிள்ளைகள் ஸ்கூல் எல்லாம் செட் ஆனப்புறம் அவங்களைக் கூப்பிட்டுக்கலாம் என்பாளோ...

இந்த சிறு ஊரில்தான் வாழ்க்கை என்று இருந்த வரை கோயில், சினிமா என்று கிளம்புவதாக இருந்தால் கூட அம்மா, உங்க தங்கை என்று மையப்படுத்தியே சிந்தித்து வந்த கவுசல்யா சென்னை வாழ்க்கை கூப்பிடு தூரத்தில் கண்ணில்பட்ட மாத்திரத்தில் மாறிவிட்டது போல் தோன்றியது.

முதலில் பிள்ளைகள் என்று ஆரம்பிப்பவள் பிறகு சுற்றுப்புறம் அங்கே இருக்கும் எவருடனும் ஒட்டாத சுயநல வாழ்க்கை முறை எல்லாம் பார்க்கப் பார்க்க அம்மாவையும் தங்கையையும் சுமையாக நினைக்க ஆரம்பித்துவிட மாட்டாளா? அப்படி நினைத்தால் அதைத் தப்பென்று சொல்ல முடியுமா? ஒரு பெண், தான் தன்குடும்பம் தன்பிள்ளைகள் என்று சிந்திப்பதைத் தவறு என்று யாராவது சொல்வார்களா?

அண்ணன்கள் இருவரும் அப்படி இருப்பதற்குக் காரணம் கூட லேசாகப் புரிந்த மாதிரி இருந்தது.

சென்னைக்குப் போன பிறகு கவுசல்யா அம்மாவையும் தங்கையையும் அழைத்துக் கொண்டாலும் கொள்ளலாம். என் அண்ணிகளைப்போல் ஒரேயடியாக அவர்களை ஒதுக்கி விடுவாள் என்று ஏன் கற்பனை செய்துகொள்ள வேண்டும்? இந்த டிரான்ஸ்ஃபரே தங்கையின் நிலைமையை முன்னிட்டுத்தான் கிடைக்கிறது என்பதை அவ்வளவு சாதாரணமாக மறந்து விடக் கூடியவளா என் கவுசல்யா?

இருந்தும் ரிஸ்க் எடுக்கத்தான் வேண்டுமா?

என் மனைவி என்கிற ஒரே காரணத்துக்காக, சொந்த இரத்தங்களான அண்ணன்களால் கூடக் கைவிடப்பட்ட வயதான கவலைகள் சூழ்ந்த என் தாய் மற்றும், புத்தி சுவாதீனம் இல்லாத

தங்கை இருவருக்காகவும் தன் சொந்த விருப்பு வெறுப்புகளைத் தியாகம் செய்வதால் நல்ல மனைவி என்று முத்திரை குத்தி வைத்திருக்கும் என் சுயநலத்தின் மீதே ஒரு சிறிய வெறுப்பு கூட வந்தது.

நல்லவள் என்பதற்கான என் இலக்கணங்களிலிருந்து கவுசல்யா நழுவிவிட்டால், என்னால் உள்ளுக்குள் பொருமல் இல்லாமல் இருக்கமுடியுமா? அந்தப் பொருமல் என் மற்ற நடவடிக்கைகளில் வெளிப்படும் போதெல்லாம் வீட்டின் அமைதி பறி போகாதா?

என் அவஸ்தைகளை எப்படி இவளுக்குப் புரிய வைப்பது? இந்த டிரான்ஸ்ஃபரை மறுத்து விட்டால் என்ன? அந்த முடிவை இவள் எப்படி எடுத்துக் கொள்வாள்? அதையெல்லாம் பார்த்தால் என் அம்மா மற்றும் தங்கையின் கதி?

பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தேன். அவள் நன்கு தூங்கிக் கொண்டிருப்பாள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாகக் கொட்டக் கொட்ட விழித்திருந்தபடி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கவுசல்யா! எனக்கென்னவோ நாம் சென்னைக்குப் போகவேண்டாம்னு தோணுது. நீ என்ன நினைச்சுக்கிட்டாலும் சரி. ஐ' யம் சாரி'' என்றேன் படபடப்பாக.

''இதுல நினைக்கறதுக்கு என்ன இருக்கு? எனக்குமே கொஞ்சநேரமா இதே எண்ணம்தான். வீட்டுக்குப் போனதும் உங்க கிட்ட சொல்லலாம்னு இருந்தேன். இப்போ திருப்தியா? இனியாவது நிம்மதியா தூங்குங்க'' என்றபடி கண்களை மூடிக் கொண்டாள் கவுசல்யா.

எனக்குள் பாரம் இன்னும் இறங்கவில்லை. கொஞ்சம் பொறுமை காத்திருக்கலாம். இந்த முடிவை அவளே சொன்ன மாதிரி ஆகியிருக்கும். அது இன்னும் நன்றாக இருந்திருக்கும். குறைந்த பட்சம் ''இனியாவது நிம்மதியா தூங்குங்க'' என்கிற வார்த்தைகளுக்காவது மனம் உள்ளர்த்தம் தேடாது இருந்திருக்கும்.

## 14. மன்மத மாசம்

''ஐயோ வேண்டாங்க, அப்புறம் நான் பாட்டுக்கு எதையாவது உளறி வைக்கப்போறேன்'' என்று அவள் சிணுங்கியது தான் அவனுள் மணியடித்த விஷயமே. அப்படி என்றால் இவளிடம் ஏதோ சமாசாரம் உள்ளே பொதிந்துள்ளது. எக்காலத்திலும் உளறிக் கொட்டிவிடக் கூடாது என்கிற உறுதியும் இருக்கிறது. அது தெரிந்தாக வேண்டுமே!

முஸௌரியின் டிசம்பர் குளிர் வெளியே, இதமான ஹீட்டரும் கம்பளியும் அழகான புது மனைவியும் உள்ளே என்று ஓட்டல் அறையில் இருந்தவனுக்கு எந்தக் கணத்தில் அந்த யோசனை தோன்றியது என்று தெரியவில்லை.

''பீர் அடிக்கிறயா?'' என்று கேட்டான் அவளிடம்.

கேட்கக் கூடாத எதையோ கேட்டு விட்டது போல் அவள் அதிர்ந்து பார்த்தது அவனுள் உற்சாகத்தைத் தூண்டி விட்டது. அவளுடைய கண்களில் தெரிந்த மருட்சி அவனுள் எதையோ கிளறி விட ''ஹே! என்ன அப்படிப் பார்க்கற? அது ஒண்ணும் குடி ஐட்டம் இல்லை. ஜஸ்ட் அன் அபடைஸர். ஒருமுறை குடிச்சுப் பாரு. நல்லா ஃபீல் பண்ணுவ'' என்றான்.

அவளுடைய கண்களில் லேசான பயம் தெரிந்தது. ''நீங்க குடிப்பீங்களா?'' என்று கேட்டாள் மெல்ல.

''கமான் டியர்! பீரைப்பற்றிப் பேசினாலே குடிகாரன்னு முத்திரை குத்திடறதா? உன் மேல சத்தியமா நான் வேறு எதையும் குடிச்சதில்லை பீரைத் தவிர. அதுவும் ரெகுலரா இல்லை. ஜஸ்ட் அக்கேஷனலா அப்பப்போ. அது ஒண்ணும் மோசமான குடி

கிடையாதுடா. பார்லி வாட்டர் மாதிரிதான். உனக்கு அப்பப்போ நீர்கடுக்கும்னு சொன்னியே, பீர் அடிச்சுப் பாரு எல்லாம் சரியாப் போயிடும்.''

''ஐயோ வேண்டாம்ப்பா! நான் எதையாவது உளறி விட்டுப் போகிறேன்.''

அவன் விடுவதாக இல்லை. பக்குவமாக நிறையப் பேசத் தொடங்கினான்.

அவள் தன் காதுகளைப் பொத்திக் கொண்டாள். ''வேணாங்க, வேற பேச்சுப் பேசுவோம்.''

அந்தப் பேச்சின் தொடக்கமோ என்னவோ அடுத்த நாட்களில் வெளியே போகிற இடங்களில் எல்லாம் பீர் பாட்டில் அடிக்கடி கண்களில் பட்டது. ஓட்டலின் ரெஸ்டாரெண்ட்டில் கிட்டத்தட்ட ஒவ்வொரு மேசையிலுமே யாராவது பீர் பாட்டிலுடன் இருந்தார்கள். தொடர்ந்து அதுவே கண்களில்பட அவளுடைய கண்களிலும் உதட்டிலும் புன்னகை வந்து அமர்வதை அவன் கவனிக்கத் தவறவில்லை.

முஸௌரியின் முக்கிய இடங்கள் எல்லாம் சுற்றி வந்த அலுப்பில் மூன்றாம்நாள் மாலை கட்டிலில் சாய்ந்த கையோடு மீண்டும் ஒருமுறை அதைப் பற்றி ஆரம்பித்தான்.

''இப்போ மட்டும் ஒரு பாட்டில் பீர் சில்லுண்ணு அடிச்சா எல்லா களைப்பும் பறந்திடும். மேடம்தான் அதைப்பற்றிப் பேசறதையே அவாய்ட் பண்ணறியே.''

அவள் அவனையே உற்றுப் பார்த்தாள். இரண்டு நாட்களாக முஸௌரிக் காற்றை சுவாசித்ததாலோ, வெளியே கண்ட காட்சிகளாலோ, ஸ்வெட்டரில் முடங்கிக் கிடந்த புதுப் பழக்கத்தாலோ அதையும்மீறி எலும்பினுள் ஊடுருவி இருந்த குளிர் தந்திருந்த சிலிர்ப்பாலோ அவளுடைய சிந்தனையில்கூட ஒரு சிறு மாறுதல் வந்திருந்தது.

மெல்லப் புன்னகைத்தாள்.

''சரி! உங்களுக்கு மட்டும் வேணுமானா வாங்கி அடிங்க. அளவோட அடிங்க. குடிச்சிட்டு ரகளை பண்ணக்கூடாது'' என்றாள் மெல்ல.

நம்ப முடியாமல் அவளைப் பார்த்தான். ஆஹா, பார்ட்டி வழிக்கு வந்தாச்சா?

''ரகளையா? ஹேய்! என்ன நினைக்கற? நம்ம ஊர் பட்டைச் சாராயம் மாதிரி அடிச்சிட்டு இந்த ஹோட்டல் காரிடாரில் பேண்டைக் கழற்றி வீசிட்டு ஜட்டியோட பனியனோட உளறுவேன்னு எதுவும் கற்பனை பண்ணிட்டிருக்கியா?''

அவள் சிரித்தாள். ''எனக்கென்ன தெரியும் இந்த இழவெடுத்த ஐட்டங்களின் தன்மை பற்றி எல்லாம்?''

அவள் மனம் மாறுவதற்குள் வரவழைத்து விடவேண்டும் என்று தீர்மானித்தவன் போல் இண்டர்காமை எடுத்து ரெஸ்டாரெண்ட்டைக் கூப்பிட்டான். ''ரெண்டு சில்டு ராயல் சாலஞ்ஜ் பீர், பீனெட், மஸாலா, காஜூ ஃப்ரை, பொட்டட்டோ வேஃபர், சாலட்'' என்று ஆர்டர் அடுக்கினான். இண்டர்காம் வாய்ப் பகுதியை மூடியபடி, ''உனக்கு ஏதாவது கூல்டிரிங்ஸ் ஆர்டர் பண்ணவா?'' என்று கேட்டான். அவள் மறுக்க, ''ஓ.கே தட்ஸ் ஆல்'' என்று வைத்துவிட்டு எழுந்தான். அவனுள் உற்சாகம் தொற்றிக் கொண்டதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கல்லூரி நாட்களில் சாரங்கபாணி என்றொரு ஹாஸ்டல் நண்பன் இருந்தான். அவன் கற்றுத் தந்திருக்கிறான், தண்ணீரை உள்ளே ஊற்றி மனதுக்குள் பொதிந்துள்ள ரகசியங்களை எப்படி வெளியே கொண்டுவருவது என்கிற வித்தையை. அந்த நாட்களில் எவன் எவன் மனதில் எவள் எவள் குடியிருந்தார்கள்; எத்தனை பேர் ஒரு தலை ராகம் வாசித்தார்கள் என்பதை எல்லாம் அவரவர் வாயில் இருந்தே உளற வைத்து சாதனை படைத்தவன் சாரங்கபாணி. 'பொறு. டியர்! இன்னிக்கு உனக்குள் இருக்கின்ற

ரகசியத்தையும் எடுத்துக் காட்டவில்லை என்றால் நான் சாரங்கபாணியின் நண்பனே இல்லை.'

உள்ளங்கைகள் இரண்டையும் உரசிச் சூடு படுத்திக் கொண்டான். ''ரெண்டு பாட்டில் எதுக்கு ஆர்டர் பண்ணுனீங்க? அவ்வளவு குடிப்பீங்களா?'' என்று கேட்டவளைப் பார்த்துப் புன்னகைத்தான். ''அது என்னடா ஜஸ்ட் தண்ணி தானே ரெண்டு தடவை யூரின் பாஸ் பண்ணினா எல்லாம் போயிடும்'' என்றான். ''அதோட நான் அடிக்கறதைப் பார்த்து உனக்கு திடீர்னு மூடு வந்து நீயும் குடிக்க ஆரம்பிச்சா பத்தணுமில்லியா?'' என்றான் கண்களைச் சிமிட்டியபடி.

அவள் ''சீ'' என்றது பலவீனமாக ஒலித்தது.

அவளையும் குடிக்க வைத்து விடலாம் என்று நம்பிக்கை தோன்றியது.

மேசையில் பரப்பப்பட்டிருந்த எல்லாவற்றையும் பார்த்த வளின் கண்கள் விரிந்தன. ஒரு முந்திரியை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

''என்னைவிட வேகமா இருக்கிற?'' என்று கிண்டல் செய்தவனாக, பாட்டில் ஒன்றை சாய்வாகப் பிடித்து லாவகமாகத் திறந்தான் பொங்கிய நுரை வெளியே சிந்திவிடாதபடி.

''ஏங்க, இந்த சினிமால எல்லாம் இதைத் திறந்தா அப்படியே பீச்சிட்டு அடிக்குதே. இங்கே ஏன் அந்தமாதிரி ஆகலை?''

சிரித்தான், பெரிய கோப்பை ஒன்றை எடுத்து அதனைச் சாய்வாகப் பிடித்து பக்கவாட்டில் பீரை ஊற்றி நிரப்பினான். லேசான நுரைத் ததும்பலுடன் பொன்னிற திரவம் அறையின் மங்கலான வெளிச்சத்தில் மயக்கம் தரும் வண்ணம் மின்னியது.

''ரெண்டு கோப்பை எதுக்குக் கொண்டு வந்திருக்கான் அந்த சர்வர்?''

''ஒற்றை ஆளா எவனும் பீர் குடிக்க மாட்டான். நீதான் கம்பெனி கொடேன்''

மறுபடியும் ''சீ''

கோப்பையை உயர்த்தி அவளுடைய முகத்துக்கு நேராகப் பிடித்து சியர்ஸ் என்றவனாக உதட்டுக்குக் கொண்டுபோய்ஒரே மூச்சில் பாதிக் கோப்பையைக் காலி செய்தான். கோப்பையை மேசைமீது வைத்த கையோடு சிப்ஸ், முந்திரி, கடலை என்று ஒவ்வொன்றாக வாயில் போட்டுக் கொண்டான்.

''ஏன் இவ்வளவு அவசரமா திங்கறீங்க? ரொம்பக் கசக்குமா?'' என்று ஆர்வமாகக் கேட்டவளின் கையில் வேகமாக பாதி நிரம்பிய கோப்பை ஒன்றினைத் திணித்தான்.

''நான் சொல்றதென்ன? நீயே டேஸ்ட் பண்ணிப் பார்த்திரு.''

இப்போது அவளிடம் கொஞ்சம் ஆர்வமும் வந்து விட்டிருந்தது. ''நீங்க பாட்டுக்கு ஊருக்கு வந்ததும் நான் தண்ணி அடிச்சேன்னு ஊரெல்லாம் கொட்டிடக் கூடாது'' என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

''சேச்சே! இதெல்லாம் நம்ம ஹனிமூன் சமாசாரம் டியர். யாராவது வெளியே சொல்லுவாங்களா?''

''ப்ராமிஸ்?''

''அஃப்கோர்ஸ் டியர்! கமான் சியர்ஸ்!''

கொஞ்சமாக உறிஞ்சுவது போல் குடித்தவளின் முகம் அஷ்ட கோணலாகியது. ''ஐய, என்னங்க இவ்வளவு கசக்குது? இதையா போய் எல்லோரும் சந்தோஷமா குடிக்கிறாங்க?'' என்றாள். குமட்டிக் கொண்டு வருவது போல் பாவனை செய்தாள்.

''இந்தா இதில் எதையாவது எடுத்து வாயில் போட்டுக்கோ'' என்று தட்டுகளை நீட்டினான்.

ஆனால் முதலில் வெறுத்தது போல் அவள் விடவில்லை. அந்தப் பாதிக் கோப்பையை முழுக்க காலி செய்துவிட்டுத்தான் நிறுத்தினாள்.

அவளிடம் பொது விஷயங்களைப் பேசத் தொடங்கினான் அவன். இதுதான் சாரங்கபாணியின் பாணி. நேரம் கடத்தினான். அவளுக்கு பத்து நிமிடங்களில் பாத்ரூம் வந்தது. போய்விட்டு வந்தாள். ''நல்லா இருக்குங்க'' என்றாள். அவளுடைய காலிக் கோப்பை இப்போது நிரம்பியிருந்தது. மேசை மீது இன்னொரு பாட்டில் முளைத்திருந்ததை அவள் கவனிக்கவில்லை.

மெதுவாகத் தன்னுடைய கல்லூரி நாட்களை நினைவு கூர்ந்து பேசத் தொடங்கினான். கற்பனையான ஒரு தோழனைப் படைத்து அவனுடைய காதல் சமாசாரம் ஒன்றினை சுவைபடச் சொன்னான். தானும் ஒரு பெண்ணைக் காதலிக்கப் பிரியப்பட்ட தாகவும் குடும்ப சூழல் குறித்து அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டதாகவும் புது கதை சொன்னான். அவள் இரக்கப்பட்டாள். முக்கால் மணி நேரத்தில் அவளுடைய பேச்சில் குமுறல் வரத் தொடங்கியிருந்தது. சரியான இடைவெளியில் அவளுக்குள் மெல்ல மெல்ல பீர் இறங்குவதைக் கவனித்துக் கொண்டான். சிரிப்பில் ஒரு பிரயத்தனம் தெரியத் தொடங்கியது. ''என்னங்க, என் பேச்சு தெளிவா இல்லாத மாதிரி எனக்கே தெரியுது'' என்றாள். ''நோ நோ யூ ஆர் வெரி க்ளியர்'' என்று ஊக்கப்படுத்தினான். இன்னும் இரண்டு முறை பாத்ரூம் போய் வந்தாள். ''ரொம்ப லேசா ஃபீல் பண்றேங்க'' என்றாள்.

அவர்களின் உடல்கள் ஜில்லென்றும் கண்கள் ஜிவ்வென்றும் ஆகி இருந்தன.

இப்போது ஆரம்பித்தான் தன் அஸ்திரங்களை, சாரங்கபாணி கற்பித்திருந்த சகல வித்தைகளையும் ஒவ்வொன்றாகப் பிரயோகித்துப் பார்த்தான்.

அவள் பேசத் தொடங்கினாள். படிக்கிற காலத்திலும் சரி, அதன் பிறகான நாட்களிலும் சரி அவள் ஒரு பேக்கு என்று

மற்றவர்கள் கிண்டல் பண்ணும் விதமாகத்தான் வளர்ந்திருக்கிறாள் என்பதை ஒப்புக்கொள்வதில் அவளுக்கு நாணம் இருந்தது. தான் அழகாக இருக்கிறோம் என்பதே அவளுக்குத் தெரியாதாம். மற்றவர்கள், குறிப்பாக உடன்படித்த ஆண்களும் பெண்களும் சொல்லும் போதெல்லாம் ஏதோ கிண்டல் செய்கிறார்கள் என்றே நினைப்பாளாம். அலட்டிக்கறா என்று ஆரம்பத்தில் இவளை ஒதுக்கிய தோழிகள்கூட அதன் பிறகு இவள் அப்பாவித்தனம் உணர்ந்து நெருங்கிப் பழக ஆரம்பித்தார்களாம். இப்படி எல்லாம் இருந்தா உன் புருஷனை எப்படி சமாளிப்ப என்று கேலி செய்வார்களாம். தான் ஒரே பிடியாக வணங்கிவரும் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் தனக்கு ஏற்ற, தன்னை நன்கு உணர்ந்து அரவணைத்துச் செல்லத் தக்க, நல்ல கணவனை அமைத்துத் தருவாள் என்று தான் நம்பியதாகவும் அது இப்போது நிறைவேறிவிட்டதில் முழு மகிழ்ச்சி என்றும் நன்றி ததும்பச் சொல்லும் போது கண்ணீர்விடத் தொடங்கியவள் ஓவென்று அழ ஆரம்பித்தாள்.

அவனுக்குள் சப்த நாடியும் அடங்கின. ஆல்கஹால் போதையுடன் சிரித்தாலும் சரி அழுதாலும் சரி அது கட்டுப் பாட்டை மீறி வரும். இரண்டையும் அடக்குவது ரொம்பச் சிரமமாச்சே என்கிற பயம் வந்தது. அடடா இதென்ன எதையோ பிடிக்க முயற்சித்து எதையோ பிடித்த கதையாக ஆகி விட்டதே என்று நொந்து போனான். பவித்ரமான இவளிடம் இந்த வலையை வீசியே இருக்கக் கூடாது என்று தலையில் அடித்துக் கொண்டான். அவளை அணைத்தபடித் தட்டிக் கொடுத்து சமாதானப்படுத்தத் தொடங்கினான்.

அவசரமாக இரவு உணவை அறைக்கே வரவழைத்தான். மழை விட்டும் விடாத தூவாணம் போல் அவள் மெதுவாகச் சிணுங்கியபடி தான் இருந்தாள். முக்கால் பாட்டிலுக்கே இந்தப் பாடா? இனிமேல் இந்த எழவெடுத்த சமாசாரத்தையே தொடக் கூடாது என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

சாப்பிட்ட பிறகு அவள் கொஞ்சம் சமாதானம் ஆகி இருந்ததாகப் பட்டது. அவளைத் தட்டிக் கொடுத்துத் தூங்க வைத்தான்.

சலனமின்றிக் குழந்தை போல் ஒடுங்கித் தூங்கும் அவள் முகத்தையே நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மனைவி குறித்த முழு சந்தோஷத்தில் அவனும் அயர்ந்தான் கை கால்களைப் பரப்பியபடி.

நள்ளிரவில் அவள் விழித்துக் கொண்டாள். பாத்ரூம் போய் வந்தாள். தாகமாக இருந்தது. தண்ணீர் குடித்தாள். தூக்கம் வராமல் முட்டினைக் கட்டிக்கொண்டு அமர்ந்தாள். இப்போது வேறு எதேதோ எண்ணங்கள் கிளர்ந்தெழ அப்படியே கண்ணீர் விட்டு அழத் தொடங்கினாள்.

பக்கத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் அவன். அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை, பெண்ணின் மனதைத் துளைத்து ஊடுருவி உளர வைக்கும் ஆல்கஹால் இன்னும் மனிதனால் கண்டுபிடிக்கப்படவில்லை என்று.

# 15. நான்காவது பெயர்

ஏற்கெனவே தாமதமாகி விட்டது என்கிற அவசரத்துடன் நான் அலுவலகத்தினுள் நுழைய முதலில் எதிர்ப்பட்டான் ப்யூன் மாணிக்கவேல்.

''விஷயம் தெரியுமா சார்? நம்ம பூபதிக்கு ஹார்ட் அட்டாக்காம். ஆஸ்பத்திரில சாகப் பிழைக்கக் கிடக்காராம்.''

திடுக்கிட்டேன்.

''என்ன சொல்ற? நல்லாத் தெரியுமா? தவறுதலா எதையாவது உளறி வைக்காதே'' என்றேன் பதற்றமாக.

''என்னா சார்? இது விஷயத்தில போய் யாராவது தப்பாச் சொல்லுவாங்களா? நேத்து ராத்திரிதான் திடீர்னு வந்ததாம். மங்கை ஆஸ்பிடல்ல தான் அட்மிட் பண்ணி இருக்காங்களாம். நம்ம சேகர் சார், மணி சார், சுந்தர் சார் மூணு பேரும் காலைல ஆஃபீஸ் வந்து இதைக் கேள்விப்பட்ட உடன் அவசரமா அங்கேதான் போயிருக்காங்க.''

என்னால் நம்பவே முடியவில்லை. இந்தச் சின்ன வயதிலும் கூட ஹார்ட் அட்டாக் வருமா? அதுவும் பூபதி மாதிரி யான எந்தவிதக் கெட்ட பழக்கங்களும் இல்லாத ஒருவனுக்கு இது வரலாமா? ஒழுக்கமாக நேர்மையாக நல்லவனாக வாழும் ஒருவனுக்கு இந்த மாதிரியான கஷ்டங்கள் வந்தால் அது மற்றவர்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிடாதா?

மனம் நிஜமான துக்கத்தில் கனமானது.

அவசரமாக லீவு லெட்டர் எழுதினேன். மாணிக்கவேலிடம் தந்துவிட்டுக் கிளம்பும்போது சேகரும் மணியும் சுந்தரும் வந்துவிட்டார்கள்.

எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து கொள்ள, ''இப்போது பரவாயில்லை. நல்லநேரத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள் போலும். இன்னும் ஐ.சி.யூ.வில் இருந்தாலும் அபாய கட்டத்தைத் தாண்டி விட்டானாம். பிழைத்துக் கொள்வான்னு டாக்டர் சொல்லிட்டார். நோ ப்ராப்ளம்'' என்றார்கள்.

எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி நகர, அவர்கள் மூவரின் முகங்களில் மட்டும் எதையோ பறிகொடுத்த உணர்வு தென்பட்டது. நான் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிச் சென்றேன்.

வாசலிலேயே கண்களில் பட்டான் வாடிய முகத்துடன் நின்றிருந்த பூபதியின் தம்பி ரகுபதி. என்னை அடையாளம் கண்டு புன்னகைக்க முயற்சித்தான். நான் அவனுடைய அருகில் சென்று தட்டிக் கொடுத்தேன்.

''பூபதியைப் பார்க்க முடியுமா?'' என்று மெல்லக் கேட்டேன்.

கண்ணாடி ஜன்னலின் வழியே தெரிந்தான் பூபதி.

பரிதாபமான காட்சி. அவனுடைய கட்டிலின் அருகில் சிவந்து வீங்கிய கண்களுடன் அமர்ந்திருந்த அவனுடைய மனைவியைக்காண சங்கடமாக இருந்தது. திருமணம் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகி இருக்குமா? இவ்வளவு இளவயதில் கணவனுடன் இண்டென்ஸிவ் கேரில் உட்காரும் நிலை கொடிது, சே!

அங்கிருந்து நகர்ந்து ரகுபதியிடம் எப்படி இது நேர்ந்தது என்று விசாரித்துக் கொண்டிருந்தேன்.

பதற்றமான கணங்கள் கடந்துவிட்டபடியினால் அவனும் கொஞ்சம் தெளிவாகவே விளக்கத் தொடங்கினான். இடையிடையே உடைந்து அழ இருந்தவனைத் தேற்ற வேண்டியிருந்தது.

''நல்ல வேளையாக நான் நேற்று ஊரில் இருந்து வந்திருந்தேன் சார். இல்லாவிட்டால் மதினி தனியாக என்ன செய்திருக்க முடியும்? பாவம். அண்ணனுக்கு இந்த வயதில் இப்படி ஒரு கஷ்டம் அவசியம் தானா? நாங்கள் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்?''

எவராலும் முழு எஃபெக்டோடு உணர்ந்து கொள்ள முடியாத பதில் அவசியப்படாத கேள்வி இது. அமைதி காத்தேன்.

என்னிடம் நிறையக் கொட்டியதில் அவனுக்கும் ஆறுதல் ஏற்பட்டிருந்தது.

''நீங்க இரண்டு பேர் மட்டும்தான் இருக்கிறீர்களா? வேறு யாரும் துணைக்கு இல்லையா?'' என்று கேட்டேன்.

''அப்பாவுக்கும் மாமாவுக்கும் சொல்லியிருக்கிறேன். வந்து கொண்டிருக்கிறார்கள்.''

சட்டைப் பையில் இருந்து பணம் எடுத்து அவனிடம் நீட்டினேன். ''செலவுக்கு இருக்கா? இன்னும் வேணும்னா சொல்லு'' என்றேன்.

''ஐயோ, வேண்டாம் சார். ரொம்ப தாங்ஸ், நேத்து நான் ஊரிலிருந்து வந்தப்போவே நெல் வித்த பணம் நிறைய வச்சிருந் தேன். அதுதான் சமயத்துக்கு உதவிச்சு'' என்றான் நெகிழ்ந்தபடி.

பூபதியின் மனைவி அங்கே வந்தாள்.

''தம்பி! டாக்டர் ஏதோ கேட்கிறார். என்னன்னு புரியலை. உங்களைக் கூப்பிட்டார்'' என்றாள். என்னைத் தயக்கமாக ஏறிட்டாள்.

என்னை அவளுக்குத் தெரிய வாய்ப்பு இல்லை.

ரகுபதி அறிமுகம் செய்து வைத்தான். ''மதினி! இவர் அண்ணனுடைய ஆஃபீஸில்தான் இருக்கார். அண்ணனுக்கு சீனியர்.''

அவளுக்குக் கும்பிடக் கூடத் தோன்றவில்லை. வெறுமனே வெறித்தாள்.

''தைரியமா இருங்க. பூபதி நல்லவர். அவருக்கு ஒண்ணும் ஆகாது. டாக்டரே சொல்லிட்டார்.'' என்றேன் அவளைத் தேற்றும் முயற்சியாக.

அவள் விரக்தியும் நிம்மதியும் கலந்து புன்னகைத்தாள்.

''நான் போய் டாக்டரைப் பார்த்திட்டு வந்திடறேன் சார்'' என்றபடி அங்கிருந்து நகர்ந்தான் ரகுபதி.

பூபதியின் மனைவி என்னை ஏறிட்டு நோக்கினாள். ''என் வீட்டுக்காரர் உங்களுக்கு ஏதும் பணம் தரணுமா?'' என்று கேட்டாள் மெல்லிய குரலில்.

திடுக்கிட்டேன்.

''இல்லையே, எதற்குக் கேட்கிறீர்கள்?''

''அவருக்கு நேற்று ராத்திரி உடம்பெல்லாம் வியர்த்து வலி வந்தவுடன் அவசரமா என்ன செஞ்சார் தெரியுமா? ஒரு பேப்பர் எடுத்து வரச்சொல்லி அவர் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி களைக் குறிச்சுக்கச் சொன்னார். மூன்று பெயர்களும், ஆயிரம், மூவாயிரம், ஆயிரத்து ஐநூறுன்னு தொகைகளையும் சொன்னார். நாலாவதா ஒரு பெயர் சொல்ல வாய் திறந்தார். அதுக்குள்ள மயக்கமாயிட்டார். அது ஒருவேளை நீங்கதானோன்னு தெரிஞ் சுக்கக் கேட்டேன் என்றபடி ஜாக்கெட்டின் தோள்பட்டைப் பகுதிக்குள் கையைவிட்டு கசங்கி இருந்த ஒரு காகிதத்தை எடுத்துப் பிரித்தாள். எனக்குப் பார்க்க அவசியப்படவில்லை.

''நீங்க ரொம்பவும் கலங்கிப் போய் இருக்கீங்கன்னு நினைக்கிறேன். இந்தப் பேச்செல்லாம் இப்போ எதற்கு?'' என்றேன் மென்மையாக, ஆனால் கண்டிக்கும் குரலில்.

சிறிதுநேரம் எங்கோ வெறித்தாள். ''அவருக்கு இந்த மாதிரி ஆகிப்போச்சீன்ன உடனே அந்த மூனு பேரும் தான்

காலைல ஓடி வந்திருக்காங்க. நான் உள்ளே இருந்ததால அவருடைய தம்பி கிட்ட பேசிட்டிருந்துட்டுப் போயிருக்காங்க. அவங்களோட அக்கறை அவருக்கு என்ன ஆச்சு, எப்படி ஆச்சுன்னு தெரிஞ்சுக்கறதைவிட டாக்டர் அவருடைய டிஸ்சார்ஜ் சம்பந்தமா என்ன சொன்னார்ங்கறதை அறிஞ்சுக்கறதில் தான் இருந்திருக்கு...''

உடைந்து அழத் தொடங்கினாள் அவள்.

நான் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க, சிறிது நேரத்தில் தன்னைத் தேற்றிக்கொண்டு முந்தானையில் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள். ''அவங்களைச் சொல்லியும் குற்றமில்லை. எங்களுக்குத் தூக்கிக் கொடுக்கவா அவங்க சம்பாதிச்சு வச்சிருக்காங்க? கடன் பாக்கி இருக்கும் போது நோய்வாய்ப்படக்கூடாது. கடவுளுக்கு எங்கே தெரியுது அதில் இருக்கிற தர்மசங்கடத்தைப் பத்தில்லாம்? எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா சார். அவருக்கு ஏதாவது ஒண்ணு ஆயிட்டாலும் கூட அவங்க மூணு பேருடைய பணமும் பத்திரமா திரும்பக் கிடைச்சிடும்னு சொல்லுங்க. அதோட அந்த நாலாவது ஆள் யாருன்னு கொஞ்சம் கண்டுபிடிச்சு சொன்னீங்களான்னா பெரிய உபகாரமா இருக்கும்.''

ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பும் போது மிகவும் கனமாக உணர்ந்தேன். கொஞ்சம் தாமதத்தைப் பொருட்படுத்தாமல் சாயங்காலமாகவே பூபதியைப் பார்க்க வந்திருக்கலாம் என்று பட்டது.

# 16. நந்தவனக் கனவுகள்

அன்று முழுவதுமே அலுவலகத்தில் ஒன்று மாற்றி ஒன்று என்கிற விதமாகக் குழப்பநிலை நீடித்தது.

'என்ன இன்னிக்கு உனக்கு மூடு சரியில்லையா' என்று நண்பர்களும், 'என்ன ஆச்சு இன்னிக்கு உனக்கு? பொதுவா இந்த மாதிரி தப்பெல்லாம் பண்ண மாட்டியே' என்று மேலதிகாரிகளும் கேட்கும் விதமாகவே அமைந்திருந்தன, என் முகமும் நடவடிக்கைகளும்.

எல்லாவற்றிற்கும் அவள்தான் காரணம். காலையில் ஏற்பட்ட சண்டை. சண்டை என்றால் வெற்றி தோல்வி தீர் மானிக்கப் படவேண்டிய அவசிய சண்டை அல்ல. வெற்றி பெற்றவர் எக்காளமிடவோ தோற்றுப் போனவர் கப்பம் கட்டவோ தீர்மானிக்கப்படப் போகிற சண்டை அல்ல.

நிர்வாகத் துறையில் Win-Win Competition என்று ஒன்று சொல்வார்கள். அதாவது போராடும் இரண்டு குழுக்களுமே தமக்கு வெற்றி என்று உணர்வது போன்ற போட்டிகள். உதாரணமாக போனஸ் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தைகள். நிர்வாகம் நான்கு சதவிகிதத்தில் ஆரம்பிக்கும். தொழிற்சங்கம் முப்பது கேட்கும். இரண்டு மூன்று ரவுண்டு பேசி உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் பதினாறு சதவிகிதம் போனஸ் என்று முடிவுக்கு வந்து கை குலுக்கிக் கொள்வார்கள். நிர்வாகத் தைப் பொறுத்தவரை முப்பதைப் பதினாறு ஆக்கிவிட்டதை வெற்றி என்று கொள்ளும். தொழிற்சங்கத்துக்கு நான்கைப் பதினாறு ஆக்கிவிட்டது இமாலய சாதனையாக இருக்கும்.

இந்த கணவன் மனைவி சண்டைகள் மட்டும் ஏன் இப்படி ஒரு முடிவுக்கு வருவதில்லை? எப்போதுமே இரண்டு தரப்பும் தோற்றுப்போன உணர்வுதான் நீடிக்கிறது. தொலைஞ்சு போ என்று இவன் சேலை எடுத்துக் கொடுப்பதிலும், அழுதுகிட்டே எடுத்துக் கொடுத்தா அது விளங்கின மாதிரிதான் என்று அவள் பெற்றுக் கொள்வதிலும் யாருக்குமே திருப்தி இருப்பதில்லை. பண்விரயம் தான் மிச்சமாகி இருக்கும்.

மணி ஐந்தரை அடித்த பிறகும் எனக்கு வீடு திரும்பும் எண்ணமே ஏற்படவில்லை. ஆளாளுக்கு நகர்ந்து கொண்டிருக்க, நான் என் மேசையையே வெறித்தபடி உட்கார்ந்திருந்தேன்.

வீட்டில் காலையில் நடந்த சண்டை முடிந்து விட்டதா என்று தெரியவில்லை. அவள் பேச நான் பேச அவள் பேசி முடித்து விட்டாளா என்றுகூடத் தெரியாமல் நான் கொட்ட வேண்டியவைகளைக் கொட்டிவிட்டு அவள் ஸ்தம்பித்திருந்த கணத்தில் செருப்பு மாட்டிக் கொண்டு படியிறங்கி விட்டேன்.

அது அவளைத் தவிர்க்க நினைத்த அலட்சியமாதப்பித்துக் கொள்ள நினைத்த கோழைத்தனமா என்பது அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

நான் பேசப்பேச இவ்வளவு திமிராப் போறாரே அவ்வளவு அலட்சியமா என்கிற பொருமலில் இன்று முழு நாட்பொழுதும் மாலையில் இரண்டாம் கட்டப் போருக்கு அவள் தயாராகிக் கொண்டிருக்க வாய்ப்பு இருக்கிறது. எங்கே போயிருவ? என்னதான் ஆஃபீஸ் ஃப்ரண்ட்ஸுன்னு சுத்தினாலும் இங்கே வந்துதானே ஆக வேண்டும்? என்கிற முஸ்தீபுகளுடன் தயாராக இருப்பாள்.

நான் இங்கே வந்துவிட்டதில் அலுவலக நினைவுகள் பாதியும் சண்டை பற்றிய குழப்பங்கள் பாதியும் என்று இரண்டிலும் கவனமின்றி இரண்டையும் கோட்டை விட்டிருக்கிறேன்.

அவள் அப்படி இல்லை. பிரியம் காட்டுவது என்றாலும் சரி, சண்டை என்றாலும் சரி அவளுக்கு அது மட்டும்தான். வேறு

ஒன்றுமே உலகில் இல்லை என்பது போல் ஈடுபாடு காட்டுவாள். ஏன் இப்படி இருக்கிறாள் என்று தெரியவில்லை.

நான் வளர்ந்த சூழல் அப்படி ஒன்றும் சண்டை சத்தம் ஏதுமற்ற அமைதியான ஒன்று என்று சொல்வதற்கில்லை தான். என் வீட்டிலும் அப்பா அம்மா சண்டைகள் நடந்ததுண்டு. ஆக்ரோஷமான பேச்சின் நாற்றங்கள். சண்டைக்குப் பிந்தைய அமைதியின் புழுக்கங்கள் எல்லாம் கடந்து வந்தவன் தான் நான். ஆனாலும் எனக்கு அவற்றை வாழ்க்கையின் ஓர் அம்சம் என்று எடுத்துக்கொண்டு ஜீரணிக்க முடிவதில்லை. இவற்றைத் தவிர்த்து விட்டால் வாழ்க்கை வசந்தமாக இருக்கும் என்று நம்புபவன் நான். திருமணம் ஆன பிறகு எக்காரணம் கொண்டும் வீட்டில் சில்லறை சண்டைகள் சச்சரவுகள் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உறுதி பூண்டிருந்தேன்.

திருமணமான புதிதில் ஒருமுறை அவளிடம் பேச்சு வாக்கில் இதுபற்றிச் சொன்னபோது ''ஏன், நான் குடித்தனம் நடத்த வந்திருக்கிறேனா இல்லை உங்ககூட வெட்டிச்சண்டை போட வந்திருக்கிறேனா? யாரோ உங்ககிட்ட என்னைப்பற்றி சண்டைக்காரின்னு வத்தி வச்சிருக்காங்கன்னு தெரியுது. உங்களை யாரு உங்க பொண்டாட்டிபற்றி ஊர்க்காரங்க, உறவுக்காரங்க கிட்ட எல்லாம் ஒப்பினியன் கேட்கச் சொன்னது?'' என்று அவள் குரல் உயர்த்த ஆடிப் போனேன் நான். இல்லை, இல்லை எதார்த்தமாகத்தான் சொன்னேன் என்று கெஞ்சாத குறையாகச் சொல்லி அந்த உரையாடலை முடிக்க வேண்டியதாகியது.

அதன் பிறகு ஏதாவது பேச்சின் போது, 'ஏன் இப்படி சத்தம் போடற? கொஞ்சம் மெதுவாப் பேசேன்', என்று சொன்னால் கூட, ''நான் சத்தமா பேசறேனா? அன்னிக்கு உங்க ஃப்ரண்ட் வீட்டுப் பார்ட்டியில் என்னைப் பாடச் சொன்னீங்க. பாட்டு நல்லா இருந்தது; ஆனா நீ கொஞ்சம் சப்தமா பாடி இருக்கலாம். பின் வரிசையில் இருந்த எங்க பாஸூக்கெல்லாம் கேட்கவே இல்லையாம்னு சொன்னதும் இதே வாய் தானே?'' என்று வெடுக்கென்று பிடுங்கினாள்.

இவள் சண்டையின்போது எடுத்து முன்வைக்கும் கணைகள் நான் சற்றும் யோசிக்க முடியாத திக்குகளில் இருந்து வரும். பல சமயங்களில் அது என் வாய் வார்த்தையாகவே இருக்கும். நான் சொன்னபோது இல்லாத அர்த்தங்கள் எல்லாம் அதே வார்த்தைகள் அட்சரம் பிசகாமல் அவள் பிரயோகிக்கும் போது இருக்கும். நான் பல சமயம் மிரண்டு போய் வாய் மூட வேண்டி வரும்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக ''இதோ பாருங்க, யாரோ என்னைப்பற்றி உங்ககிட்ட நல்லா வத்தி வச்சிருக்காங்க. நீங்களும் கல்யாணம் ஆன நாளா அந்தக் கண்ணோட்டத்துடன் தான் பார்த்திட்டிருக்கீங்க. நான் சண்டைக்காரியாத்தான் தெரிவேன்'' என்று தான் முடிப்பாள்.

அந்த மாதிரி எப்போதும் யாரும் சொன்னதில்லை என்று பலமுறை சொல்ல நினைத்து விழுங்கி இருக்கிறேன், நான் ஏதாவது சொல்லப் போக அதுவே இன்னொரு சண்டைக்கு விதையாக ஆவதை விரும்பாமல். சில சமயங்களில் தோன்றும், அவள் வேண்டுமென்றே தற்காப்புக் கவசம்போல் இந்த வாக்கியத்தை அணிந்து கொள்கிறாளோ என்று. ஆழ யோசித்தால் தன்னைப் பற்றிய எவருடைய அபிப்ராயத்தையும் மதிக்கிற ஜாதி இல்லை அவள் என்பதுதான் உண்மை.

ப்யூன் வந்து ''கிளம்பலியா சார்?'' என்று கேட்க எழ வேண்டியதாகியது.

சிறு வயதில் பள்ளி நாட்களில் முதன் முறையாக ஃபெயில் மார்க் எடுத்த போது அந்த ராங்க் கார்டுடன் வீட்டுக்குக் கிளம்பும் போது ஏற்பட்ட தவிப்பும் பயமும் தயக்கமுமான நிலை இப்போதும் ஏற்பட்டது.

இந்த பயமும் தயக்கமும்கூட ஒரு பழைய அனுபவத்தின் சூடுதான். அன்றும் இப்படித்தான். காலைச் சண்டையை மறந்து மாலை வழக்கமான சந்தோஷத்துடன் வீட்டை அடைய அதுவே மேலும் ஒரு சண்டையை வளர்த்தது.

வாழ்க்கையில் ஃபெயிலாகி விட்டோமோ என்கிற பயம் வந்தது. இதுவரை ஆகவில்லை என்றாலும் கூட இந்த நிலை தொடர்ந்தால் ஃபெயிலாகி விடுவேன் என்கிற ஆதங்கம் அயர்ச்சி தந்தது.

கொஞ்ச நாட்களாகவே இந்த சண்டைகளின் பின் விளைவுத்தாக்கம் கூடியபடியே உள்ளது. ஆரம்ப காலங்களில் 'சரி போகிறாள் என் மனைவி தானே, என்னுடன் சண்டை போடாமல் யாருடன் போடுவாள்?' என்கிற சமாதானம் வெகு விரைவில் ஏற்பட்டதுண்டு. இப்போதெல்லாம் அந்த சமாதானம் ஏற்பட அதிக நேரமாகிறது என்பதே எதிர்காலம் குறித்த கவலையை அளித்தது. உணர்வுகள் சிறுகதைகளாக முடிவுற்றால் தான் உறவுகள் தொடர்கதைகளாக நீடிக்க முடியும். இங்கே உணர்வுகளே தொடர்கதைகளாக நீண்டு கொண்டிருந்தால்....

அவளிடம் இந்த மாதிரியான எண்ணங்களோ அலைக் கழிப்போ ஏதும் இருப்பதாக ஒரு கோடி கூடக் காண முடிய வில்லை.

இன்று அவளிடம் பேச வேண்டும். வீடு போனவுடன் அவள் பேசப்போகும் பேச்சுக்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். எவ்வளவு கோபம் தூண்டப்பட்டாலும் பொறுமை காத்து அவள் தன் உணர்வுகளை எல்லாம் கொட்டித் தீர்த்த பிறகு அமைதியாக அவளிடம் உரையாட வேண்டும். என்னுடைய பயங்களைக் கலந்துகொண்டு அவளுக்கு எச்சரிக்கை ஏற்படுத்த வேண்டும். புண்ணுக்கும் காயத்துக்கும் உள்ள வேறுபாட்டினைத் தெளிவு படுத்தவேண்டும். இப்போது சரி, இன்னும் குழந்தை குட்டி அதன் வளர்ப்பு என்று எங்கள் வாழ்க்கைப் பயணத்தில் நெடுந்தூரம் கடக்கவேண்டி உள்ளது என்பதை உணர்த்த வேண்டும்.

இப்படிப் பலப்பல வேண்டுதல்களுடன் மனப் போராட்டத்தில் எப்போது வீட்டுமுன் வந்து நின்றேன் என்பதே தெரியவில்லை.

இறுகிய முகம், மனம், லேசான பதற்றம், சுயவெறுப்பு, எல்லாவற்றின் கலவையாக கதவைத் தட்ட திறந்தாள் அவள். லேசனான அலங்காரப் பூச்சுடன் இருந்தாள்.

''ஏன் வாட்டமா இருக்கீங்க?'' என்று கேட்டாள் குரலில் வாஞ்சையுடன். கையிலிருந்த பையினை வாங்கி வைத்தாள். ''அதிக வேலைய்யா? தலைவலிக்குதா? இருங்க, சூடா காஃபி கொண்டு வர்றேன்'' என்று உள்ளே போய் கோப்பையுடன் வெளிப்பட்டாள். ''ஏன் ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க? டல்லா இருந்தா எங்கேயாவது வெளியே போயிட்டு வரலாமா?'' என்று கேட்டாள்.

நான் அவளையே உற்றுப் பார்த்தேன். தெளிவாக இருந் தாள். காலைச் சண்டையின் பிரதிபலிப்பு துளிக்கூட இல்லாமல், அப்படி ஒன்று நடக்கவே இல்லை என்பதுபோல். நிம்மதியான பெருமூச்சு எழுந்தது என்னிடமிருந்து. என் முகம் கூடத் தெளிவாகி இருக்கவேண்டும்.

''பார்த்தீங்களா என் காஃபியின் மகிமையை. ஒரே நிமிஷத்தில் உங்களை உற்சாகப்படுத்திவிட்டது,'' என்று சிரித்தாள்.

நானும் சிரித்தேன். நான் பேசவந்த எண்ணங்களைப் பேசலாமா என்கிற எண்ணத்தை விலக்கினேன். அதை ஆரம்பித்து இந்த நிமிஷ சந்தோஷத்தைக் கெடுத்துக்கொள்ள துணிவு வரவில்லை.

வெளிக் கொட்டாத எண்ணங்கள் புரையோடும்; பின் னாளில் தாமாகக் கிளம்பி வரும்போது நாற்றமெடுத்திருக்கும் என்பது புரியாமல் இல்லை. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.

''எங்கே போகலாம்?'' என்று கேட்டேன் உற்சாகமான குரலில்.

## 17. நெய்ப்பந்தம் பிடித்தவன்

புரோகிதர் கைனடிக் ஹோண்டாவில் ஆரோகணித்து வந்தார். அவருடைய திறந்த மார்பில் அழுக்கான முப்புரிநூலும் பளபளக்கும் கேடிஎம் தங்கச் செயினும் புரண்டு கொண்டிருந்தன. சரிந்து தொய்ந்திருந்த மார்பு மற்றும் வயிற்றுச் சதைகளை மூடுவதற்கு மேலிருந்த அங்கவஸ்திரம் எந்தப் பிரயத்தனமும் செய்யாமல் இருந்தது.

அவருக்குப் பின் இருக்கையில் ஒரு பிராமணர். ஏழ்மையின் பிடிகளுக்குள் இருப்பவர் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. தோளில் கிடந்த அழுக்குத் துண்டினைத் தோய்த்துக் கொள்ள முடியாத அளவுக்கு அவரை எந்த வறுமையும் அடித்திருக்க வாய்ப்பில்லை. சுத்தமாக இருப்பதென்பது எந்த ஆன்மிகம் சார்ந்த கட்டாயமும் இல்லை; அது ஒரு சமூக ஒழுங்கு. அதைக் கடைப்பிடிக்க மறுப்பதற்கான எந்த விளக்கமும், படித்த, சமூகப் பிரக்ஞை உள்ளவர்களால் இதய சுத்தியோடு தர இயலாது. உடல் சுத்தத்தையே பொருட்படுத்தாதவர்களிடம் இதய சுத்தியை எதிர்பார்ப்பதென்பது எவ்வளவு தூரம் சரி என்று எனக்குத் தோன்றியது.

அவர்களுடைய தாமதம் வெயில் ஏற்றத்தினால் கவலை கொண்டிருந்த எங்களை விடவும் முதலிலேயே வந்து விட்டு வாசலிலேயே காத்திருந்த மூன்றாவது பிராமணரையும் கவலைக் குள்ளாக்கி இருந்தது. எங்கே இன்றைய வரவுக்கணக்கு கனவு அளவிலேயே நின்று விடுமோ என்கிற ஏக்கம் அவர் முகத்தில் இவ்வளவு நேரம் கடை விரித்திருந்து, தூரத்தில் பெரிய

புரோகிதரின் வண்டியைப் பார்த்தபிறகு தான் கலைந்திருந்தது. தெளிவும் மலர்ந்திருந்தது.

எல்லோருமாக அவர்கள் இருவரையும் வரவேற்று உள்ளே அழைத்துப் போக மூன்றாமவர் வேகமாகத் தொடர்ந்தார்.

''என்ன கருமா செஞ்ச பையன் இங்கே நின்னுட்டிருக்கேள். உள்ளேன்னா இருக்கணும். குளிச்சாச்சோல்லியோ?'' என்று பரபரப்பு காட்டிய பெரிய புரோகிதர், ''இவாள் வீடுன்றதால தான் இன்னிக்கு ஒத்துண்டே வந்தேன். முக்கியமான முகூர்த்தமோல் லியோ, ரொம்ப பிஸி. எனக்கு இதை முடிச்சிண்டு ரெண்டு இடம் போகணும்'' என்று அங்கிருந்த ஒருவரிடம் சொல்லியபடியே உள்ளே நடந்தார்.

ஹாலில் கிழக்கு நோக்கிய வாக்கில் என் அம்மாவின் பெரிய அளவு படம் வைக்கப்பட்டிருந்தது.

''லிஸ்ட்படி எல்லாம் வாங்கிட்டேளோல்லியோ?'' என்று கேட்ட மாத்திரத்தில் தும்மினார் பெரிய புரோகிதர். மேல் அங்கவஸ்திரத்தால் மூக்கைத் துடைத்தபடியே ஒற்றைத் தும்மல் போடக்கூடாது என்று நினைத்தது போல் ஒரு துணைத் தும்மல் போட்டுக்கொண்டார். ''இன்னிக்குன்னு பார்த்து உடம்பும் சௌகரியமில்லை'' என்று சொல்லிக் கொண்டார்.

என் மனச்சுளிப்பு முகத்தில் தெரிந்து விடாதிருக்க மிகவும் சிரமப்பட்டேன்.

சிறிய ஹால் மனிதர்களால் நிரம்பி இருந்தது. அம்மாவின் அடர்த்தியைக் காற்றின் அதிக பட்ச ஈரப்பதமாக உணர முடிந்தது. அவளை நெருப்புக்குக் கொடுத்துவிட்டு வந்த நினைவுகளின் ஈரம் காயாமல் இருந்தது. கண்கள் சுழல்கையில் எல்லாம் அப்பாவின் வெறித்த பார்வை காற்றில் அம்மாவின் நிழல் பிம்பங்களைத்தேடி அலைக்கழிவது தெரிய இன்னும் கனமாக உணர்ந்தேன்.

இலை கொடுங்கோ, தாம்பாளம் கொடுங்கோ, வெல்லம் கொடுங்கோ, சொம்பில் ஜலம் கொடுங்கோ என்பது போன்ற கட்டளைகளுடன் புரோகிதரின் செயல்பாடுகள் தொடங்க, பயபக்தியுடன் என் மனைவியும் நானும் அவர் கேட்பவற்றை எடுத்துக் கொடுத்தபடி பரபரத்துக் கொண்டிருந்தோம்.

மூன்றரை வயது மகன் பரத் என் மொட்டைத் தலையைப் பார்த்து அவ்வப்போது கேலியாகச் சிரித்தபடியும் நடக்கின்ற ஏற்பாடுகளை வியப்புடன் பார்த்தபடியும் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தான். ''டேய்! எதையும் தட்டி விட்டுடப்படாது'' என்று அதட்டல் போட்ட புரோகிதரை அவன் பார்த்த பார்வையில் சிநேகிதம் இல்லை.

என்னை உட்கார வைத்துவிட்டார்கள். பக்கவாட்டில் புரோகிதர் நடுநாயகமாகவும் அவருக்குப் பின் வரிசையில் வலது இடது பக்கங்களில் மற்ற இருவருமாகவும் அமர்ந்து கொண்டனர்.

அப்பா, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, அவர்கள் பிள்ளைகள், என் மனைவி வீட்டார், பரத் வயது நண்டு நாழிகள் என்று அனைவரின் பார்வையும் என்னை ஊர்வதை உணர் கையில் துக்கச் சிலிர்ப்பு.

அம்மாவின் படத்துக்கு நேராக உட்கார்ந்திருந்தேன். விழிகள் நிமிர்ந்து அவள் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் குளம் கட்டிப் பார்வை மறைத்தது.

துக்கத்தை கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டேன். அப்பா வின் குமுறல்கள் குறித்த கவலை எனக்கு அதிகமாக இருந்தது. எனக்கான துக்கம் சம்பிரதாயம் சார்ந்தது என்றால் அவருடையது நிஜமான இழப்பின் பிரதிபலிப்பு. அம்மா உயிருடன் இருப்ப தென்பது எனக்கு அதிகபட்ச சௌகரியம் அல்லது நிறைவு. அவருக்கோ அடிப்படைத் தேவை. எங்கள் எல்லோருடனான அவருடைய உறவு எப்போதுமே அம்மாவின் மூலம்தான். அவனிடம் கேட்டுச் சொல்; அவளிடம் வாங்கித் தா என்றே

வாழ்ந்துவிட்டார். அருகில் இருக்கும் மருமகளிடம் ஏதும் கேட்ப தென்றால் கூடக் குரல் எழுப்பி கொல்லையில் இருக்கும் அம்மாவை வரவழைத்து அவள் மூலமாகத் தான் கோரிக்கை எழுப்புவார். அவருடைய நேர்மையும் ஒழுக்கமும் பிடித்த என் மனைவி அப்பா என்றே இதயபூர்வமாக அழைத்தாலும் மகனிடமே கோரிக்கைகள் வைக்காதவர் அவளிடமா வைப்பார். இனி வரும் நாட்களில் அவர் எங்களை எப்படி எதிர்கொள்ளப் போகிறார் என்கிற கவலை என்னை வாட்டியது. மூக்குக் கண்ணாடி உடைந்து போனதும் காட்சி காண்பதில் இருக்கும் தடுமாற்றம் அவரிடம் இப்போதே தெரிந்தது.

புரோகிதர் சொன்ன மந்திரங்கள் பல என் காதில் விழவில்லை. அவர் கொஞ்ச நேரம் சொன்னார். நடுநடுவே தும்பிக் கொண்டார். எதிரே விரிந்து பரந்திருக்கும் தானியங்கள், காய்கறிகள், நீர்க்கும்பங்கள், தேங்காய், பழ பூஜை சமாசாரங்கள், ஏற்றாத விளக்கு, ஆடைகள், குடை, செருப்பு முதலான தானப் பொருள்கள் சரியாக இருக்கின்றனவா என்று சோதிப்பதில் அவர் கவனம் போகும்போது அவருக்குப் பின்புறம் பவ்யமாக உட்கார்ந்திருக்கும் இருவரிடமும் 'நீங்க தொடருங்க' என்பது போல் சைகை காட்டுவார். அவர்கள் இருவரும் சில சமயம் ஒரே மாதிரியாகவும் சில சமயம் வேறு வேறாகவும் சொல்லி பிரேக் போட்டு நிறுத்தி ஒருவரை ஒருவர் பின்பற்ற முயன்று மீண்டும் முரண்பட்டு பெரிய புரோகிதரின் ஓங்கிய குரலுக்கு அடங்கி ஏதோ ஓதிக் கொண்டிருந்தார்கள். அபத்தமாக இருந்தது.

கணினி இயலில் இப்போதெல்லாம் பூஜைக்கான பல்வேறு மென்பொருள்கள் வந்துவிட்டன. வீட்டில் இருந்தபடியே திருப்பதி என்ன, பழனி என்ன என்று வீட்டுக் கணினியின் முன் அமர்ந்து சுட்டியைத் தட்டியபடியே நம் கைகளால் பூச்சொரிந்து மணி அடித்து தீபாராதனை காட்டிவிட முடிகிறது. இன்னும் கொஞ்சம் போனால் விர்ச்சுவல் ரியாலிட்டி என்கிற பெயரில் அதே இடங்களுக்கு நேரில் போய் வந்த உணர்வையே ஏற்படுத்தி விடுகிறார்கள். இந்த மாதிரியான கருமாதிச் சடங்குகள் திதி

கொடுப்பது போன்ற சடங்குகளை யாராவது அந்த மாதிரி கணினி மூலமாகக் கொண்டு வந்து விட்டால் எவ்வளவு நலமாக இருக்கும்? சுத்தபத்தமாக நாமே எல்லாவற்றையும் கணினித் திரை முன் வைத்துக்கொண்டு அது தரும் கட்டளைக்கு ஏற்ப செயல் பட்டு அதன் சுத்தமான பிசிறில்லாத மந்திர உச்சாடனைகளில் மகிழ்ந்து பிம்பமாகத் தெரியும் என் அம்மாவே அவற்றை ஏற்பதான விர்ச்சுவல் ரியாலிட்டியில் மயங்கித் திளைக்க முடியுமே! வேண்டுமானால் அந்தச் சடங்குகளுக்குப் பிறகு எல்லாவற்றையும் ஏழைப் பிராமணர்கள் மூவருக்கு தானம் செய்து விட்டுப் போவது! நண்பன் நெப்போலியனிடம் சொல்ல வேண்டும். கணினி மென்பொருள் நிபுணன். இந்த மாதிரி ஏதாவது செய்யப்பா என்று சொல்லி செய்ய வைத்து என் போன்ற குமுறல்களில் இருப்பவர்களில் சிலருக்காவது ஆறுதல் ஏற்படுத்த வேண்டும்.

அந்த மூவரின் நடத்தைகள் என்னை அம்மாவின் நினைவுகளிலிருந்து பிரித்து எடுத்துச் சென்று இந்த மாதிரியான சிந்தனைகளில் ஆழ்த்த, உள் அறையில் பெண்கள் தமக்கும் இந்த நிகழ்வுகளுக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் லொட லொடவென்ற பேச்சுக்களில் இருந்தனர். அது குறித்த ஒப்பு தலின்மை ஆண்களில் பலருக்கும் இருந்த போதிலும் எவரும் வெளிப்படையாக ஏதும் சொல்லவில்லை. அந்தப் பேச்சுகளின் குரலளவு கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிக்கொண்டே போய் சின்ன புரோகிதர்கள் மந்திரம் சொல்லுவது தடைப்படும் அளவுக்குப் போக, மந்திரத்தைப் பாதியில் நிறுத்திய ஒருவர் ''பொம்பளை யாள் கொஞ்சம் மெதுவா பேசப்படாதா?'' என்றார் எரிச்சல் நிரம்பிய குரலில்.

தலைமைப் புரோகிதர் அவரை அடக்கினார்.

''அப்படி எல்லாம் சொல்லப்படாது. இந்தப் பரபரப்பான லோகத்துல ஏதோ இந்த மாதிரியான விசேஷங்கள்ல தான் சந்திக்கறா. பேசிட்டுப் போகட்டும். உமக்கு இன்னும் விவரம்

வளரலை ஓய். சாஸ்திரம் பாதி லௌகீகம் பாதின்னு தானே சாஸ்திரத்துலயே சொல்லி இருக்கா...''

எந்த சாஸ்திரத்தில் அப்படிச் சொல்லி இருக்கா என்று எனக்குள் கேள்வி எழுந்தது. கூடவே இவர் கழுத்தில் ஆடிய செயினுக்கும் முந்தையவரின் அழுக்குத் துண்டுக்கும் அர்த்தம் புரிந்தது எனக்கு.

தாம்பாளத்தில் பிண்டம் பிடித்து வைத்தார். என் வலது உள்ளங்கையை ஏதோ ஒரு கோணத்தில் வளைத்தார். ''இது தான் பித்ரு ரேகை. இது வழியாத் தான் எள்ளும் நீரும் இறைத்து விடணும். அம்மா முன்னோர் இருபத்தோரு தலைமுறை, அப்பா முன்னோர் இருபத்தோரு தலை முறைக்கு இதுதான் உணவு. நீரை தாராளமா இறையுங்கோ...''

நேரம் கடந்து கொண்டிருந்தது.

''அடுத்தது தானம். வஸ்திர தானம் ஆயுள் விருத்தி. பூமி தானம் பிரம்ம லோகம். இப்போ பூமி தானமெல்லாம் செய்ய முடியுமோ? அதான் தேங்காய்...'' என்று ஆரம்பித்து அவர் சொன்னவை ஸ்லோகங்களா அவற்றின் விளக்கங்களா என்று எனக்குப் புரியவில்லை. என் கவனம் சொந்தக் கவலையில் பாதியும் அப்பாவின் உடம்புக் குலுக்கல்களில் மீதியுமாக இருக்க அம்மாவின் நினைவுகள் உள்ளே கிளர்ந்தபடி இருந்தன.

''தங்கக் காசு! வெள்ளி டாலர்! இதெல்லாம் கொஞ்சம் அதிகம் தான். என்ன ஐயரே! கொஞ்சம் விவரம் தெரியாத பார்ட்டின்னா உடனே ஏறி மேஞ்சிருக்கீங்க போலிருக்கே...'' என்று ஒரு பெரியவர் அடித்த கமெண்ட்டுக்கு புரோகிதர் தும்மலுடன் முகம் துடைத்தபடி பதில் சொல்வதைத் தவிர்த்த மாதிரிப் பட்டது.

''இதெல்லாம் தானமா செஞ்சா அம்மா ஆத்மா நேரா சொர்க்கம் போகும்னு சாஸ்திரத்துல சொல்றதை நம்பி அவா செய்யறா. உமக்கு ஏங்காணும்...'' என்று பேசப் போன அழுக்குத் துண்டு பிராமணரை முதலாமவரின் பார்வை தடுத்தது.

தங்கம், வெள்ளி, குடை, செருப்பு, செம்பு, வேஷ்டி, பஞ்சபாத்திரம் என்று ஒவ்வொன்றாக ஒரே மாதிரியான மந்திரங்கள் சொல்லிச் சொல்லி என் கையால் அவர் பின்னே இருந்த இருவருக்கும் தர வைத்தார் பெரிய புரோகிதர்.

அந்த இருவரும், குடை எனக்கு, தங்கம் நான் வாங்கிக்கறேன், எனக்கு பெண் பிள்ளைகள் இருக்கா, நீர் தானே ஓய் போன வீட்டில் வாங்கிண்டீர் என்பது போன்ற சிறு வாக்கு வாதங்களுடன் அந்தப் பொருள்களைப் பெற செல்லப் போட்டி போட்டது என்னுள் பரிதாபத்தை வளர்த்தது.

எனக்கு இத்தகைய சடங்கு சம்பிராதயங்களில் நம்பிக்கை கிடையாது என்றாலும் மற்றவர்களின் திருப்திக்காக செய்ய வேண்டி இருக்கிறது. இங்கே தனி மனிதப் பிடிவாதங்கள் நிற்பதில்லை. ஏனென்றால் ஊர் மொத்தமும் இந்த விஷயத்தில் மட்டும் எதிர் நின்று எதிர்க்கும். இறந்த ஆத்மாவுக்கு சாந்தி செய்யவில்லை என்றால் நீ பாவம் செய்கிறாய் என்று எல்லா சந்தர்ப்பங்களிலும் சொல்லிக் காட்டும். வீட்டில் சிறுவனுக்கு தும்மல் வந்தால் கூட வீட்டில் பெரிய ஆத்மா சுற்றுகிறது. சாந்தி செய்யாததால் தான் இதெல்லாம் நடக்கிறது. இன்னும் என்னென்ன ஆகுமோ என்று இல்லாத எண்ணங்களை எல்லாம் உண்டாக்கிப் பயமுறுத்தும். அதன்பின் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் ஒவ்வொரு நிகழ்வையும் குற்ற உணர்வுடன் தான் எதிர்கொள்ள வேண்டி வரும். இங்கே சிந்தனைக்குப் பிடிக்காத பல காரியங்கள் குற்ற உணர்வின் பிடியிலிருந்து தப்பி நிற்கத் தானே செய்யப்படுகின்றன?

இப்படி தப்புத் தப்பாகவேனும் மந்திரம் சொல்லிக் கொண்டும் தானப் பொருள்களுக்கு சண்டையிட்டுக் கொண்டும் கவனங்களை எங்கோ வைத்துக் கொண்டும் இவர்கள் என்ன ஓதி என்ன செய்து என் அம்மாவுக்கு சாந்தி தரப் போகிறார்கள் என்று புரியவில்லை.

இதே எண்ணம் எல்லோர் மனங்களிலும் இருக்கிறது என்பதென்னவோ நிஜம் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் பலருடன் பேசிய போது அறிந்திருக்கிறேன். இருந்தும் இந்தச் சடங்குகளைச் செய்யாமல் தவிர்ப்பது என்கிற நிலைப்பாட்டை ஒருவரும் ஏன் எடுப்பதில்லை என்று புரியவில்லை. யார் கண்டது, நாளை வேறோர் வீட்டில் என்னையும் மேற்கொள்காட்டி, ‘அப்படி வியாக்கியானம் பேசியவன்கூட தன்னுடைய அம்மா வுக்கு என்று வந்த போது செய்யாமலா போனான்...?’ என்று பேசலாம்.

பின்னொரு நாளில் நானும் அப்பாவும் உரையாடும் போது அப்பாவின் மனம் புண்படக்கூடாது என்பதற்காகவே நானும் என் மனம் புண்படக்கூடாது என்பதற்காகவே அவரும் இவற்றைச் சகித்துக் கொண்டிருந்தோம் என்று கூடத் தெரிய வரலாம்.

இரண்டரை மணி நேர அவஸ்தை நாடகம் தொடர்ந்தது. முதுகில் வழிந்து ஓடும் வியர்வையின் குறுகுறுப்பையும் மீறி கசகசப்பை உணர முடிந்தது. என் மன உணர்வுகள் விடுதலை வெடிப்புக்கு தவம் செய்தன.

எல்லாம் முடிந்த கணத்தில் புரோகிதர் எழுந்தார். வீட்டுக்கு திருஷ்டி கழித்தார். மாவிலையால் முக்கி எடுத்து அந்த அறையின் நாலாப் பக்கங்களிலும் ஹோம நீர் தெளித்தார். வீட்டின் ஒவ் வொரு அறைக்கும் சென்று தெளித்து வரும்படி தன் உதவி யாளரைப் பணித்தார். ‘‘தீர்த்தம் வாங்கிக்கோங்கோ’’ என்று குரல் கொடுத்தபடி பஞ்சபாத்திரத்தில், தேங்காய்த் தண்ணீர், கும்ப நீர், பால், அது இது என்று ஏதேதோ கலந்த கலவையை ஒவ் வொருவர் உள்ளங்கைகளிலும் ஊற்றத் தொடங்கினார். பயபக்தி யுடன் வாங்கியவர்கள் வாயில் ஊற்றியது போக வழிந்தவற்றை தலையிலும் கண்களிலும் தடவிக் கொண்டனர்.

‘‘பேரப்பிள்ளைகள் வாங்கோ’’ என்று குரல் கொடுத்தார்.

குழந்தைகள் உற்சாகமாக ஓவென்று குரல் எழுப்பியபடி வரிசைக்கு முந்தின.

''ஏய்! சத்தம் போடக்கூடாது...''

''சாமி! எனக்கு இன்னொரு கரண்டி...''

பரத் தவிர அனைவரும் வாங்கிக் கொண்டார்கள்.

பரத் பிடிவாதமாக வாங்கிக் கொள்ள மறுத்து ஓட்டம் பிடிப்பதிலேயே குறியாக இருந்தான்.

''உன் பாட்டிக்கு நெய்ப்பந்தம் பிடிச்சு அவா ஆத்மாவுக்கு வழி காட்டினவண்டா நீ. நீ தான் முதலில் தீர்த்தம் வாங்கணும்'' என்று சிரித்தார் புரோகிதர்.

''நான் எப்போவாவது ஒரு தடவை மூக்கில் விரல் வச்சாலே அந்தக் கையைக் கழுவிட்டு வரலைன்னா என் பாட்டி என் கையால் எதையும் வாங்கிக்க மாட்டா. நீங்க எவ்ளோ நேரமா மூக்கை நோண்டிட்டு இருந்தீங்கன்னு நான் பார்த்திட்டே இருந்தேனே. உங்க கை துண்டு எல்லாம் டர்ட்டி. எனக்கு வேணாம் உங்க தீர்த்தம்'' என்றபடி ஓடினான் வாசலுக்கு.

# 18. ஒரு தற்கொலை முயற்சியின் போஸ்ட் மார்ட்டம்

சங்கரி உடம்பில் கல்லைக் கட்டிக் கொண்டு முதலியார் வீட்டு வயல்காட்டின் பெரிய கிணற்றினுள் பாய்ந்தாள்.

நல்லவேளையாக குருவம்மாளைக் கணக்கு பண்ணுவதற் காக அங்கே பம்ப்செட்டின் மோட்டார் அறைக்குத் தள்ளிக் கொண்டு வந்திருந்த நாட்டாமை மகன் காதுகளில் அந்தச் சப்தம் விழ இருவருமாகச் சேர்ந்து, தண்ணீரை நிறையக் குடித்து மயங்கிக் கிடந்த சங்கரியை மேலே தூக்கி வந்தார்கள்.

கம்பெனிக்கு ஓடினார்கள் யாரோ, கம்பெனியின் ஆம்புலன்ஸ் விரைந்து வந்தது. கூடவே கம்பெனியின் முதலுதவி மருத்துவரும் வந்தார். ஆம்புலன்ஸ் பக்கத்து ஊர் ஆஸ்பத்திரிக்கு விரைய பின்னேயே நிறைய பெண்கள் ஓடினார்கள்.

அந்த கிராம சாலையில் தேமே என்றிருக்கும் உயர்நிலைப் பள்ளியைக் கடந்து தினம் மூன்று முறையாவது ஜீப்பிலோ காரிலோ வேலை நிமித்தமாக சர் சர்ரென்று விரையும் ஹீராசந்த்துக்கு அதன் உள்ளே போய்த் தலைமை ஆசிரியரைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியதில் தான் ஆரம்பமானது எல்லாம்.

தலைமை ஆசிரியருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இந்தியாவின் பல லட்சம் கிராமங்களில் இந்த கிராமத்துக்கு ஒரு தனி அடையாளம் தந்திருக்கும் கம்பெனியின் இன்ஜினியர்களில் ஒருவர் அந்தப் பள்ளிக்குள் வருவது இதுவே முதன் முறை.

''வாங்க சார்'' என்று எழுந்து நின்று வரவேற்றார்.

''பள்ளிக்கூடம் எல்லாம் எப்படி சார் நடக்கிறது?''

''ஏதோ நல்லபடியா நடக்குது சார்''

''ரொம்ப நாளா நினைச்சிட்டிருந்தேன், உள்ளே வந்து விசாரிக்கணும்னு. இன்னிக்குத்தான் சமயம் கிடைச்சது.''

''சொல்லுங்க சார்''

''உங்க ஸ்கூல்ல பத்தாம் வகுப்பு இந்த வருஷம்தானே ஆரம்பிச்சிருக்கு? பிள்ளைங்க எல்லாம் எப்படிப் படிக்கிறாங்க?''

''சொன்னா ஆச்சரியப்படுவீங்க சார். அவங்களோட வறுமைக்கும் அறிவுக்கும் சம்பந்தம் இல்லைங்கற மாதிரி நிறைய நல்ல ஸ்டூடண்ட்ஸ் இருக்காங்க. இவங்க படிப்பெல்லாம் இத்தோட நின்னிடக் கூடாதேன்னு அப்பப்போ கவலை வரும்''

ஹீராசந்த் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''அதிலும் குறிப்பா சங்கரின்னு ஒரு பொண்ணு சார். அவளுக்கு அம்மா கிடையாது. அப்பாவும் மூணு தங்கச்சிகளும் தான். அம்மா கடைசிப் பொண்ணோட பிரசவத்தின் போது இறந்து போச்சாம். அவளோட அப்பாவுக்கு படிப்பு வாசனை கிடையாது. அவருக்கு இப்படி ஒரு மகளான்னு தோணும். இந்த சங்கரிதான் வீட்டில் தங்கைகளையும் பார்த்துட்டு படிப்பிலும் படு ஸ்மார்ட்டா இருக்கா.''

''தமிழ் மீடியம் பள்ளிகளிலும், அரசாங்கம் கூட மறந்து போன கிராமங்களிலும் நல்ல அறிவாளிகள் பிறந்து வளர்ந் திட்டுத்தான் இருக்காங்க. இது புரியாத பட்டணத்து மட ஜனங்க தான் தங்கள் பணத்தையும் அருமையையும் மறந்து பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் சேர்த்துவிட பிச்சைக்காரர் களையும் விடக் கேவலமா அலையறாங்க'' என்று பொருமினார் ஹீராசந்த்.

''சார்! நீங்க வந்த விஷயம்...?'' என்று ஞாபகப்படுத்தினார் தலைமை ஆசிரியர்.

''நல்லா படிக்கிற பிள்ளைக்கு உதவுவது மாதிரி ஏதாவது பிளான் பண்ணலாமேன்னு வந்தேன். ரொம்ப நாளா உங்க ஸ்கூலைக் கடந்து போகும் போதெல்லாம் தோணும். இப்போ சமயம் வாய்ச்சது. நீங்க சொல்றதைப் பார்த்தால் அந்த சங்கரிக்கான படிப்புச் செலவை நானோ எங்க கம்பெனியோ ஏத்துக்கிடறது மாதிரி ஏதாவது ஏற்பாடு செய்யலாமே...''

தலைமை ஆசிரியரின் கண்கள் பனித்தன.

''சார்! நீங்க நினைச்சது ரொம்ப நல்ல விஷயம். ஏதாவது ஏற்பாடு பண்ணினீங்கன்னா சங்கரி ஒரு பெரிய ஆளா வருவா. அதுக்கு நான் கியாரண்ட்டி. இல்லைன்னா படிப்பு அருமை தெரியாத அவள் அப்பா இதுக்கு மேல நிச்சயமா அவளைப் படிக்க வைக்க மாட்டார். இங்கேயே கிராமத்து வயல்களில் அடுத்த வருஷம் நாத்து நட்டுக்கிட்டும் களை பிடுங்கிட்டும் தான் இருப்பா அவள்.''

''கவலைப்படாதீங்க சார். அந்த சங்கரியின் படிப்பு டீடெயில்ஸோட எங்க கம்பெனிக்கு அட்ரஸ் பண்ணி ஒரு அப்ளிகேஷன் கொடுக்கச் சொல்லுங்க. நீங்க அதில் கொஞ்சம் ஸ்ட்ராங்கா ரெக்கமெண்ட் பண்ணி எழுதிக் கொடுங்க. பாக்கி எல்லாம் நான் பார்த்துக்கறேன்.''

ஹீராசந்த் எழுந்து நடக்க அவரைக் கடவுளைப் பார்ப்பது போல் பார்த்தார் தலைமை ஆசிரியர். உடனடியாக சங்கரியைக் கூப்பிட்டு அனுப்பினார். ஹீராசந்த் வந்துபோன விவரத்தைச் சொல்லி, ''நீ நல்லா படிக்கணும் சங்கரி. உன்னுடைய மேல் படிப்புக்கு நான் எல்லா ஏற்பாடும் பண்ணறேன்'' என்று ஊக்கம் கொடுத்து அனுப்பினார்.

சங்கரிக்கு வானில் பறப்பது போல் உணர்வு. மனதளவில் இந்த வருடத்துடன் படிப்பு அவ்வளவுதான்; அடுத்த வருஷத்தி

லிருந்து வயல் வேலைக்கும் காட்டு வேலைக்கும்தான் போக வேண்டும் என்று தயார் நிலையில் இருந்தவளுக்கு இருண்ட வெளியில் ஓர் ஒளிக்கீற்று கிளம்பியது போல் நம்பிக்கை.

நன்றாகப் படித்தாள். காலாண்டுத் தேர்வில் எல்லாப் பாடங் களிலும் தொண்ணூற்றைந்துக்கு மேல் எடுத்தாள். கணக்குப் பாடத்தில் நூறு.

ஹீராசந்த் ஐம்பது ரூபாய் எடுத்து தலைமை ஆசிரியரிடம் கொடுத்து அவளுக்கு பரிசு வாங்கித்தரச் சொன்னார். இந்த முறை ஹீராசந்துடன் வந்திருந்த நண்பர், ''சார்! அந்தப் பொண்ணோட பதில் தாள்களையும் உங்க பள்ளிக்கூடக் கேள்வித்தாளையும் கொடுங்க. நான் அடுத்த வாரம் சென்னைக்குப் போகிறேன். அங்கே என் உறவினர் பெரிய பள்ளி ஒன்றில் வாத்தியாராக இருக்கிறார். அவரிடம் இந்த பேப்பர்களைக் காண்பித்து இன்னும் இம்ப்ரூவ்மெண்ட் பண்ணணுமான்னு கேட்டு வர்றேன்'' என்று வாங்கிப் போனார்.

சங்கரிக்கு தான் குறைந்த பட்சம் ஒரு டீச்சராகி விட முடியும் என்கிற நம்பிக்கை வந்தது. தன் தங்கைகளை எல்லாம் பட்டதாரி களாக்கிவிட வேண்டும் என்று கனவு காணத் தொடங்கினாள். கிராமத்துக்குள் அவளை வித்தியாசமாகப் பார்க்கத் தொடங்கி னார்கள்.

அரைப் பரீட்சைக்குப் பிறகு அவளுக்கு படிப்பில் இன்னும் வேகம் பிறந்தது. அவளுடைய விடைத்தாள்களைப் பார்த்து விட்டு ஆசிரியர்கள் அவள் மாநிலத்திலேயே முதல் மாணவியாக வருவதற்கு எல்லா வாய்ப்பும் இருப்பதாகச் சொல்லத் தொடங்கி னார்கள்.

தலைமை ஆசிரியரிடம் அவள் தன் டீச்சர் கனவு பற்றிச் சொல்லியபோது அவர் சிரித்தார். ''சங்கரி! நீ பெரிசா படிச்சு கலெக்டராகப் போறேன்னு நினைச்சிட்டிருக்கேன்'' என்றார். ''ஆனா அதுக்கு நீ இன்னும் ஊக்கமா படிக்கணும்.''

சங்கரி மனதுக்குள் சங்கற்பம் செய்து கொண்டாள். கலெக்டரானால் என்னென்ன செய்யமுடியும் என்பதைப் பாமரத் தனமாகவாவது முதலியார் வீட்டு தொலைக்காட்சியின் சீரியல்கள் அவளுக்குக் கற்றுத் தந்திருந்தன. தான் கலெக்டரானால் இந்த கிராமத்திற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று மனதின் ஓரத்தில் ஒரு பக்கம் ஒதுக்கிப் பட்டியல் புதுப்பித்தபடி இருந்தாள். 'நல்லாப் படிக்கிற ஏழை வீட்டுப் பிள்ளைகளின் வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் தர வேண்டும்' என்பது முதல் திட்டம்.

மார்ச் மாதம் பரீட்சை முடிந்தது. ஏப்ரல் மாதம், பாசனத் துக்குத் தண்ணீர் வரும் வரையில் வேறு வேலை இல்லாததால் கிராமம் சோம்பல் முறித்துக் கிடந்தது. அவ்வப்போது எங்காவது கட்டட வேலையோ, முள் வெட்டும் வேலையோ நடந்தால் நாற்பது ரூபாய் கூலி கிடைக்குமே என்று ஓடிய பெண்கள் சங்கரியை உடன் அழைத்துச் செல்லத் தயங்கினார்கள். அவளும் போவதற்குத் தயாராக இல்லை.

ஹீராசந்த்துக்கு வேறு மாநிலத்துக்கு வேலை மாறுதல் ஆர்டர் வந்தது. தலைமை அலுவலகத்தைத் தேடி ஓடினார் அவர். சங்கரி சார்பில் மனு எழுதி வைத்துத் தன் கம்பெனியின் நிர்வாக பிரிவின் தலைமை அதிகாரியைச் சந்தித்து நேரில் கொடுத்தார்.

''நம்ம கம்பெனியில் இந்த மாதிரி ஒரு ஸ்கீமுக்கே ப்ரொவிஷன் கிடையாதே. நீங்க எப்படி ஹீராசந்த், இந்த மாதிரி ஒரு வாக்குக் கொடுத்தீங்க?''

''சார் சோஷியல் சர்வீஸ் எக்ஸ்பென்ஸுல இதைக் கொண்டு வரலாம் சார்! நல்லா படிக்கிற பொண்ணு. பிரைட்டா வர்றதுக்கு சான்ஸ் இருக்கறதால சொல்றேன்.''

''நீங்க சொல்றது புரியுது. ஆனா, சோஷியல் சர்வீஸ் எக்ஸ் பென்ஸுக்கு லிமிட்டேஷன் இருக்கு. உங்களுக்குத் தெரியாத தில்லை. அந்தச் செலவு எல்லாமே ஏதாவது அரசியல்வாதிங்க அல்லது கலெக்டர் மாதிரியான அதிகார வர்க்கத்தைச்

சேர்ந்தவங்க கை நீட்டற இடத்தில் செய்யறதுக்குத்தான் இருக்கே ஒழிய இந்த மாதிரி நாமே செலவு பண்றதுக்கு அடிஷனல் சாங்ஷன் தேவைப்படும். என் ஞாபகம் சரின்னா இந்த வருஷத்துக்கான பட்ஜெட்டில் அதுக்கு நாம் ஒதுக்கியிருக்கிற பணத்துக்கு அல்ரெடி ப்ளான்ஸ் இருக்கு. இப்போ இந்தப் பொண்ணோட படிப்பு விஷயத்தையும் சேர்க்க முடியுமான்னு பார்க்கறேன்...''

''சார்! நான் இருந்தாலாவது இது விஷயமா உங்களை அடிக்கடி பார்த்து ஞாபகப்படுத்த முடியும். எனக்கு இப்போன்னு பார்த்து டிரான்ஸ்ஃபர். நீங்க இந்தக் கேஸை மறந்திடாம செஞ்சு கொடுங்க சார்.''

''ரிஸல்ட்ஸ் வரட்டும். பார்க்கிறேன்'' என்று மட்டும் சொன்னார் அந்த அதிகாரி.

ஹீராசந்த் மாறுதலாகி மே மாதம் போய்விட, ''இங்கே பாரு புள்ள! இருக்கிறதை விட்டுவிட்டு பறக்குறதுக்கு ஆசைப் படக்கூடாது. ஏதோ நீ ஆசைப்பட்டதுக்கு பத்து வரைக்கும் படிச்சாச்சு. இனிமே உன் தங்கச்சிகளைக் கரை சேர்க்கணும். உனக்கு ஒரு கண்ணாலம் காச்சி பாக்கணும். புரிஞ்சிக்கிட்டு வேலைக்கு வரப்பாரு'' என்கிற அப்பாவின் வார்த்தைகள் சங்கரிக்கு எரிச்சலை உண்டு பண்ணின. தலைமை ஆசிரியர் அந்தக் கம்பெனியின் கிராமத்துத் தொழிற்சாலை அலுவலகத்துக்கு நடையாய் நடந்தார். கேட்பவர்கள் எல்லோருமே குரலிலும் முகத்திலும் நிஜமான இரக்கம் காட்டினர். அவரவர்க்கு என்ன வேலைப் பளுவோ, மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாத இயலாமையோ, 'நீங்கள் எதற்கும் நிர்வாகத் தலைமை அலுவலகத்துக்குப் போய்ப் பாருங்கள்' என்று மட்டும் அறிவுரை சொல்லிவிட்டு விலகிக் கொண்டார்கள். தலைமை ஆசிரியர் அதற்கும் ஒருமுறை முயன்றார். தலைமை அதிகாரியைப் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. அவருடைய பி.ஏ.வை மட்டும் பார்க்க முடிந்தது.

''சார்! நீங்க எதற்கும் உங்க தொகுதி எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. கிட்ட ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கி வாங்களேன். அவர்களை விட்டு ஃபோன் பண்ண வைக்க முடிந்தால் ரொம்பவே நல்லது'' என்றார் அவர்.

தலைமை ஆசிரியர் செய்வதறியாது திகைத்ததற்குக் காரணம் இருந்தது. சங்கரியின் அப்பா எதிர்க்கட்சிக்காரராக கிராமத்தில் அறியப்பட்டவர். நிச்சயமாக ஆளுங்கட்சி பிரதி நிதிகள் சங்கரிக்கு உதவ மாட்டார்கள்.

ஜூன் மாதம் ரிஸல்ட்டுகள் வந்தன. சங்கரி மாவட்டத்தி லேயே முதல் மதிப்பெண்கள் வாங்கித் தேறி இருந்தாள். வாய்க்காலில் மேட்டூர் தண்ணியும் வந்தது. கிணறுகள் நீர் மட்டம் உயர்ந்து தளும்பி நின்றன. கிராமம் நடவுக்கு ஏற்பாடுகள் செய்ய தன் கவனத்தை வயல்களின் மீது திருப்பி இருந்தது. சங்கரியின் அப்பாவுக்கு அவள் வயல் வேலைக்கு வராமல் கலெக்டர் கனவு களுடன் திரிவதில் எரிச்சல் இருந்தது. மற்ற பெண்கள் அவளு டைய கனவு என்னவாகிறது என்று பார்த்துவிட்டு அப்புறமாகத் தம் கேலியை வைத்துக் கொள்ளலாம் என்று தத்தமது வயலுக்குத் தண்ணீர் பாயவிடும் கணவர்களின் வயல் வேலைகளுக்குத் துணை போய் விட்டார்கள்.

அந்த சமயத்தில் தொழிற்சாலையின் புதிய யூனிட் ஒன்று தொடங்குவதாக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. மாவட்டக் கலெக்டர் வருவதாக விழா நிகழ்ச்சிகள். தலைமை ஆசிரியருக்கு கம்பெனியின் தலைமை அதிகாரியிடமிருந்து திடீர் அழைப்பு வந்தது. விழா மேடையில் அவரும் கிராமத்தின் முக்கியப் புள்ளி என்கிற வகையில் உட்கார வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் அந்த அதிகாரி. இதுதான் சமயம் என்று தலைமை ஆசிரியர் சங்கரி விஷயமாக ஞாபகப்படுத்த, ''நோ ப்ராப்ளம் சார். அந்த மேடையிலேயே கலெக்டர் முன்னிலையில் சங்கரி யின் மேல்படிப்புக்கான செலவுகளைக் கம்பெனியே ஏற்கும்னு அனௌன்ஸ் பண்ணிடலாம்,'' என்றார் அதிகாரி.

தலைமை ஆசிரியருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

கிராமத்துக்கு வந்தவுடன் இந்த விஷயத்தைப் பரப்பி விட்டார். சங்கரி கிராமத்தின் திடீர் வி.ஐ.பி. ஆகிப் போனாள்.

விழா மேடையில் சங்கரியின் படிப்பு ஆர்வமும் திறமைகளும் எல்லோராலும் புகழப்பட்டன. விழா அந்தக் கம்பெனியின் புது யூனிட் திறப்பு விழாவா அல்லது சங்கரிக்கான பாராட்டு விழாவா என்று தெரியாத அளவுக்கு இருந்தது. கலெக்டர் அவளை அருகே அழைத்துப் பாராட்டியதோடு தன் சொந்தப் பணத்திலிருந்து ஐநூறு ரூபாய் எடுத்துத் தந்தார். சங்கரி படிப்பு சம்பந்தமாக எந்தப் பிரச்சினை என்றாலும் எந்த நேரமும் தன் உதவியை நாடலாம் என்றும் அறிவித்தார். நீர் நிரம்பி அலைகள் அடித்துக் கொண்டிருக்கும் வயல்களின் வரப்புகளினூடே ஒரு சினிமா நடிகையைப் போல் பாடிக்கொண்டே ஓடிக் களிக்கத் துடித்தது சங்கரியின் மனது.

சங்கரியின் அப்பாவைத் தவிர எல்லோரும் சந்தோஷப் பட்டனர். அவருக்கு ஆகப்போகும் செலவுகளைப் பற்றிய கவலை இப்போதே சூழ்ந்து கொண்டது.

விழா முடிந்தது. எல்லோரும் அவரவர் திசைகளுக்குப் பறந்து விட்டார்கள். சங்கரி மட்டும் கலெக்டர் கனவுகளோடு பக்கத்து ஊரில் போய் ப்ளஸ் டூ படிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆசிரியரைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்ளிகேஷனின் விலையேகூட அவள் அப்பாவின் பொருளாதார நிலையை மீறியதாக இருந்தது. வயல் வேலைக்கு வைத்திருக்கும் காசை இதற்குத் தர முடியாது என்று அவர் திட்டவட்டமாக மறுத்து விட்டார்.

தலைமை ஆசிரியர் உதவியோடு கம்பெனியின் தலைமை அதிகாரியைப் பார்க்க முயன்றாள். அவரைப் பார்க்க முடியவில்லை. பி.ஏ. தான் கிடைத்தார்.

''நீங்க செலவழிச்சு பள்ளியில் சேர்த்துவிட்டு அந்த பில்களை எல்லாம் அட்டாச் பண்ணி அப்ளிகேஷன் கொடுங்க. பரிசீலனை பண்ணிப் பார்க்கலாம்'' என்றார் அவர்.

''சார்! இவளுடைய படிப்புச் செலவை கம்பெனியே ஏற்கும்னு அறிவிச்சாங்களே.''

''இதுதான் சார் பிரச்சினையே! அதிகாரிகளுக்கு நிர்வாக ரூல்கள் தெரிவதில்லை. இப்படி எதையாவது சொல்லிடறாங்க. கம்பெனியின் விதிமுறைகளில் இப்படி ஒரு ப்ரொவிஷனே கிடையாது. எங்க கம்பெனி இந்தியா முழுக்க ஏகப்பட்ட கிராமங்களில் கிளைகள் கொண்டிருக்கு. ஒரு கிராமத்தில் முன்மாதிரி ஏற்படுத்திட முடியாது. புரிஞ்சுக்கோங்க.''

''சார்! நீங்க செய்யற பல செலவுகளோட ஒப்பிட்டா இது ஒரு செலவே கிடையாது சார். தயவு பண்ணணும்.''

''நீங்க சொல்றது சரிதான். ஒப்புக்கறேன். ஆனா ரூல்ஸ் அப்படி இருக்கே. சமூக உதவிங்கற பேரில் பத்தாயிரம் ரூபாய் விநியோகிக்கறதுக்கு, நிர்வாகச் செலவு, வி.ஐ.பி. வரவேற்பு, விழா ஏற்பாட்டுச் செலவுன்னு ஒரு லட்சரூபா கூடச் செலவழிக்க ரூல்ஸ்ல இடம் இருக்கு. ஆனா இப்படி ஓர் ஏழைக்கு உதவ வழி கிடையாது. இப்பவும் சொல்றேன். கம்பெனி முழுக்க ரீ இம்பர்ஸ் பண்ணிடும்ங்கற நம்பிக்கைல கடன உடன வாங்கி ஏமாந் திடாதீங்க. இது என்னுடைய பர்ஸனல் சின்ஸியர் அட்வைஸ்'' என்று அனுப்பி வைத்தார் அவர்களை. அவருக்கு தன் மச்சினிக்கு உள்ளூர் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் ஆசிரியர் வேலை வாங்குவதற்காக கம்பெனியின் சமூக உதவித்திட்டத்தில் இருந்து அந்தப் பள்ளிக்கு கம்ப்யூட்டர் வாங்கித் தருவதாகக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விடலாம் என்கிற நம்பிக்கை தெரியத் தொடங்கியது.

சங்கரிக்கு அவமானமாக இருந்தது. கடைசி கடைசியாக ஒருமுறை கலெக்டர் அலுவலகத்துக்குப் போக எண்ணினாள். ''எந்த உதவி வேண்டுமானாலும் என்னை வந்து பார்'' என்று சொன்ன கலெக்டர் அதற்கான வழியைச் சொல்லித் தர வில்லையே என்கிற திகைப்பு அப்போதுதான் ஏற்பட்டது.

ஜூலை மாதத்தில் எல்லோரும் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். சங்கரி வயல் வேலைக்குப் போக மன

மில்லாமல் போனாள். பெரிய பெண்கள் அவளைப் பார்த்து இரக்கப்பட்டு உச்சுக் கொட்டினார்கள். சக வயதுப் பெண்கள் கேலியாகப் பார்த்தார்கள். ''வாங்க கலெக்டரம்மா'' என்று அவர்கள் வரவேற்றதை அவள் ஒரு சங்கடப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள். அவர்களெல்லாம் சில வருடங்களுக்கு முன்பேயே படிப்பு வராமல் நின்று கொண்டதால் இன்று நாற்று நடும் வேலையில் சங்கரியை விட கை நேர்த்தி அதிகம் உடைய வர்களாக இருந்தார்கள். தடுமாறிய சங்கரியிடம், ''நினைப்பை எங்கேயாவது வச்சிக்கிட்டு இங்கே வேலை பார்க்காதே'' என்று குத்தல் பேச்சுப் பேசினார்கள்.

இரண்டாம் நாள் மாலை சங்கரி கிணற்றில் விழுந்தாள்.

மறுநாள் சங்கரியை பத்திரமாக வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். கிட்டத்தட்ட மொத்த கிராமமும் அவள் வீட்டு முன் கூடி இருந்தது. ''தெரியாம கேலி செஞ்சிட்டோம் புள்ள! அதுக்காக இப்படியா பண்றது?'' என்று மன்னிப்புக் கேட்டார்கள் அவள் வயது தோழிகள். ''இந்த வருஷம் வேணா நான் வெள்ளாமை பண்ணலை. நீ படி ஆத்தா! அதுக்காக உன் அப்பனையும் தங்கச்சிகளையும் அநாதையா ஆக்கிட்டுப் போக இருந்தியே'' என்று சங்கரியின் அப்பா அவளைக் கட்டிக் கொண்டு அழுதார்.

சங்கரி எங்கோ வெறித்தபடி இருந்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

கூட்டம் விலகி வழி விட கம்பெனியின் ஆஃபீஸர்கள் மூன்றுபேர் வந்தார்கள். சங்கரியைப் பார்த்துப் பரிதாபப் பட்டார்கள். ''விஷயம் எல்லாம் கேள்விப்பட்டோம். இந்த அளவுக்கு படிப்பில் ஆர்வமா இருக்கிற ஒரு பெண்ணை நாங்க எல்லோருமா சேர்ந்து படிக்க வைக்கலாம்னு இருக்கோம். எங்களுக்குள்ள வசூல் பண்ணி ஒரு தொகை கொடுக்கலாம்னு இருக்கோம். கூடிய சீக்கிரம் கொண்டு வந்து தர்றோம். தைரியமா இருங்க'' என்று ஆறுதல் சொல்லிவிட்டு நான்கைந்து ஆப்பிள் பழங்களைத் தந்துவிட்டு நகரப் போனார்கள்.

"உங்க நல்லெண்ணத்துக்கு ரொம்ப நன்றி சார்! பண மெல்லாம் வேணாம். நான் மேற்கொண்டு படிக்கிறதா இல்லை" என்றாள் சங்கரி.

"என்னம்மா இப்படிச் சொல்ற? படிக்க முடியலையேன்னு தானே மனம் வெதும்பி தற்கொலை பண்ணிக்கிடற அளவுக்குப் போன?"

"ஐயையோ! எனக்கு வயித்த வலி தாங்க முடியாம இருந்தது. அதனாலதான் கிணத்தில குதிச்சேன்" என்றாள் சங்கரி உறுதியான குரலில்.

விஷயம் கம்பெனியின் உயர் அதிகாரி காதுகளுக்கும் போனது. ஒரு விநாடி இரக்கப்பட்டவராக மறுகணம், "நாம் என்ன செய்ய முடியும்? வீ ஆர் ஹெல்ப்லெஸ். இல்லையா?" என்று அவர் அதிகாரிகளின் கூட்டத்தில் சொல்ல ஆமாம் போட்டார்கள் தத்தமது எதிர்காலங்களில் அக்கறை கொண்ட அவர்கள்.

கலெக்டருக்கும் தெரிய வந்தது. அடடா என்று உள்ளூர அவர் மனம் பதைபதைத்தது. அவருக்கும் பணி மாற்ற உத்தரவு வரப் போகிறது என்கிற செய்தி காற்றில் இருந்ததால் அதற்கு மேல் இது குறித்து நினைக்க அவருக்கு நேரம் இல்லாமல் போனது.

"அந்தப் பொண்ணு சீஃப் மினிஸ்டருக்கு அப்ளை பண்ணி இருக்கலாம்ப்பா" என்று படித்தவர்கள் சிலர் பேசிக் கொண் டார்கள். "இந்த ஊரிலேயே மேல்நிலைப்பள்ளி கொண்டு வர்றதுக்கு நாம் ஏதாவது செய்யணும்" என்று வாதித்துக் கொண் டார்கள் ஒன்றாய்க் கூடி சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கும் போது.

தான் புதிதாகப் பணியில் சேர்ந்த கிராமத்து உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார் ஹீராசந்த்.

"இந்த ஸ்கூல்ல நல்லா படிக்கிற ஏழைப் பசங்க யாரும் இருக்காங்களா சார்?"

# 19. ஒற்றைச் சிலம்பு

படுக்கையில் சாய்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த என் கைகளில் இருந்து அதைப் பிடுங்கிப் பக்கவாட்டில் வைத்த காஞ்சனாவை எரிச்சலுடன் ஏறிட்டேன்.

இவளிடம் இது ஒரு கெட்ட பழக்கம். ஏதாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தாள் என்றால் நான் புத்தகம் படிக்கும் நேரத்தைத்தான் குறி வைப்பாள். அப்போதுதான் அவளுக்கு பேசும் வேகமே வரும். ''வேறு வேலைகளில் இருந்தால் பரவா யில்லை; பொழுது போக்காகத்தானே புஸ்தகம் படிக்கிறீங்க? அதுக்கு என் பேச்சைக் கேளுங்களேன்'' என்று விளக்கம் தருபவளிடம் என்னத்தைப் பேச?

சலிப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தேன். காஞ்சனாவின் முகத்தில் இறுக்கம் மீறிய ஒரு புன்னகை இருந்தது. அது வலிய வரவழைக்கப்பட்ட ஒன்று என்பது அப்பட்டமாகத் தெரிந்தது.

''என்ன விஷயம், சொல்லு''

''கொஞ்சம் சீரியஸான விஷயம். பதற்றப்படாமல் கோபப்படாமல் கேட்கணும்''

''பீடிகை போதும், விஷயத்துக்கு வா''

''பொருள் இழப்பு ஏற்படும் போது இனிமே ஜாக்கிரதையா இருக்கணும்னு பாடம் படிச்சுக்கலாமே ஒழிய எப்போதுமே கலங்கக் கூடாது. அப்போதான் இழந்ததை மீட்க முடியும்ங்கிற தைரியமும் வழியும் கண்ணுக்குப் புலப்படும். இல்லைன்னா

இன்னும் தான் அதிக இழப்புன்னு எங்கப்பா அடிக்கடி சொல்லுவார்.''

எனக்குள் ஏதோ எச்சரிக்கை மணி ஒலிக்கத் தொடங்கியது. சம்திங் ராங். யாரோ ஏதோ தப்பு செய்திருக்கிறார்கள். அடக்க முயன்றாலும் கோபம் வெளிவரத் தயார் நிலைக்கு வந்து நின்றது.

''என்னுடைய கை வளையல் ஒண்ணு தொலைஞ்சு போச்சு''

''வாட்?'' என்றேன் அதிர்ச்சியுடன்.

சேலைக்குள்ளிருந்த கையை வெளியே எடுத்து என்னிடம் நீட்டினாள் அந்தக் கல்வளையலை. ''இதனுடைய ஜோடிதான் காணாமல் போச்சு.''

''என்னடி ரொம்ப சாதாரணமா சொல்ற? எப்படித் தொலைஞ்சது? பீரோவில் இருந்து இது ஏன் வெளியே வந்தது?'' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனேன். என் சீரில்லாத மூச்சு பதற்றத்தைக் காட்டியது.

போனவாரம் ஒரு விசேஷத்துக்குப் போவதற்காக காஞ்சனாவுக்குத் தேவைப்பட்டதால் பாங்க் லாக்கரில் இருந்து எடுத்து வந்தது. இங்கே தான் விசேஷ வீடுகளில் பெண்கள் கூடுவதே அடுத்த பெண்களின் கைகள் கழுத்துகளில் என்னென்ன இருக்கின்றன. முந்தைய விசேஷ வீட்டுக்கு வந்த போது அவள் அணிந்து வந்தவற்றில் ஏதும் கூடி இருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா, குறைந்திருந்தால் என்ன காரணம் சப்பைக் கட்டி சமாளிக்கிறாள் என்று நோட்டம் விடுவதற்குத் தானே? அதற்காகவாவது ஏதேனும் விசேஷ வீடுகளுக்குப் போவ தென்றால் ரயிலுக்கு டிக்கெட் எடுக்கிறோமோ இல்லையோ பாங்க் லாக்கரில் இருக்கும் நகைகளை எடுத்து வருவது தானே வீட்டு ஆண்களின் முக்கிய வேலையாக ஆகி விடுகிறது?

அடுத்த நாட்களில் உடனடியாக பாங்குக்குப் போய் அதனைப் பத்திரப்படுத்தாமல் நான் வேலைப் பளுவால் கட்டிப் போடப்பட்டதற்கு தண்டனையா?

அதனுடைய மதிப்பு இன்றைய தேதிக்கு எவ்வளவு என்று உணரும் போது என்னால் அவளைப் போல் அமைதியாக அந்தச் செய்தியை எதிர்கொள்ள முடியவில்லை.

''கோபப்படாமல் கேளுங்க. உங்க தங்கை மீனா அவளுடைய ஃப்ரெண்ட் கல்யாண ரிஸப்ஷனுக்குப் போறதா சொல்லிக் கேட்டா. இரண்டு வளையல்களையும் எடுத்து நான்தான் போட்டு விட்டேன். அங்கே விசேஷ வீட்டில் எதற்கோ கைகளை சோப்புப் போட்டுக் கழுவுவதற்காகக் கழற்றி வைத்தாளாம். அப்படியே மறந்திட்டாளாம். திரும்பவும் ஞாபகம் வந்து பார்க்கப் போனப்போ ஒண்ணைக் காணோமாம்...''

என் முகத்தில் பிரயத்தனம் மீறி எள்ளும் கொள்ளும் வெடிக்கத் தொடங்கிவிட்டன.

''பொறுப்பில்லாதவள், பெரிய லாடுன்னு நினைப்பு. இப்படியே இவள் தொலைக்கிற விஷயங்களுக்கு அளவே இல்லாமல் போச்சு. என்ன பெரிய ராணின்னு நினைப்பா? பொறுப்பு வேணாம்? இதை ஏன் சாப்பாட்டுக்கு முன்பே சொல்லலை நீ? அவளை உண்டு இல்லைன்னு பண்ணி இருப்பேனே. அதனால் தான் இன்னிக்கு சாயங்காலத்தில் இருந்து அவள் என் கண்களிலேயே படவில்லையா? இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை இரு. அவளை நறுக்குன்னு நாலு வார்த்தை கேட்டுட்டு வந்திடறேன்...அப்போ தான் என் மனம் ஆறும்...'' என்றபடி கோபம் கொப்பளிக்க எழுந்தேன்.

என் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள்.

''சேச்சே! விடுங்க. பாவம் சாயங்காலத்தில் இருந்து ஒரே அழுகை. இந்த மாதிரி காஸ்ட்லியான ஒரு பொருளைத் தொலைச்சிட்டா மனம் என்ன பாடுபடும்னு நினைச்சுப் பாருங்க. அசட்டுப் பொண்ணு, வீட்டுக்கே வராமல் எங்கேயாவது விழுந்து செத்திடலாமான்னு கூட நினைச்சாளாம். நல்லவேளையா எனக்கு ஃபோன் பண்ணி விஷயத்தைச் சொல்லி அழுதா. நான்தான் அவளை ஒரு வழியா தேற்றி சமாதானப்படுத்தி வச்சிருக்கேன்.''

"நீ ஏன் பேச மாட்ட? உங்கப்பன் வீட்டுப் பணமா என்ன?" என்று நான் கேட்கவும் முடியாத விஷயம் இது. அவளுடைய அப்பா எங்கள் கல்யாணத்தின் போது போட்ட கல்வளையல் களில் ஒன்றுதான் தொலைந்து போயிருப்பது. இந்த மூன்று வருடங்களில் என்னால் மேற்கொண்டு எதுவும் அவளுக்குச் செய்து போட முடிந்ததில்லை. அவள் போட்டுக்கொண்டு வந்த வற்றை தொலைக்காமல் அடகு வைக்காமல் காப்பாற்றி இருக் கிறேன் என்கிற அளவில் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். அதுவும் போச்சா? இவளிடம் ஒரு வளையல் இல்லை என்று தெரியவரும் போது என் மாமனார் வீட்டில்தான் என்ன நினைப்பார்கள்? இதை வாங்கி விற்றுச் சாப்பிடும் நிலையில் இருப்பதாக என்னைப்பற்றிய தப்பான அபிப்ராயம் ஏற்பட்டு விடாதா? காஞ்சனா என்னதான் உண்மையைச் சொன்னாலும் புருஷனை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாள் என்பது போல் எண்ணிவிட மாட்டார்களா?

எனக்குள் இன்னும் பூகம்பத்துக்குப் பிந்தைய பொருமல் இருந்தது.

"அவள்தான் கேட்டாள் என்றால் உனக்கு அறிவு வேண்டாமா? ஏன் கொடுத்த?"

"அதைப்பற்றி இப்போ யோசிச்சு என்ன பிரயோசனம்?"

"அவ்வளவு அலட்சியம்." என்றேன் பெருமூச்சு விட்டபடி.

"சரி விடுங்க. யாராவது வேணும்னு தொலைப்பாங்களா? ஏதோ நம்ம கெட்ட நேரம் தொலையணும்னு இருக்குது. அது மீனா மூலமா போயிடுச்சு. அதுக்காக காலையில் அவளைப் பார்த்ததும் திட்டி ஆர்ப்பாட்டம் செஞ்சிடாதீங்க. அண்ணனா லட்சணமா இனியாவது கவனமா இருக்கணும்னு வேணா அட்வைஸ் பண்ணுங்க. ஒண்ணுகிடக்க ஒண்ணு சொல்லி வைக்காதீங்க. திரும்பவும் உடைஞ்சிடப் போறா..."

எனக்கு அவ்வளவு சீக்கிரம் சமாதானம் ஆகவில்லை தான். கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய் சமாச்சாரம். காஞ்சனாவுக்குள்

மட்டும் படபடப்பு இல்லாமலா இருக்கும்? எப்படி இவளால் இவ்வளவு பொறுமையாக தன் பதற்றத்தையும் ஏமாற்றத்தையும் மறைத்துக்கொண்டு என்னை சமாதானப்படுத்த முடிகிறது? இழப்புகளின் நேரடிப் பொருளாதாரத் தாக்கம் தனக்கு இல்லாத தால் ஏற்படும் வேடிக்கை பார்க்கும் குண வெளிப்பாடாக அவள் காட்டிக் கொண்டதில்லை. இப்படிப்பட்ட மனைவி கிடைக்க நான் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்? என் அம்மாவோ தங்கையோ எப்போது தவறு செய்தாலும் நான் கோபப்படும் போதெல்லாம் குறுக்கே விழுந்து சாந்தப்படுத்தும் மனைவி. இத்தனைக்கும் அவர்கள் ஒன்றும் இவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுபவர்களும் இல்லை. இருந்தும் குடும்பம் பிரிந்து விடாமல் இருப்பதற்கு இவள்தான் காரணம். இவள் மட்டும் கொஞ்சம் முயற்சித்திருந்தால் என் முன்கோபத்துக்கு எப்போதோ குடும்பம் இரண்டாகி இருக்கும்.

அவள் அப்படி ஆக்கி இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றியது.

அவள் உறங்கி விட்டாள். என்னுடைய உறக்கம் களவு போயிருந்தது.

மனைவியை நினைத்துப் பெருமைப்படுவது என்பது கூட அவளுடைய ஏதோ மறுக்க இயலாத சிறப்பைப் பார்த்து ஏற்படும் பொறாமையை மறைப்பதற்கான முயற்சிதானோ என்றொரு சிந்தனை வளர்ந்தது.

காரணம் காஞ்சனாவின் பெருந்தன்மை என்னுடைய ஜீரண சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இவளால் எனக்கு வரவுகள் அதிகமா, இழப்புகள் அதிகமா என்று மனதினுள் பட்டிமன்றம் நிகழத் தொடங்கியது. எனக்கு நஷ்டம் ஏற்படுத்துபவர்களை மன்னிக்க வைப்பதனால் இவள் எனக்கு மறைமுகமாக சுமையைத் தானே கூட்டுகிறாள் என்று பட்டது. அம்மாவும் தங்கையும் சுமையா என்கிற கேள்விக்கு மனம் விடைதரத் தெரியாமல் தவித்தது. அப்படியே சுமைதான் என்றாலும்

எங்காவது இறக்கி வைக்க முடிகிற சுமையா அவர்கள்? காஞ்சனாவின் பிரயத்தனம் எல்லாம் அவர்களைச் சுமையாக நினைத்து வாழ்க்கையை கனமாக்கிக் கொள்ளாமல் சுவையாக ஒப்புக்கொண்டு இலகுவாக்கிக் கொள்ள வைப்பதில் இருக்கிறதோ?

அளவுக்கு மீறிய சகிப்புத் தன்மை சாதாரண மனிதப் பிறவிக்கு சாத்தியமா? நான் கேள்விப்பட்டவரைக்கும் கோழைகள், தப்பு செய்பவர்கள் அல்லது இயலாதவர்கள் தான் இயல்பு மறைத்து கௌரவ அங்கீகாரத்துக்காக அந்தப் போர்வை யைப் போர்த்திக் கொண்டு திரிவார்கள்.

இவளை எந்த வகையில் சேர்ப்பது? இவள் உயர்ந்தவள் என்கிற எண்ணம் ஓரளவுக்கு மேல் போனால் என்னையே விழுங்கி விடும் அளவுக்குப் பிரம்மாண்ட ரூபம் எடுத்து விடுமோ என்கிற பயம் என் தூக்கத்தை மொத்தமாக விரட்டி இருக்க அவளுடைய சலனமற்ற தூக்கம் என்னைத் தொந்தரவு செய்தபடி இருந்தது.

மறுநாள் காலை.

அம்மா என்னைத் தனியே இழுத்துப் போனாள்.

''டேய்! நேத்து நடந்தது தெரியுமா?''

குற்ற உணர்வு நிறைந்த முகத்துடன் மீனா அங்கு வந்து நின்றாள்.

''ஆமாம், காஞ்சனா ராத்திரி சொன்னாள். இருந்தாலும் மீனா உனக்கு இவ்வளவு கவனக்குறைவு கூடாது. நேத்து மட்டும் காஞ்சனா கட்டுப்படுத்தலைன்னா உன்னை ஒரு வழி ஆக்கி இருப்பேன்'' என்றேன் கோபத்தை விழுங்க முயற்சித்தபடி.

''ரொம்ப சாரிண்ணா'' என்றாள். அழுது வீங்கியிருந்த முகம் பார்க்க எனக்குள்ளும் கொஞ்சம் இரக்கம் பிறந்தது.

''அண்ணி இஸ் ரியலி கிரேட்'' என்றாள் நன்றி கொப்பளிக்கும் குரலில்.

''ம்க்கும். அவளை நீதான் மெச்சிக்கோ. நேத்து இவள் பயமும் பதற்றமுமாய் வந்து அவளிடம் அழுதிருக்கா. அதைப் பற்றி கொஞ்சமும் அல்ட்டிக்காம, பரவாயில்லை போகட்டும் விடுங்கறாளாம் உன் பெண்டாட்டி..''

நான் அம்மாவை பயத்துடன் பார்த்தேன்.

''எனக்கென்னமோ சந்தேகமா இருக்குடா. அவளோட நகைகளைக் கொஞ்சம் ஆசாரி கிட்ட கொடுத்து செக் பண்ணணும். கவரிங் நகைகளைப் போட்டுட்டு வந்திருப் பாளோ..''

''அம்மா! இப்படியும் எப்படிம்மா உன்னால் யோசிக்க முடியுது? இன்னிக்கு உன் மகள் முழுசா உன் முன்னால் நிக்கறதுக்குக் காரணமே அண்ணிதான். உனக்குள் ஓடுவது மனித இரத்தம் தானா?'' என்று வெடித்தாள் மீனா.

திடுக்கிட்டேன், என் சட்டைப் பையில் இருந்த அந்த ஒற்றை வளையல் கனத்தது.

# 20. தொடரும்

உன்னிமேரி என்கிற அந்த நர்ஸ் தன் ஓய்வறையில் தனிமையில் ஒரு கையில் கடிதம் ஒன்றைப் பிடித்தபடி அழுது கொண்டிருந்த காட்சி என் ஆர்வத்தை அதிகப்படியாகவே தூண்டியிருந்த தற்குப் பல காரணங்கள் இருந்தன.

1. அவள் இளம் பெண்
2. இன்னும் திருமணம் ஆகாதவள்
3. யாரையும் இரண்டாவது முறையாக இங்கிதம் மறந்து திரும்பிப் பார்க்க வைக்கும் அழகு
4. மலையாள ஆக்ஸெண்ட்டுடன் கொஞ்சுகின்ற பிழைத் தமிழ் தவழ்ந்து வரும் இனிய குரல்.
5. தொழில் முறை சுதந்திரத்தால் அவளுடன் இழைந்தபடி வளைய வரும் அந்த பிரைவேட் கிளினிக்கின் டாக்டர் திருமணம் ஆகாதவர் என்று நேற்று அறியக் கிடைத்த தகவல்.

கடைசிக் காரணம் என்னுள் ஏற்படுத்திய உள்ளார்ந்த பொறாமை உணர்வுக்கு எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்பது எனக்குத் தெரிந்தாலும் தவிர்க்க இயலவில்லை. கானல் நீர் மாயை என்று தெரிந்தவர்களுக்கும் அது தெரியத்தானே செய்கிறது?

அவள் அழுது கொண்டிருந்தது கூட நாசூக்காக இருந்தது. லேசாக உடல் குலுங்குவதும் அவள் கர்ச்சீப்பால் முகத்தை மூடி

சமநிலைப்பட முயல்வதும் சில விநாடிகள் கழித்து மீண்டும் கடிதத்தைப் படிக்க முனைவதும் மீண்டும் உதடு கடித்து வானம் பார்ப்பதுமான மானரிஸம் தொடர்வதைப் பார்த்தபடி கொஞ்சம் அந்த அறை வாசலிலேயே நின்றேன். ஒருக்களித்து உட்கார்ந்திருந்த நிலையில் அவள் என்னைப் பார்க்கவில்லை.

நான் தொண்டையைச் செருமி என் வரவை வெளிப் படுத்தி இருக்கலாம். கதவை லேசாகத் தட்டி இருக்கலாம். எக்ஸ்க்யூஸ் மீ என்று குரல் எழுப்பி இருக்கலாம். அல்லது அவளுடைய தனிமையைக் கலைக்க விரும்பாத தன்மையில் அறைக்குத் திரும்பி இருக்கலாம்.

இயல்பாக நடப்பது போல் அவள் அருகே நடந்தேன். பின்புறமாகவாவது அந்தக் கடிதத்தைப் பார்த்துவிடும் ஆவல் என்னுள் நிரம்பி இருந்தது. அப்படி ஒன்றும் முழுதும் படித்துவிட முடியாதுதான். ஆனால் அவள் என் வரவை உணர்ந்து சுதாரித்து கடிதத்தை மறைக்க முயலும் முன் ஓரிரு வார்த்தைகளோ வாக்கியங்களோ படிக்க முடிந்தால் போதாதா? அதை வைத்து முழு விவரத்தையும் ஓரளவு ஊகித்து விட முடியாதா?

நான் பக்கத்தில் போய் நிற்கும் வரை அவள் முகத்தி லிருந்து கர்ச்சீப்பை எடுக்காதது எனக்கு சௌகரியமாகப் போனது. முழு ஆவலுடன் என் பார்வையை அந்தக் கடிதத்தின் மீது செலுத்த அதில் இருந்த மலையாள எழுத்துக்கள் என் கண் களை அறைந்தன. என் ஏமாற்றத்தை விநாடி நேரத்தில் மறைத்துக் கொண்டு அப்படியே பின்வாங்கி அறைக்குத் திரும்பினேன்.

''என்னங்க?'' என்றாள் கனகா. ''உன்னிமேரி ரூமில் இல்லையா?'' என்று கேட்டாள்.

''ம் இருக்கா. ஆனா டிஸ்டர்ப் பண்ண விரும்பாம வந்திட்டேன்''

''ஏன்? என்னாச்சு?''

''ஏதோ லெட்டரைக் கையில் வச்சிட்டு அழுதிட்டிருக்கா'' என்றேன்.

கனகாவின் முகத்தில் வியப்பு விரிந்தது.

''என்ன சொல்றீங்க?'' என்று கேட்டபடியே ஒருக்களித்துச் சாய்ந்து எழுந்து உட்கார முயன்றாள்.

''இப்போ எதுக்கு எழுந்திருக்கற?''

''எப்படியும் இப்போ கீட்டனோவ் இன்ஜெக்ஷன் போட்டாகணும். அதோட இந்த டிராக்ஷன் பெல்ட் வேற நழுவி நழுவிக் கீழேயே வந்திடுது. சரி பண்ணணும். பார்த்திட்டே இருக்கீங்களே. கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்களேன்'' என்றாள் குரலில் லேசாக எரிச்சல் காட்டி.

உதவி செய்து அவளை ஆசுவாசமாக சாய்ந்து கொள்ள வைத்தேன்.

''ஏன் அழுதிட்டிருக்கான்னு கேட்டீங்களா?'' என்றாள் ஆர்வத்தை அடக்க முடியாமல்.

''நான் அவளைப் பார்த்தது மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை. வந்து விட்டேன். எப்படிக் கேட்க முடியும்? அதோடு எனக்கு அவள் அழுதால் என்ன, சிரித்தால் என்ன?'' என்றேன் குரலில் அலட்சியம் காட்டி.

''என்னஙக, இவ்வளவு சாதாரணமா சொல்றீங்க? உன்னி மேரி எவ்ளோ நல்லவ. இந்தப் பத்துநாளில் எவ்ளோ உதவியா இருந்து பழகியிருக்கா...''

''அது அஸ் எ நர்ஸ் அவளோட டூட்டி. அவளைப் பொறுத்தவரைக்கும் நீ இங்கே ஒரு பேஷண்ட். நான் உன்னுடைய கேர் டேக்கர். இந்த ஆஸ்பத்திரிக்கு பணம் கட்டி நாம் இங்கே இருக்கிற வரைக்கும் நம்மகிட்ட புன்னகைத்தமாதிரி நடிக்கணும்னு தான் அவளுக்கு சம்பளமே தர்றாங்க தெரியுதா?''

''சே! ஆம்பளைங்களுக்கு எப்படித்தான் இவ்வளவு ரஃப் அண்ட டஃப்பா நினைக்க முடியுதோ. அவள் காட்டுகின்ற உண்மையான அன்பை இப்படி வியாபாரப் பொருள் மாதிரிப் பேசறீங்களே.''

நான் மேற்கொண்டு அந்த விஷயத்தில் அக்கறை இல்லாதவனாகக் காட்டிக் கொள்வதற்காக அருகே இருந்த புத்தகத்தை எடுத்துப் பிரித்துக் கொண்டேன். மனதிற்குள் கனகா தொடர்ந்து பேசினால் நல்லது என்று தோன்றியது. அவளும் நகம் கடித்தபடி அமைதியில் ஆழ்ந்து விட என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை.

''என்ன யோசனை?'' என்று தூண்டில் போட்டுப் பார்த்தேன்.

''ஒண்ணுமில்லை'' என்றாள்.

நான் விடுவதாக இல்லை, ''நீ பாட்டுக்கு அவளிடம் அழுதிட்டிருந்தியாமே, என் வீட்டுக்காரர் சொன்னார்னு எதை யாவது சொல்லி வைக்காதே'' என்றேன், சாதாரணமாகச் சொல்வது போன்ற குரலில். ''ஏற்கெனவே அவள் என்னை ஏதோ பேயைப் பார்க்கறது மாதிரி வெறுப்பா பாக்கறா. இதையும் சொன்னா ஏதோ நான் அவள் மேல இன்டரஸ்ட் வச்சு அவளையே மோப்பம் பிடிச்சிட்டு அலையறேன்னு நினைப் பாயிடப் போகுது அவளுக்கு.''

''சேச்சே!'' என்று மட்டும் சொன்னாள் கனகா.

'அவ ஒண்ணும் உங்களைப் பேயைப் பார்க்கற மாதிரிப் பார்க்கலை. இன்ஃபாக்ட் உங்களைப் பற்றி எவ்வளவு புகழ்ந்து பேசுவா தெரியுமா?' என்கிற ரீதியில் கனகா ஏதாவது சொல்வாள் என்கிற என் எதிர்பார்ப்பில் மண்.

நானும் இந்தப் பத்து நாட்களாகப் பார்க்கிறேன். பொது வாகவே எவருடனும் இயல்பாகப் பழகிவிடும் கனகா,

எப்போதும் நட்பு பூர்வமாக புன்னகையுடன் வளைய வரும் உன்னிமேரியுடன் பழகியது ஒரு பெரிய விஷயமே இல்லை. அவளுக்கும் இவளைப் பிடித்திருக்க வேண்டும். ஏனென்றால் அவள் மற்ற அறைகளில் இருப்பதை விடவும் ஏன் தனது ஓய்வறையில் இருப்பதை விடவும்கூட எங்கள் அறையில் இருக்கும் நேரம் தான் அதிகம் என்று அறிய வந்தபோது காரணம் புரியாத ஒரு குறுகுறுப்பு உள்ளுக்குள் ஓடத்தான் செய்தது. ஆனால் நான் இருக்கும் போது அவள் அங்கே வருவதைத் தவிர்ப்பதாகவே தெரிந்தது. நான் அறைக்குள் நுழைந்த கணமே அதுவரை ஏதாவது சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாலும் சட் டென்று உறைந்து ''ஞான் அப்புறம் வரும்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பி விடுவாள்.

ஓரிரு கட்டங்களில் கனகாவே கூட, ''நீங்க கொஞ்சம் லேட்டா வந்திருக்கக் கூடாதா? நல்லா பேசிட்டிருந்தோம்'' என்று கூடச் சலித்திருக்கிறாள்.

''அப்படி என்னதான் பேசினீர்கள்?'' என்று அசுவாரஸிய மாகக் கேட்பது போல் கேட்பேன்.

''அதெதுக்கு உங்களுக்கு? கேட்டுவிட்டுக் கிண்டல் செய்வீர்கள்'' என்று முடித்துக் கொள்வாள்.

ஒருமுறை கூட அவர்கள் என்னைப்பற்றிப் பேசியதாக கனகா சொன்னது இல்லை. இரண்டு பெண்கள் நாள் கணக்காகப் பேசிக் கொண்டிருக்கும் போது நடுநடுவே வந்து போகும் ஓர் ஆணைப்பற்றிப் பேசாமல் இருப்பது சாத்தியமா? அதுவும் நான் பேஷண்ட்டின் கணவன். அவள் மீது மிகுந்த அக்கறையும் அன்பும் பாசமும் வைத்துத் தாங்குபவன். அந்நியப் பெண்களைப் பார்ப்பதையும் அவர்களுடன் பேசுவதையும் அடியோடு தவிர்ப் பவன் என்கிற இமேஜ் ஏற்படும் அளவு நடந்து கொண்டும் நர்ஸ் என்கிற முறையில் கூட உன்னிமேரி என்னைப்பற்றி ஏதும் பேசலாமா இருப்பாள்? குறைந்த பட்சம், 'ஏங்க உங்க வீட்டுக் காரர் இப்படி உர்ரென்று இருக்கார்? உங்க கூடவாவது சிரிச்சுப்

பேசுவாரா?' என்கிற அளவுக்காவது உரையாடல் ஏற்படாமலா இருந்திருக்கும்?

கனகா வேண்டுமென்றே மறைக்கிறாளோ? அது சாத்திய மில்லை. ஏனென்றால் கனகா ஓர் ஓட்டை வாய். யார் என்ன சொன்னாலும் என்னிடம் ஒப்பிக்காவிட்டால் தூக்கம் வராது அவளுக்கு. இந்த உன்னிமேரிதான் அழுத்தம் என்று பட்டது.

ஏதோ என்னைப்பற்றிய எண்ணம் அவளுக்கு ஏற்பட்டி ருக்க வேண்டும். முதல் நாள் விழியின் பாவை விரிய நான் பார்த்த பார்வையின் உள்நோக்கம் வரை அவளுக்குப் புரிந்து விட்டதோ என்னவோ, நர்ஸ் என்கிற முறையில் எத்தனை பார்வைகளைச் சந்தித்திருப்பாள்!

மறுநாள் அறையினுள் நான் நுழைந்த போது கனகா மட்டும்தான் இருந்தாள்.

''ஏன் இவ்வளவு நேரம்?'' என்று செல்லமாகக் கோபித்தாள்.

''அது சரி. உனக்குக் கூடப் பேச யாராவது கிடைத்து விட்டால் ஏன் சீக்கிரம் வந்தீங்கன்னு விரட்டுவ. இல்லைன்னா இப்படியும் கேட்ப...'' என்றேன். என் வாயால் உன்னிமேரியின் பெயரைக் கூட நான் சொல்ல மாட்டேனாம்.

''இன்னிக்கு அவள்கிட்ட நேத்திக்கு ஏன் டல்லா இருந்தேன்னு கேட்டேன். கொஞ்சம் அழுத மாதிரி கூட இருந்த தேன்னு கேட்டேன். அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லையேன்னு மறுத்திட்டா.''

''அவள் ஒண்ணுமே சொல்லலியா? உனக்கு சரியா கேட்கத் தெரியலை'' என்றேன் ஆர்வத்தை மறைத்தபடி.

''எவ்வளவோ தூண்டித் துருவிக் கேட்டுப் பார்த்தேன். ஒண்ணுமே இல்லை, சாதாரணமாகத்தான் இருக்கேன்னு சொல் லிட்டா...''

''மகா அழுத்தக்காரி!'' என்றேன் அழுத்தமாக.

''அப்ப்டில்லாம் சொல்லாதீங்க. பாவம் அவளுக்கு என்ன சோகமோ'' என்று பரிதாபப்பட்டாள் கனகா.

''கல்யாணம் ஆகாத பெண்ணுக்கு தனியா அழற மாதிரி சோகம்னு ஏதாவது இருக்க முடியும்னா அது ஒண்ணுதான்'' என்றேன் சஸ்பென்ஸ் வைத்தவனாக.

''என்னங்க?''

''காதல் தோல்வி''

கனகா என்னை வெறுப்பும் ஆச்சரியமும் நம்ப முடியாத வியப்புமாகப் பார்த்தாள். நான் அதோடு விடுவதாக இல்லை.

உன்னிமேரி விஷயம் வெறும் காதல் அளவில் மட்டும் இருக்க முடியும் என்று என்னால் நம்பமுடியவில்லை. அதற்கும் மேல் சில படிகள் முன்னேறி இருக்க வேண்டும். சொந்த ஊரில் யாராவது காதலன் இருந்திருக்கலாம். தானும் சம்பாதிக்கிறோம் என்கிற சுதந்திரம் தந்த தைரியத்தில் இவளும் கொஞ்சம் வரம்பு மீறி இருக்கலாம். விஷயம் தீவிரமாகி இருக்கலாம். இப்போது குடும்ப சூழலையோ எதையோ காரணம் காட்டி அவன் மறுப்பு எழுதி இருக்கலாம்.

கல்யாணம் ஆகாத பெண் தன் மனதில் யாராவது ஓர் ஆணுக்கு இடம் கொடுத்தால் மட்டுமே அவளுடைய கலகலப்பு மறைய இயலும். குறிப்பாக எந்த ஆணையும் நினைக்காத பெண் எல்லா ஆண்களைப் பற்றியும் திறந்த மனதுடன் விவாதிப்பாள். சக பெண் தோழிகளுடன் ஆண்களைப் பற்றி அதிகம் பேசுவாள். திருமணமான பெண்களிடம் அவர்களுடைய கணவர்களைப் பற்றி நிறையக் கேட்பாள். சொந்தக் கருத்துக்களையும் கேலி கிண்டல் கலந்து பேசிக் கொள்வாள்.

இந்தக் குணாதிசயங்களில் உன்னிமேரிக்கு எதுவுமே இல்லை என்றால் என்ன அர்த்தம்? அவளுக்கு ஆண் என்கிற

விஷயம் இன்னும் ஊகங்களுக்கு இடம் தந்து கொண்டிருக்கும் த்ரில்லான விஷயம் அல்ல என்பதுதானே?

''உன்னிடம் சொல்ல வேண்டாம்னு நினைச்சேன். நானும் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்த நாளா அரசல் புரசலா காதில் விழுந்த வற்றைக் கவனித்துக் கொண்டுதானே இருக்கிறேன்?'' என்றேன் இடைச் செருகலாக. என்னுடைய வாதங்கள் உன்னிமேரி சார்பில் கனகா எழுப்பிய குறுக்குக் கேள்விகளுக்குப் போதுமான விடை தந்தன. இருந்தும் முழுக்க ஒப்புக்கொள்ள முடியாத ஒரு மலைப்புடன் மௌனமானாள்.

எனக்குள் ஒருவித அரிப்பு குணமான சுகம்.

அடுத்த நாள் கனகா என்னிடம் வெடித்துத் தள்ளி விட்டாள். ''நீங்களும் ஒரு சராசரி ஆம்பளைதான்னு நிரூபிச்சிட்டீங்களே. என் புத்தியைச் செருப்பால அடிக்கணும். நானும்தானே உங்க பேச்சுக்கு ஆமாம் போட்டு நம்பினேன்? கல்யாணம் ஆகாத ஒரு பொண்ணு அழுதா அதுக்கு ஒரே காரணம்தான் இருக்குமா? ஆம்பளைங்களால பொம்பளைங் களைப்பற்றி நல்லபடியா நினைக்கவே முடியாதா? பாவம் இன்னிக்குத்தான் அவள் எல்லாம் சொல்லி அழுதா. கிராமத்தில இருக்கிற அவள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். பொறுப் பில்லாத அண்ணன் துபாய்க்கு ஓடிப்போயிட்டானாம். குடும்பக் கஷ்டங்களைச் சொல்லி வருத்தப்பட்டா. அவங்கம்மா எழுதிய கடிதத்தைப் பார்த்துத்தான் அன்னிக்கு அழுதிட்டிருந்தாளாம்...''

அவள் சொல்லச் சொல்ல எனக்குள் கூசியது. பதில் பேச முடியாமல் கொஞ்ச நேரம் நின்றேன். சிகரெட் பிடிக்க வேண்டும் போல் தோன்றியது. இதோ வருகிறேன் என்று வெளியே கிளம்பினேன்.

என் ஊகங்கள் பொய்த்துவிட்டனவே என்கிற தோல்வி உணர்வு, என் மனைவிக்கு என் வார்த்தைகளின் மீது இதுநாள் வரை இருந்து வந்த நம்பகத் தன்மையைப் பொடியாக்கி

விட்டாளே இந்த உன்னிமேரி என்கிற ஆத்திரமாகப் பரிணாம வளர்ச்சி உற்றது.

சிகரெட்டை முடித்துவிட்டு மீண்டும் வரும்போது ரிஸப்ஷனில் உன்னிமேரி யாரிடமோ புதன் வியாழன் இரண்டு நாளும் வரமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருப்பது கேட்டது.

இதையே சாக்காக வைத்துக்கொண்டு கனகாவிடம் 'உன்னிமேரி அவள் அம்மா விஷயமாகச் சொன்னதெல்லாம் பொய். அவளுக்கு அம்மாவே கிடையாதாம். அவளுக்கு வர்ற புதன் கிழமை வேற ஒரு நர்ஸிங் ஹோமில் அபார்ஷன். வேணும்னா பாரு ரெண்டு நாளைக்கு வரமாட்டா' என்று கதை கட்டிப் பேசலாமா என்கிற எண்ணத்தை அசைபோட்டபடி படியேறினேன்.

உங்களுக்கு எப்படிங்க இதெல்லாம் தெரியுது என்று கனகா கேட்டால், இங்கே வந்த அன்னிக்கே அவளைப் பத்தின எல்லா விவரமும் எனக்குத் தெரியுங்கறது அவளுக்கும் தெரிஞ்சதால தான் அவ என்னிடம் முகம் கொடுத்தே பேசறதில்லை புரிஞ்சுதா? என்கிற அஸ்திரத்தை எய்ய வேண்டியதுதான். கனகா என்னை நம்புகிறாளோ இல்லையோ இந்தக் காலத்தில் யாரையுமே நம்ப முடியறதில்லைப்பா என்கிற அளவுக்கு அவள் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்திவிட்டாலே அது எனக்கு வெற்றிதான் என்று தோன்றியது.

# 21. யுவராஜா பட்டாபிஷேகம்

அப்பாவிடமிருந்து ஆஃபீஸுக்கு ஃபோன் வந்தது.

''ஜோதி வந்திருக்காடா'' என்றார்.

நான் வேலையில் சேர்ந்து இரண்டு நாள் கூட ஆகவில்லை. அதற்குள் எப்படித்தான் மூக்கில் வேர்க்குமோ!

''வழக்கம் போல் பணத்தேவை தானா?'' என்று எரிச்சல் பட்டேன்.

அப்பா மறுமுனையில் சிரிப்பது கேட்டது.

''எவ்வளவாம்?''

''ஐநூறு''

என் சட்டைப் பையில் இருநூறு இருந்தது. இந்த மாசம் முழுமைக்குமான பேருந்து மற்றும் காஃபிச் செலவுக்கு என்று வைத்திருப்பது.

''நீ சிரமப்பட வேண்டாம். நான் நாயக்கருக்கு ஃபோன் பண்ணிச் சொல்லி இருக்கேன். அவர் வீட்டில் இல்லை. சாயங்காலத்துக்குள் வந்து விடுவாராம். நீ ஆஃபீஸ் முடிந்து வரும்போது அவர் வீட்டுப் பக்கம் போய் வா. அவர் தருவார்.''

''அசிங்கமா இருக்குப்பா. எனக்கு வேலை கிடைத்த பிறகும் கூட இப்படிப் போய் நிற்பது...''

''வேற வழி இருந்தா சொல்லு'' என்று சட்டென்று பணிந்தார் அப்பா. இதுதான் அப்பா. இப்படிச் செய் என்று

எப்போதும் கட்டளை இட்டது கிடையாது. இதைத்தவிர வேறு வழி இல்லை பார் என்று விளக்கி சம்மதிக்க வைத்து செய்ய வைப்பது அவர் வழக்கம். இப்படிப்பட்டவரிடம் என்ன சொல்வது?

''என்ன பதிலே காணோம்''

''இன்னும் ஒரு வழி இருக்கு. நீங்க கேட்க மாட்டீங்க''

''சொல்லுடா''

''இப்போ பணமில்லைன்னு ஜோதியிடம் நேரடியா சொல்லி கை விரிச்சு அனுப்பிடலாம்.''

மறுமுனையில் மீண்டும் அப்பாவின் சிரிப்பு.

ஃபோனைக் கீழே வைத்தேன்.

அதன் பிறகு அலுவலக வேலையில் மனம் ஒன்ற மறுத்தது.

அக்காவுக்கு உதவுவது குறித்த அப்பாவின் கொள்கை களின் மீது எனக்கு அபிப்ராய பேதம் நிறையவே உண்டு.

பெண்ணை அதிக அளவில் செல்லம் கொடுத்து வளர்ப்பது. ஆண்பிள்ளைகளின் முன்னிலையில் அப்பாவைப் பொறுத்தவரையில் அவளுக்குத்தான் முக்கியத்துவம் என்கிற நிலையைப் பிறந்த வீட்டில் ஏற்படுத்துவது, படிக்க வைப்பது, படிப்பு ஏறவில்லை என்றாலும்கூட கண்டிக்காமல் இருப்பது, கடனை உடனை வாங்கி வரதட்சணை தந்து கல்யாணம் செய்து வைப்பது, அது தொடர்பான ஓராண்டு சடங்கு சங்கதிகளைச் சக்திக்கு மீறிச் செய்வது என்று எல்லாம் ஆன பிறகும்கூட நினைப்பெல்லாம் அந்த பந்தத்திலேயே வைத்துக் கொண்டிருப்பது இந்த அப்பாக்களுக்கு எந்த வகையில்தான் நியாயமாகப் படுமோ!

எனக்கென்னவோ இந்த அக்கா தம்பி உடன்பிறப்பு உறவுகள் எல்லாம் சினிமாத்தனமாகத் தோன்றும். பிறப்புக்கு

அப்பாவும் அம்மாவும் நேரடியாகத் தொடர்பு உடையவர்கள். ஓ.கே. எங்கிருந்து வருகிறது இந்த அக்கா தம்பி உறவு எல்லாம்? ஜஸ்ட் ஒரே கருப்பையில் முன்னே பின்னே தங்கி இருந்ததாலும் ஒரே வீட்டில் வசிப்பதாலும் ஒரே தாய்தந்தையரை உடையதாலும் இதனை ஓர் ஆயுள் பந்தமாக ஏன் திணித்து விட்டார்கள்? ஒரே தொகையில் டிக்கெட், ஒரே பெட்டியில் பயணம், ஒரே ஆஸ்டலில் படுக்கை, ஒரே மெஸ்ஸில் சாப்பாடு என்கிற விஷயங்கள் எல்லாம் ஏற்படுத்தாத எந்த நெருக்கத்தை இந்த உடன்பிறப்பு விஷயம் ஏற்படுத்துகிறது என்று அடிக்கடி தோன்றும்.

அதுவும் மற்ற வீடுகளில் எப்படியோ, எங்க வீட்டு ஜோதி இருக்காளே, அப்பப்பா, சுயநலத்தின் மொத்த வடிவம். சின்ன வயதில் அப்பா கடையில் இருந்து வாங்கி வரும் அதிரசத்தில் இருந்து எல்லாவற்றிலும் 'லயன்ஸ் ஷேர்' தனதாக்கிக் கொள்ளும் சாமர்த்தியம் படைத்தவள். அதற்காக சிரிப்பு, அழுகை, அனு தாபக் கிளர்வு, கெஞ்சல், கொஞ்சல் என்று பல்வேறு வகையான ஆயுதங்களை இடமறிந்து காலமறிந்து பிரயோகிப்பதில் கெட்டிக் காரி. இந்த விஷயத்தில் அவள் இப்படித்தான் ஆரம்பித்து நம்மை எதிர்கொள்ளுவாள் என்று யூகித்து அதற்குத் தக்கவாறு நான் தயாராகிப் போகும்போது அவள் உபயோகிக்கும் ஆயுதம் முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கும். நான் மலைத்து நிற்கும் மூணே முக்கால் நாழிகையில் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டுவிட்டு மீண்டும் என்னை விரக்திப் பிடிக்குள் தள்ளி விடுவது அவள் வழக்கம்.

நிறைய அனுபவித்து விட்டேன். என்னுடைய ஏமாற்றங் களுக்கெல்லாம் என் விவரங்கெட்டதனம்தான் முழுக்காரணம் என்று ஒப்புக்கொள்ள சுய கௌரவம் இடம் கொடுப்பதில்லை. அப்பா எப்போதும் எனக்கு எதிர்க்கட்சிதான் என்கிற குற்றச் சாட்டினை என் மன ரணங்களுக்கு ஆறுதல் மருந்தாக ஆக்கிக் கொண்டு என் இயலாமைகளை மறைத்துக் கொள்வதில் சுகம் கிடைத்தது.

பிறகான நாட்களில் நான் கூடிய வரையில் ஜோதியைத் தவிர்த்தே வந்தேன். அதுவும் குறிப்பாக பண விஷயத்தில் அவள் அப்பாவை நன்கு மொட்டை அடிக்கிறாள் என்று தெரிய வந்த பிறகு எனக்குள் பொறாமை கூட கொஞ்சமாக வளர ஆரம்பித்திருந்தது.

இது குறித்துப் பேச்செடுத்தாலே அப்பாவிடமிருந்து ஒரே பதில்தான் வரும். 'தரகர் பேச்சினை முழுக்க நம்பி சரியாக விசாரிக்காமல் தவறான இடத்தில் அவளைத் தள்ளிவிடாத குறையாகக் கல்யாணம் முடித்து அனுப்பிய தவறினைக் கொஞ்சமாவது சரி செய்ய இதெல்லாம் அவசியம்டா.'

அப்பா பயந்து சொல்கிற அளவுக்கு மாப்பிள்ளையின் பக்கம் குறைபாடு கிடையாது என்றுதான் எனக்குப் படுகிறது. பொருளாதார ரீதியில் உறவினர்களிடம் நிறைய ஏமாந்து போன குடும்பம் அவருடையது. அவர் நல்லவர். அவருடைய குடும்பத்தாரும் பணத்தை இழந்ததாலேயே குணத்தைத் தக்க வைத்துக் கொண்டவர்கள்.

இருந்தும் அடிக்கடி ஏதாவது காரணம் காட்டிப் பணம் கேட்டு வந்து விடுகிறாள் ஜோதி. அப்பா ரிடையர் ஆனவர் ஆச்சே. பரம்பரை சொத்து என்று எதுவும் இல்லாத குடும்பம் ஆச்சே, தம்பிக்கும் இன்னும் வேலை கிடைக்கவில்லையே, அம்மாவும் சீக்குக்காரியாச்சே, என்ன செய்வார்கள் என்கிற கவலை கொஞ்சமும் அவளிடம் இருப்பதாக எனக்குப் பட்டதில்லை. அவள் இது குறித்தெல்லாம் அனுதாபத்துடன் விசாரிப்பதாக அப்பாவும் அம்மாவும் என்னிடம் அவள் வந்து போன பிறகு சொல்வது சால்ஜாப்பாகத் தோன்றும். வந்த வகைக்கு ஏதாவது சொல்லி இருப்பதைப் பறித்துக் கொண்டோ அல்லது அப்பாவை யாரிடமிருந்தாவது வாங்கித் தரவைத்தோ பணம் வாங்காமல் போனதில்லை அவள். இந்தக் கடன்களை அப்பா எப்படி அடைப்பார். அவருக்கு வேறு பணவரவுக்கு என்ன வாய்ப்பு இருக்கிறது. எல்லாம் நாளை தம்பியின்

தலைமீதுதானே விடியும் என்றெல்லாம் துளிக்கூட யோசிக்க மாட்டாள்.

கல்லூரியில் அவமானப்படாமல் கட்ட இருந்த டர்ம் ஃபீஸ் பணம், நெடுங்காலமாகக் கனவு கண்டு நைக் ஷூ வாங்குவதற்குத் தயாராகச் சேர்த்து வைத்திருந்த பணம், கம்ப்யூட்டர் வகுப்பிற்குக் கடைசித் தவணைப்பணம், சுற்றுலா போவதற்குக் கட்டவிருந்த பணம், பிறந்தநாளுக்கு புதிய உடை வாங்க வைத்திருந்த பணம் என்று நான் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் பறி கொடுத்தவை அநேகம்.

எனக்கு இருக்கும் வயிற்றெரிச்சல் ஒரு பக்கம் இருக்க என் பாணியில் அப்பாவோ அம்மாவோ இது குறித்தெல்லாம் துளிக்கூட சிந்திப்பதாகத் தோன்றாதது வியப்பளித்தது.

'உனக்கு இதெல்லாம் புரிகிற பக்குவம் வரலைடா.'

''சும்மா பெரிய வார்த்தைகளெல்லாம் பேசாதீங்கப்பா. அவள் நடிக்கிறா. மாப்பிள்ளை நல்லாத்தானே இருக்கார்? அவளை சந்தோஷமாத்தானே வச்சுக்கறார்?''

'அவள் இல்லைன்னு சொல்லலையே.'

'அப்புறமும் எதுக்கு பணம் பணம்னு இங்கே வந்து கழுத்தறுக்கறா?'

'அவள் பணம் கேட்டு இங்கே வரலைடா. வந்த இடத்திலிருந்து அவளை சும்மா அனுப்ப மனமில்லாமல் நாம் பணம் தந்து அனுப்பறோம்.'

'அதுல சுகங்கண்டுதான் அடிக்கடி வர்றாள்னு உங்களுக்கு ஏன் புரியமாட்டேங்குது?'

'மடையா! ஒரு பொண்ணு கல்யாணத்துக்கு அப்புறமும் அடிக்கடி பிறந்த வீட்டையே நினைக்கறா, அங்கே ஓடி ஓடி வர்றாள்னா அவள் போன இடத்தில் முழு நிறைவு அடையலைன்னு அர்த்தம். ஏதோ ஒரு குறை இருக்குன்னு அர்த்தம்.'

'அவ சொன்னாளா?'

'எந்தப் பொண்ணும் புருஷன் வீட்டு மானம் போயிடக் கூடாதேங்கறதுக்காக குறிப்பா புருஷனுக்கு தன் பிறந்த வீட்டில் மரியாதை குறைஞ்சிடக் கூடாதேங்கறதுக்காக அதை விவரிச்சு அவளோட அம்மாகிட்ட கூடச் சொல்ல மாட்டா. அவளுடைய நடை உடை பாவனைகளில் நாமே தெரிஞ்சு, புரிஞ்சு நடந்துக்கணும். பொண்ணுக்குக் குடுப்பது எல்லாம் கணக்குப் பார்க்கவே கூடாத விஷயம்டா.'

'ஏன் பேச மாட்டேங்க, யார் அப்பன் வீட்டுப் பணம்?' என்றோ' 'சம்பாதிச்சுப் பார்த்ததாலல்லவா தெரியும்?' என்றோ சொல்லிக்காட்ட முடியாதபடி என் நிலைமை இருந்த நாட்கள்!

சரி, நமக்காக இந்த அளவுக்குத் தன் தேவைகளைத் தியாகம் செய்யறானே என்று தம்பியாகிய என்னிடம் மரியாதை காட்ட வேண்டாம்; ஒரு பரிவு, அன்பாய் ஒரு பார்வை...ம்ஹூம், நான் உன்னிடம் கேட்கவில்லை, நீயும் எனக்காகச் செய்யவில்லை என்பது போன்ற அலட்சியம்!

அவள் மதிப்பது அப்பாவை மட்டும்தான். இவர் போதும் எனக்கு, இவர் மூலம்தான் என் தேவைகள் பூர்த்தியாகிறது என்கிற இறுமாப்பு!

சே! என்ன பெண் இவள்!

யோசிக்க யோசிக்க பற்றிக் கொண்டு வந்தது.

எல்லா வன்மமும் இன்று ஒன்று கூடின.

இன்று அவளுக்கு இந்தப் பணம் கிடைக்கக் கூடாது. நாயக்கர் வீட்டுக்குப் போய் வாங்கிப் போகக் கூடாது. பணம் என்பது ஜஸ்ட் அப்பா முன்பு நின்று சொடுக்குப் போட்டால் கிடைக்கிற விஷயமல்ல, அதற்காக சில காத்திருப்புகள் ஏமாற்றங்கள் எல்லாம் எதிர் கொள்ளத் தயாராக வேண்டியதன் அவசியத்தை அவளுக்கு உணர்த்தியே ஆக வேண்டும்.

இந்தத் தீர்மானத்துக்கு அப்புறம் தெளிவாக உணர்ந்தேன். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு வேலையில் கூட மும்முரம் கூடி இருந்தது.

மாலை நான் வீட்டுக்குக் கிளம்ப இருக்கையில் நாயக்கரே ஆஃபீஸுக்கு வந்து விட்டார்.

'அப்பா வீட்டுக்கு ஃபோன் செய்திருந்தார்களாம். ரொம்ப அவசியம் என்றால் ஒழிய என்னைத் தேடுபவரில்லை அவர்' என்று கூறிவிட்டு அப்பாவுக்கும் அவருக்குமான நீண்டகால நட்பு குறித்து நான் ஏற்கனவே அறிந்த விவரத் தொகுப்புகளோடு ஒரு பாட்டம் பேசிவிட்டு ஐநூறு ரூபாய் பணத்தையும் தந்துவிட்டுச் சென்றார்.

சே! ஜோதி யோகக்காரிதான் என்கிற எண்ணம் தவிர்க்க இயலாமல் வந்தது.

ஸோ வாட்? இன்னும் கூட நான் நாயக்கரைப் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளாமல் இருக்க முடியுமே! நிச்சயமாக இந்தப் பணத்தை ஜோதி இன்று பெறக்கூடாது.

வீட்டு வாசலில் ஜோதியின் செருப்பு தையல்களுடன் கிடந்தது. இங்கே வரும்போது அணிந்து வருவதற்கென்றே பிரத்தியேகமாகப் பிய்த்து தையல் போட்டிருப்பாள். கைகாரி!

முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு அழைப்பு மணியை அழுத்தினேன்.

அம்மா தான் திறந்தாள். இவளை எங்கே காணோம்?

உள்ளே நுழைந்து கைப்பையை இடது கை வாக்கில் கிடாசினேன். அப்பா ஹாலில் ஈஸிசேரில் சாய்ந்திருந்தார். அடுக்களையிலிருந்து காஃபித் தம்ளருடன் வெளிப்பட்டாள் ஜோதி.

'என்னடா தம்பி! எப்படி இருக்கற? ஆஃபீஸ் வேலை எல்லாம் எப்படி இருக்கு?' என்று கேட்டாள் இதமாக. ''உனக்கு

இந்த வேலை கிடைச்சா மாரியம்மனுக்குப் பொங்கல் விடறதா வேண்டியிருந்தேண்டா. ஆத்தா என்னைக் கை விடலை. என் வேண்டுதல் பலிச்சிட்டுது'' என்ற படியே ''இந்தா சூடா காஃபி குடி'' என்று நீட்டினாள்.

''ஜோதி! காஃபி கேட்டது நான் மா'' என்றார் அப்பா.

''உங்களுக்கு வேற போட்டு எடுத்திட்டு வர்றேம்ப்பா. நீங்க சும்மாதானே இருக்கீங்க? கொஞ்சம் பொறுத்தா என்ன? தம்பி டயர்டா வந்திருக்கான்ல? அவன் முதல்ல குடிக்கட்டும்'' என்றாள். ஆச்சர்யமாக நிமிர்ந்தேன். ஜோதியின் கண்களின் கீழ் இதுவரையில் என் பார்வையில் பட்டிராத ஒரு கறுப்பு வளையம் தெரிந்தது.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் ஜோதி தன் வீட்டுக்குக் கிளம்பினாள். அவளிடம் எழுநூறு ரூபாய் கொடுத்திருந்தேன். என் முகத்திலோ அகத்திலோ வன்மமோ புகைச்சலோ சிறிதும் இல்லை.

❋ ❋ ❋

கங்கை